காளியண்ணப் புலவர்

இயற்றிய

# பூந்துறைப் புராணம்


பதிப்பாசிரியர்கள்

புலவர் செ. இராசு

டாக்டர் கா. அரங்கசாமி


769

காளியண்ணப் புலவர்

இயற்றிய

# பூந்துறைப் புராணம்


பதிப்பாசிரியர்கள்

புலவர் செ.இராசு, எம்.ஏ.,
இணைப்பேராசிரியர், கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

டாக்டர் கா. அரங்கசாமி, எம்.ஏ., பிஎச்.டி.,
தமிழ்த்துறைத் தலைவர், கோபி கலைக்கல்லூரி
கோபிசெட்டிபாளையம்



பூந்துறைப் புட்பவனநாதர் கோயில்
குடமுழுக்கு மண்டலாபிடேக
நிறைவுநாள் வெளியீடு
16.8.1990

முதல் பதிப்பு : தி.அ.முத்துசாமிக் கோனார் அவர்கள்
திருச்செங்கோடு, அக்டோபர், 1917.
இரண்டாம் பதிப்பு : 16.8.1990

ஈரோடு, ஸ்ரீ கிருஷ்ணா ரீஃபைனரீஸ் உரிமையாளர்
திரு. சி.கிருஷ்ணன் அவர்கள் பொருளுதவியால் இந்நூல்
பதிப்பிக்கப்பட்டது.

அச்சிட்டோர் : சர்மா சானடோரியம் பிரஸ்
(கணிப்பொறிப் பிரிவு), புதுக்கோட்டை

பூந்துறைப் புராணத்தின் முதல் பதிப்பு

திரு. கு. வெ. கருப்பணகவுண்டர்

திரு. எஸ். துரைசாமிக்கவுண்டர்

மற்றும்

காடகுலப் பெருமக்களால்

வெளியிடப்பெற்றது.

திரு. சி. கிருஷ்ணன் அவர்களது

தந்தையார் திரு. மு. சின்னப்ப கவுண்டர்

தாயார் திருமதி எளையம்மாள்

அண்ணன் திரு. சி. துரைசாமி

ஆகியோரின் மலரடிகளில்

இந்நூலைப் படைக்கின்றோம்.



திரு. மு. சின்னப்ப கவுண்டர்



திருமதி. எளையம்மாள்



திரு. சி. துரைசாமி

# முன்னுரை

## கொங்கு நாடு

பெரும்பாலை மலையை வடக்கிலும், குளிர்தண்டலை என்னும் குளித்தலையைக் கிழக்கிலும், வைகாவூர் என்னும் பழனிமலையைத் தெற்கிலும், வெள்ளியங்கிரி மலையை மேற்கிலும் எல்லையாக உடையது கொங்கு நாடு. சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடுகளுடன் கொங்கு நாட்டையும், தொண்டை நாட்டையும் சேர்த்துத் தமிழ்நாடு ஐந்து பிரிவுகளை உடையது என்பதைத் தண்டியலங்கார மேற்கோள் பாடலும், திருமந்திரமும் விளக்குகின்றன.

கொங்கு நாடு பற்றிய பல குறிப்புக்கள் சங்க நூல்களில் இடம் பெற்றுள்ளன. கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், ஓலைப்பட்டயங்களும், தனிப் பாடல்களும், இலக்கியங்களும் கொங்கு நாடு தனித்த பகுதி; தனியான நாகரிகம், பண்பாடு, கலை, வரலாறு உடையது என்பதை விரிவாகக் கூறுகின்றன. இக் கொங்குநாட்டு மக்கள் கொங்கர் எனப்பட்டனர்.

## 24 பிரிவுகள்

இப் பழம்பெரும் கொங்குநாடு, தென் கொங்கு, வட கொங்கு, மேல் கொங்கு (மீ கொங்கு, குட கொங்கு), கீழ் கொங்கு (மழகொங்கு) என்ற நான்கு பெரும் பகுதிகளாகவும், 24 உள் நாடுகளாகவும் பிரிக்கப்பட்டிருந்தது.

அவை பூந்துறைநாடு, தென்கரைநாடு, காங்கேயநாடு, பொன்கலூர்நாடு, ஆறைநாடு, வாரக்கநாடு, திருவாவிநன்குடி நாடு, மணநாடு, தலையநாடு, தட்டயநாடு, பூவாணிநாடு, அரையநாடு, ஒடுவங்கநாடு, வடகரைநாடு, கிழங்குநாடு, நல்லுருக்காநாடு, வாழவந்திநாடு, அண்டநாடு, வெங்காலநாடு, காவடிக்காநாடு, ஆனைமலைநாடு, இராசிபுரநாடு, காஞ்சிக் கோயில்நாடு, குறுப்புநாடு என்பனவாகும். இப்பிரிவுகள் கி.பி. ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பே தோன்றின என்பது சுந்தரர் தேவாரத்தால் விளங்கும்.

பிற்காலத்தில் காடுகொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கிப் புதியபுதிய நிலப்பகுதிகள் கொங்கில் தோன்றிய போது இந்நாடுகள் தொகை பெருகின. 'இராமபத்திரன் பட்டயம்' கொங்குநாடு 42 உட்பிரிவுகளைப் பெற்றிருந்தது என்று கூறுகிறது.

இருபத்துநான்கு பிரிவுகளைக் கூறும் பழம்பாடல்,

சொல்லஅரி தானபூந் துறைசைதென் கரைநாடு
தோன்றுகாங் கேயநாடு
தோலாத பொன்கலூர் நாடுதிகழ் ஆறைஅணி
தோய்ந்தவா ரக்கநாடு

வல்லமை செறிந்ததிரு வாவினன் குடிநாடு
மணநாடு தலையநாடு
வரதட்டை பூவாணி அரையநா டொடுவங்கம்
வடகரை கிழங்குநாடு

நல்லுருக் காநாடு வாழவந் தியும்அண்ட
நாடுவெங் காலநாடு
நாவலர்கள் சொல்கா வடிக்காநாடு ஆனைமலை
இராசிபுர நாடுநிதமும்

இல்லறம் வளர்ந்துதவி மல்குகாஞ் சிக்கோயில்
இயல்செறி குறுப்புநாடு
இனியபுகழ் சேர்கொங்கு மண்டலந் தனில்ஆன
இருபத்து நான்குநாடே!

என்பதாகும்.

## பூந்துறைநாடு

கொங்கு நாடு 24 நாடுகளில் வரலாற்றுச் சிறப்பு மிக்கதும், தொன்மையானதும் பூந்துறை நாடு ஆகும். அண்மையில் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல் துறையினரால் கண்டு பிடிக்கப்பட்ட பிடாரியூர் திருப்பிராட்டியம்மன் கோயில் அர்த்தமண்டப நிலைகால் கல்வெட்டு இப்பூந்துறை நாட்டைப் 'பழம் பூந்துறை நாடு' என்று சிறப்பித்துக் கூறுகிறது.

## பூந்துறை நாட்டு எல்லை

பூந்துறை நாடு காவிரியை மையமாக வைத்து மேல்கரைப் பூந்துறைநாடு, கீழ்க்கரைப் பூந்துறைநாடு என இரண்டாகப் பிரிக்கப்பட்டது.

மேல்கரைப் பூந்துறைநாடு தெற்கில் காஞ்சி எனப்படும் நொய்யலாற்றையும், மேற்கில் சென்னிமலையையும், வடக்கில் வானி எனப்படும் பவானியாற்றையும், கிழக்கில் பொன்னி எனப்படும் காவிரியாற்றையும் எல்லையாக உடையது. இதனை இப்பூந்துறைப் புராணம் திருநாட்டுச் சருக்கம் 28ஆம் பாடலால் அறியலாம். இந்நாட்டுப் பிரிவுகள் சென்ற நூற்றாண்டுவரை

ஆவணங்களில் பதியப்பெற்றன; இன்றும் மக்கள் வழக்காற்றில் உள்ளன.

இப்பூந்துறைநாட்டு எல்லைகளைக் காப்பதற்குக் காங்கேய நாட்டுடனும், மற்றுமொருமுறை மேல்கரை அரையநாட்டுத் தலையநல்லூர் ஊராருடனும் பூந்துறைக் காட குலப்பெருமக்கள் பலர் இன்னுயிர் ஈந்து போரிட்டும், காய்ச்சிய மழுவைக் கையில் எடுத்தும் காத்துள்ளனர். இதனைப் பட்டயங்களும், தனிப் பாடல்களும் விளக்கமாகக் கூறுகின்றன.

## 32 ஊர்கள்

மேல்கரைப் பூந்துறை நாடு 32 ஊர்களைத் தன்னகத்தே கொண்டது. இம் முப்பத்து இரண்டு ஊர்களுமே மிகவும் தொன்மையானவை. அவை

| | |
|---|---|
| பூந்துறை | அறச்சலூர் |
| வெள்ளோடு | விளக்கேத்தி |
| நசியனூர் | சத்திமங்கலம் |
| எழுமாத்தூர் | சேமூர் |
| பிடாரியூர் | மங்கலம் |
| ஈங்கூர் | வீரகநல்லூர் |
| பெருந்துறை | ஈரோடு |
| சாத்தம்பூர் | பேரோடு |
| காளமங்கலம் | சித்தோடு |
| குழாநிலை | திண்டல்புதூர் |
| கிழாம்பாடி | இலவமலை |
| முடக்குறிச்சி | திருவாச்சி |
| அனுமன்பள்ளி | பனயம்பள்ளி |
| பழமங்கலம் | ஓடாநிலை |
| குலவிளக்கு | முருங்கைத்தொழு |
| காகம் | ஈஞ்சம்பள்ளி |

என்பனவாம். ஊர்த்தொகைப் பாடல் ஒன்று 32 ஊர்களையும் தொகுத்துக் கூறுகிறது. அப்பாடல்

பூந்துறைசை வெள்ளோடு நசியனூர் எழுமாதை
 புகழ்சேர் பிடாரிநகரம்
பூங்கமழும் ஈங்கியூர் பெருந்துறை சாத்தனூர்
 பொன்காள மங்கலமதும்

ஆய்ந்ததமிழ் கூறும் குழாநிலை கிழாம்பாடி
ஆண்மைகொள் முடக்குறிச்சி
அனுமநகர் பழமங்கை குலவிளக்குக் காகம்
அறச்சலூர் விளக்கேத்தியும்

வேந்தர்மகிழ் ஈஞ்சநகர் சத்திமங் கலமதும்
மிக்கசே மூர்மங்கலம்
வீரநகர் ஈரோடு பேரோடு சித்தோடு
மிக்கான திண்டல்புதூர்

சேர்ந்துமழை பெய்திடும் இலவமலை திருவாச்சி
திகழ்பனசை ஓடாநிலை
தென்முருங் கைத்தொழுவு முப்பத்தி ரண்டூர்
சிறந்தபூந் துறைசைநாடே!

என்பதாகும்.

## பூந்துறை - பெயர்க்காரணம்

புகழ்மிக்க பூந்துறைக்கு இப்பெயர் அமைந்தமைக்குப் பலவிதமான காரணங்கள் கூறுவர்.

அ) சங்க காலத்தில் 'புன்றுறை' என்ற வேளிர் தலைவனொருவன் கொங்குநாட்டில் வாழ்ந்ததாக அகநானூறு 44 ஆம் பாடல் கூறுகிறது. அப் புன்றுறை என்னும் தலைவன் வாழ்ந்த ஊர் அவன் பெயராலேயே 'புன்றுறை' என வழங்கிப் பின்னர் நாளடைவில் 'பூந்துறை' என மருவிற்று.

ஆ) 'பூந்துறை' என்பதே கொங்குநாட்டு வேளிர் தலைவன் பெயர். அப் பூந்துறை எனும் பெயரே 'புன்றுறை' என்று தவறாக இலக்கிய ஏட்டில் எழுதப்பட்டுவிட்டது.

இ) கொங்குநாட்டில் பழமையான நாடு இப் பூந்துறை நாடே. பழமையான இந்நாட்டில்தான் மக்கள் முதன்முதலில் புகுந்து உறைந்தனர். மக்கள் முதலில் 'புகுந்து உறைந்தநாடு' 'பூந்துறைநாடு' ஆயிற்று.

ஈ) பூக்கள் மலிந்த பற்பல வளமான துறைகளைப் பெற்றிருந்த காரணத்தால் பூ துறை பூத்துறை பூந்துறை ஆயிற்று. இக் கருத்தை 'மேழிவிளக்கம்' என்னும் நூல்.

'திந்திருணி மாஅரசு தேங்கமுகு வாழைபலா
வந்து குலைசாய்ந்து மடல்விரிந்து சிந்தினதால்

வாய்ந்தரச மொடுபெருகி வயல்அதனில் செந்நெல்விளை
பூந்துறைசை நாடு'

என்று கூறுகிறது.

உ) உமையின் தவத்தைப் போற்றி அருளவந்த சிவபெருமானின் திருமேனி பூவண்ணமாகத் தோன்றியதால் அவ்விடத்திற்குப் புட்பவனம் என்றும், இறைவனுக்குப் புட்பவனநாதர் என்றும் பெயராயிற்று. நாளடைவில் அப் பெயர் 'பூந்துறை' என்று ஊருக்கும் பெயராயிற்று.

இவற்றுள் ஏற்ற பெயரை நாம் கொள்ளலாம். இப்பூந்துறை நாட்டைத் தலைமையாகக் கொண்ட நாடு பூந்துறை நாடாயிற்று.

பூந்துறைசை, பூந்துறையூர் எனவும் இவ்வூர் அழைக்கப் பெறும். 'அட்டகோணப்பட்டணம்' என்றும் இவ்வூர்க்குப் பெயர் உண்டு.

## இலக்கியம் ஏத்தும் பூந்துறை

புகழ்மிக்க பேரூர் பூந்துறை. இலக்கியங்கள் பாடிய செந்தமிழ்ப் புலவர்கள் பலர் பூந்துறையைப் பல்வேறு வகையில் புகழ்ந்து பாடியுள்ளனர்.

'மேன்மைபெறு பூந்துறை'
'கோதுஇல் பூந்துறை
'விளங்கு பூந்துறை'
'இனிய பூந்துறை'
'சொல்ல அரிதான பூந்துறை'
'சிறந்த பூந்துறை'
'நாட்டில் உயர் பூந்துறை'
'பொன்மேவும் பூந்துறை'
'பூரணமாம் தாரணிசூழ் பூந்துறை'
'வாய்ந்த புகழ்ப் பூந்துறை'
'ஆதியாம் முந்தின பூந்துறை'
'நாலாறு நாட்டினில் மேலான பூந்துறை'
'நன்மைப் பூந்துறை'
'மெய்ப்புகழ்ப் பூந்துறை'
'துய்ய தமிழ்ப் பூந்துறை'
'பொன்னுலகோர் புகழ்ந்திடும் பூந்துறை'
'பூந்துறைநாடு அதிகம்எனப் புகன்றிட்டாரே'.

'நிலமகட்கு அணியாயது பூந்துறை'
'அன்ன சொன்னம் சொரியும் பூந்துறை'

என்றெல்லாம் வரும் பல இலக்கிய அடிகள் மூலம் பூந்துறையின் பெருமை நன்கு விளங்குகிறது.

எட்டுத் தண்டல், எட்டு மணியம் உள்ள பூந்துறை வரலாறு, இலக்கியச் சிறப்பு மிக்கதாகும்.

## பூந்துறை நாட்டின் சிறப்புக்கள்

சுமார் 2500 ஆண்டுகட்கு முற்பட்ட வரலாற்றுச் சின்னங்களையும், தொல்பழங்காலப் பெருமைகளையும் உடைய பழம் பெரும் நாடு பூந்துறைநாடு. காவிரி, பவானி, நொய்யல் ஆறுகள் சூழ்ந்த வளமார்ந்த நாடு. அனுமநதி தோன்றும் அழகியநாடு. மலைவளம் மிக்க மாண்புள்ள நாடு. ஆலயங்கள் செறிந்த அணிசேர் நாடு. சமணர்களையும் வாழவைத்த சமரச நாடு. சேரரும், சோழரும், பாண்டியரும், ஒய்சளரும், விசயநகரத்தாரும், நாயக்கரும், மைசூர் உடையார்களும் நல்லாட்சி புரிந்த நலமிகு நாடு. பாளையக்காரர் பலர் அதிகாரம் செலுத்திய நாடு. கலைச்செல்வமும், கல்வெட்டுக்களும், செப்பேடுகளும், பட்டயங்களும் உள்ள உயரிய நாடு.

புலவர்களைப் போற்றிய நாடு. அவர்கட்கு அடிமை என ஓலை எழுதித்தந்த நாடு. சமயக் குருக்களுக்குக் காணிக்கை செலுத்தி உடல், பொருள், ஆவியை அவர்க்கு நல்கிய பக்திமிகு நாடு. கோட்டைகள், பேட்டைகள் விளங்கியநாடு. காடழித்து நாடாக்கி மக்களைக் குடியேற்றிய தலைவர்கள் உலவிய நாடு. இல்லை எனும் சொல்லே இல்லாத நாடு பூந்துறைநாடு.

இவ்வூர்த் தலைவர்கட்கு மூவேந்தர் முடி சூட்டினர். சேரர் கோமானுக்கு இளவரசர்களைத் தந்த நாடு. அம்மை தவமிருந்து இடப்பாகம் பெற்ற நாடு. பொன்மாரி பூமாரி பொழிந்த நாடு. ஊனமுற்ற முடவர்களைக் காத்து ஆதரித்த நாடு. குடிபடைகட்கு வேண்டிய உரிமை கொடுத்த நாடு. போரிட்டு எல்லைகளைக் காத்த ஏற்றமிகு நாடு. மக்களுக்கு நல்லாட்சி அருளிய நலமிக்க நாடு பூந்துறை நாடு. பல்வளம் பெருகிச் செழித்துள்ள நாடு பூந்துறை நாடு.

## உயரிய ஊராட்சிமுறை

பூந்துறை, வெள்ளோடு, நசியனூர், எழுமாத்தூர் ஆகிய நான்கு ஊர்களும் முறையே பூந்துறை நாட்டுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது தலைநகரங்களாகும்.

'நற்கா விரிக்குமேல் கரைதனில் பூந்துறைசை
நளிர்கொண்ட வெள்ளோடையூர்
நசையனூர் எழுமாதை எனுமுயர் புகழ்பெரிய
நகரமொடு நான்கதாக'

என்பது சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழ் அடிகளாகும்.

32 ஊர்கள் கொண்ட பூந்துறைநாட்டுச் சபைக்குப் பூந்துறையின் சார்பில் 10 உறுப்பினர்கள் வெள்ளோடு, நசியனூர், எழுமாத்தூர்க்கு முறையே 8, 6, 4 உறுப்பினர்கள். இந்த நான்கு தலைநகர்கள் நீங்கலாக ஏனைய 28 ஊர்களுக்குத் தலா ஒவ்வொரு உறுப்பினர்கள். ஆக மொத்தம் 56 உறுப்பினர்கள் கொண்டது தான் பூந்துறைநாட்டுச் சபையாகும். இதனை இப்புராணம் மூலமாகவும் அறியலாம்.

பல கல்வெட்டுக்களில் 'பூந்துறை நாட்டோம்' என்ற தொடர்களைக் காணுகின்றோம். கொலை வழக்கைக்கூட இவர்கள் விசாரித்துத் தக்க தீர்ப்பளித்தனர். ஆலயங்கட்குப் பொன்னும், பொருளும், மானிய நிலங்களும் அளித்துச் சமய புரந்தரச் சக்கரவர்த்திகளாகத் திகழ்ந்தனர். புகழ்மிகும் சென்னிமலைப் பூசத்தேரைச் சிறப்புடன் நடத்தினர் - நடத்துகின்றனர். இந்நாட்டுச்சபை சமூக அமைப்பாகவும், நாடாளும் நல்லவையாகவும் நனிசிறந்து விளங்கியது.

## காணியாளர்

புகழ்மிகு பூந்துறை நாட்டின் தலைநகராம் பூந்துறையின் காணியாளர் கொங்கு வேளாளரில் காட குல்த்தினர். 'காட குலமேரு' என்று புலவர்கள் இவர்களைப் பாராட்டினர். 'காருலவும் இனிதான காடை குலர்' என்று இவர்களை வேளாளர் கீர்த்திப் பாடல் புகழ்கிறது. இன்னும் இவர்கள்

'சொல்லு ரண்டு உரையாதவர்'
'கற்றவர்க்கு உற்ற துணை'

என்றும் பாராட்டப் பெறுகின்றனர்.

'வண்மையுள்ள காடைகுலம்'
'அன்பு பெறும் காடைகுலம்'

என இவர்கள் காடகுலம் பாராட்டப்பெறுகிறது. காடகுலம் காடைகுலம் என்றும் சில இடங்களில் பயின்று வந்துள்ளது.

இவர்களை 'அரசர்' 'மன்னர்' 'காவலர்' 'சிந்தாமணி' 'தாரணி மதிக்கும் தண்டிகைத் துரை' என்று புலவர்கள் புகழ்ந்துள்ளனர். புலவர்களை ஆதரித்த புரவலர்களாகவும் இவர்கள் திகழ்ந்தனர்.

இவர்கள் 'அன்னக்கொடி' கட்டி ஏழையர்க்கும், இரவலர்க்கும், புலவர்கட்கும் வாரிவாரி வழங்கிய வள்ளல்தன்மை உடையவர்கள். 'தங்கப்பொன் தண்டிகை' பெற்று அரசு புரிந்தவர்கள். பேரரசர்களால் நன்கு மதிக்கப் பெற்றவர்கள். பல்வேறு கல்வெட்டுக்களிலும், செப்பேடுகளிலும் சாட்சிக் கையொப்பமிட்ட சால்புடையவர்கள். எங்கும் முதன்மையாக மதிக்கப் பட்டவர்கள். மேற்கண்ட எல்லாப் பெருமைகட்கும் இன்றும் உரியவர்களாகத் திகழ்கின்றனர்.

## சைவப்பற்று

சோழப்பேரரசன் இராசராசன் 'சிவபாதசேகரன்' என்று பெயர் வைத்துக் கொண்டது போலச் சிவபாத சேகரராக இவ்வூர்க் காட குலத்தினர் விளங்கினர் (தீபத்தம்ப சிற்பம்). திருஞானசம்பந்தர் தங்கி இறைபணியாற்றி அடியார் சுரநோயை நீக்கிய தலமான திருச்செங்கோட்டில் மடம் நிறுவிப் பலபணிகள் செய்தவர்கள் காட குலத்தினர். சுந்தரர் முதலையுண்ட பாலனை வரவழைத்த அவிநாசி மீது பற்றுக்கொண்டு அதனைக் காணி ஊராகச் கொண்டவர்கள். அவிநாசிக் கவுண்டர் என்று ஆடவர்களும், கருணாம்பிகை என்று பெண்களும் பெயர்கள் வைத்துக் கொள்ளுவது இயல்பு. சைவர்களின் புண்ணியத் தலமான காசியின் மீது பற்றுக் கொண்டு வாரணவாசிக் கவுண்டர் என்று பெயர் வைத்துக் கொண்ட காட குலத்தலைவர்கள் முன்பு இருந்தனர். இப்போதும் இப்பெயர்கள் வைத்துக்கொள்ளும் வழக்கம் உண்டு.

## பூந்துறைப் புராணம்

அழகுக்கு அழகு செய்வதுபோல் பூந்துறைக் காணியாளர்கள் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டிலிருந்து இங்கு

புலவர்வேண்டி அழைத்துவந்த காளியண்ணப் புலவர் அவர் களைக் கொண்டு 'பூந்துறைப் புராணம்' என்ற பெயரில் காவியம் ஒன்றை எழுதுவித்தனர். அதனை நல்ல நாளில் அரங்கேற்றிப் புலவர்க்குப் பெரும்பொருள் வழங்கினர். பூந்துறைப் புராணம் ஏட்டுச்சுவடியாக இருந்தது.

காடகுலத் தோன்றல்களான திருவாளர்கள் பூந்துறை துரைசாமிக் கவுண்டர், கருப்பணகவுண்டர் ஆகியோர் மற்றும் பிற பூந்துறைக் காணியாளர்களான காடைகுலப் பெருமக்கள் விருப்பத்திற்கேற்பத் திருச்செங்கோடு 'விவேக திவாகரன்' ஆசிரியர் பெரும்புலவர் தி.அ. முத்துசாமிக் கோனார் அவர்களைக் கொண்டு 1917 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் பூந்துறைப் புராணத்தை அச்சிட்டனர். இந்நூல் பாயிரம் உட்படப் பத்துச் சருக்கங்களையும் 228 பாக்களையும் கொண்டது.

29 - 6 - 1990 அன்று பூந்துறைச் சிவாலயக் குடமுழுக்கு விழாவில் 'பூந்துறை நாட்டுக் காடகூட்டக் கொங்கு வேளாளர் வரலாறு' நூல் (ஆசிரியர் டாக்டர் கா. அரங்கசாமி) வெளியீட்டு விழாவில் பூந்துறைப் புராணத்தின் பெருமைகளையும், அப் புராணம் இப்போது கிடைத்தற்கு அருமையாக இருப்பதையும் கூறக்கேட்ட இவ்வூர்க் காணியாளரும், காடகுலச் செம்மலும், ஈரோடு கொங்கு தொழில் நுட்பக் கல்லூரி, கொங்கு பொறியியற் கல்லூரிப் பொருளாளரும், அமரர் திரு சி. துரைசாமி அவர்களின் இளவலும், ஈரோடு ஸ்ரீகிருஷ்ணா ரீஃபைனரீஸ் உரிமையாளரும் ஆகிய திரு சி. கிருஷ்ணன் அவர்கள் இந்நூலைத் தாம் வெளியிட எல்லாவகையான ஏற்பாடுகளையும் செய்வதாகக் கூறினார்கள். அவ்விழாவில் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினரும் இப் பூந்துறைக் காணியாளரும் ஆகிய திரு அ. கணேசமூர்த்தி பி.ஏ.,பி.ஜி.எல்., அவர்கள் தலைமையில் சக்தி நிறுவனங்களின் தலைவர் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் அவர்கள், பழைய கோட்டைப் பட்டக்காரர் திரு ந. நல்லசேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அவர்கள், சென்னை ஜெம் நிறுவனத் தலைவர் திரு இரா. வீரமணி, அவர்தம் சகோதரர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பெரும் பொருட்செலவில் பூந்துறைச் சிவாலயத் திருப்பணியை மேற் கொண்ட உள்ளூர், வெளியூர்க் காடகுலப் பெருமக்கள் பலர் ஆர்வத்துடன் பெரும் திரளாகக் கூடியிருந்தனர். திருப்பணிக் குழுவினர் சிறந்தமுறையில் விரிவான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

திரு சி.கிருஷ்ணன் அவர்கள் விருப்பத்திற்கிணங்க நாங்கள் இருவரும் நூலாக்கப் பணிகளை மேற்கொண்டோம். இந்நூல் உருவாகத் தஞ்சை, தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டியல்

துறைத் தலைவர் பேராசிரியர் முனைவர் எ. சுப்பராயலு, அத்துறை விரிவுரையாளர் முனைவர் கா. இராசன், அரிய கையெழுத்துச் சுவடித்துறை விரிவுரையாளர் முனைவர் ம.சா. அறிவுடைநம்பி,ஓலைச்சுவடித்துறை முனைவர் வே. இரா. மாதவன் ஆகியோர் துணைபுரிந்தனர். அவர்கட்கு எங்கள் நன்றி.

ஓலைச்சுவடித்துறை ஆய்வாளர் புலவர் ப.வெ. நாகராசன் அவர்களிடம் பூந்துறைப் புராண ஏட்டுச்சுவடி ஒன்று இருந்தது. அதனையும் 1917இல் தி.அ. முத்துசாமிக் கோனார் அவர்கள் அச்சிட்ட நூலையும் ஒப்புநோக்கி சிறந்த பாடங்களாக உள்ளவை பதிப்புக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றன. பாடபேதங்களிலும், பாக்களிலும் ஏற்பட்ட ஐயங்களைப் போக்கி அருஞ்சொற் பொருள் எழுதத் தமிழ்ப்பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை புலவர் ப.வெ. நாகராசன் அவர்கள் மிகவும் துணையாக இருந்தார்கள். அவர்கட்கு எங்கள் நன்றி உரியதாகும்.

பாக்களை எல்லோருக்கும் நன்கு விளங்கும்வண்ணம் எளிய சந்திகளாகப் பிரித்து அச்சிட்டுள்ளோம். அருஞ் சொற்பொருளும், ஆசிரியர் வரலாறும், புராணச் சுருக்கமும் தரப்பெற்றுள்ளன.

பூந்துறை நாட்டின் புகழ்மிகு ஊர்களில் முதல் இரண்டு ஊர்களுக்கும் உரிய காணியாளர்களாகிய நாங்கள் இருவரும் இப் பூந்துறைப் புராணம் என்னும் அழகிய இந்நூலைப் பதிப்பிக்கும் பேறு பெற்றமைக்குப் பெரிதும் மகிழ்கின்றோம்.

இந்நூல் எவ்வாறு வெளிவரவேண்டும் என்று ஆர்வத் துடன் எழுத்துப்படியைப் பார்வையிட்டுத் தக்க அறிவுரைகள் கூறியதுடன், நூல்வெளியிடும் பொருட்செலவு முழுவதையும் ஏற்றுக் கொண்ட ஈரோடு ஸ்ரீ கிருஷ்ணா ரீஃபைனரீஸ் உரிமையாளர் திரு சி. கிருஷ்ணன் அவர்கட்கு எங்கள் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

இந்நூலைச் சிறந்த முறையில் அச்சிட்ட புதுக்கோட்டை சர்மா சானடோரியம் அச்சகத்தார்க்கும், அட்டையைத் தயாரித்த மதுரை அருட்பா அச்சகத்தாருக்கும், நண்பர் சா. திருமாவளவன் அவர்கட்கும் எங்கள் நன்றி உரியதாகுக. வணக்கம்.

இங்ஙனம்,
செ. இராசு,
கா. அரங்கசாமி,
பதிப்பாசிரியர்கள்.

பூந்துறை,
16.8.90.

# காளியண்ணப் புலவர் வரலாறு

கீழ்க்கரைப் பூந்துறைநாட்டின் தலைமை ஊராகிய திருச்செங்கோட்டை அடுத்து விளங்கும் மண்டகப்பாளையம் என்னும் ஊரில் வாழ்ந்த செம்புக்காளி பிள்ளை அவர்களுக்கு மகனாகப் பிறந்தவர் காளியண்ணப் புலவர். பூர்வீகம் கரிச்சிபாளையம் ஆகும். கருணீகர் மரபைச் சேர்ந்தவர். இளம் வயதில் படிப்பில் அதிகம் அக்கறை காட்டாமல் விளையாட்டில் ஆர்வம் காட்டிவந்தார். இருப்பினும் கற்றறிந்த புலவர்களையும், சமய இலக்கியச் சொற்பொழிவாளர்களையும் கண்டால் அகலாமல் அவர்களுடனே இருந்து அவர்கட்கு வேண்டிய பணி விடைகளை மிகவும் விருப்பமாகச் செய்வார். திருச்செங்கோடு அர்த்தநாரீசுவரர்மீது மிகுந்த பக்தி செலுத்தியவர்.

குலத்தொழிலாகிய கிராமக் கணக்கு எழுதும் தொழிலில் அதிகம் ஆர்வம் காட்டாததால் உற்றார் உறவினர்களின் மதிப்பை இளமையில் இவர் பெறவில்லை. திருச்செங்கோட்டில் பெரும் புலவராக விளங்கிய சிற்றம்பலக் கவிராயரிடம் இலக்கண, இலக்கியங்களை முறையாகப் பாடங்கேட்டார்.

பின்னர்த் தஞ்சாவூர் மாவட்டம் திருவாவடுதுறை சென்றார். அங்கு ஆதீனத் தலைவர் அவர்களைச் சந்தித்து ஆசிபெற்று அங்கு பெரும் புலமைபெற்று விளங்கிய இலக்கணம் வேலாயுத சுவாமிகளிடம் தொல்காப்பியம் முதலிய இலக்கண நூல்களைப் பாடம் கேட்டார். இலக்கணம் வேலாயுத சுவாமிகளை வேலப்பதேசிகர் என்றும் அழைப்பர். காளியண்ணப் புலவர் பொருள் ஆழத்துடன் விரைந்து கவிபாடும் ஆற்றல் பெற்றார். புலமைத்திறமும், இனிய குணங்களும் பெற்று விளங்கினார்.

புலவர்களை ஆதரித்த பூந்துறையில் அப்போது சிறந்த புலவர்கள் இல்லாதிருந்தனர். பூந்துறை காடகுலச் செம்மல் வாரணவாசிக் கவுண்டர் அவர்கள் திருவாவடுதுறையில் கல்வி கற்று மண்டகப்பாளையம் திரும்பிய காளியண்ணப் புலவரைச் சந்தித்தார். அவர் புலமையைச் சோதிக்க விரும்பிப் புலவரிடம் காளி என்று தொடங்கிக் கூளி என முடியும்வண்ணம் வெண்பா ஒன்று பாடுமாறு பணித்தனர். உடனே காளியண்ணப் புலவர்,

'காளி முரன்று கறங்கிவளர் பூந்துறைசை
வாளபிமன் வாரண வாசிமன்னன்– கேள்வியினால்

பொன்னனையீர் ஆனேன் பொறாமயலுக்கு
என்செய்வேன்
என்னுள்ளம் வெவ்வியகூ ளீ'

என்ற வெண்பாவைப் பாடினார். பூந்துறை வாரணவாசிக் கவுண்டர் மிகவும் மகிழ்ந்து காளியண்ணப் புலவரைப் பூந்துறைக்கு அழைத்துவந்து அவரைப் பூந்துறை நாட்டுப் புலவர் ஆக்கி வீடும் விளைநிலமும் கொடுத்து ஆதரித்தனர்.

காளியண்ணப் புலவர் தங்க, தொட்டிபாளையத்தை அடுத்துக் குடியிருப்பு ஏற்படுத்தப்பெற்றது. அது ஊராகப் பெருகித் திருஞான சம்பந்தபுரம் என்னும் பெயரைப்பெற்றது. இன்றுகூட மக்கள் பல தொட்டிபாளையம் இருக்கும் காரணத்தால் பூந்துறைத் தொட்டிபாளையத்தைப் புலவன் தொட்டிபாளையம் என்று கூறுகின்றனர். காளியண்ணப் புலவருக்கு சுமார் 80 ஏக்கர் பூமிகள் கொடையாக அளிக்கப் பெற்றன. இன்று அவர் வாரிசுகளாக 5 குடும்பத்தினர் பல ஊர்களில் உள்ளனர். திருஞானசம்பந்தபுரத்தில் கே. பாலசுப்பிரமணியம் என்பவர் வாழ்ந்துவருகிறார். அவர் தாத்தா கந்தசாமிப்பிள்ளைவரை பரம்பரையில் பலர் புலவராக வாழ்ந்துள்ளனர்.

அக்காலத்தில் காங்கேய நாட்டில் பெரும்புலவராக விளங்கிய மடவிளாகம் இலட்சுமண பாரதியாரிடம் காளியண்ணப் புலவர் மிகுந்த நட்புக் கொண்டிருந்தார். இருவரும் அடிக்கடி சந்தித்துப் புலமை தோன்ற உரையாடி மகிழ்வார்கள்.

பழையகோட்டைப் பட்டக்காரர் நல்லசேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அவர்களிடம் கவித்திறம் காட்டி அவர்களால் பொன்னும் பொருளும் அளிக்கப்பெற்றார்.

பழையகோட்டைப் பட்டக்காரர் அவர்களால் அனுப்பப் பெற்று மதுரை சென்று அங்குள்ள திருஞானசம்பந்தமூர்த்திகள் திருமடத்தின் தலைவர் அவர்களைக் கண்டு அவர்கள் நடாத்திய கவிச்சோதனைகளில் வென்று சுவாமிகளின் அன்பைப் பெறறு அவர்கள் விருப்பப்படி சிலநாள் திருமடத்தில் தங்கியிருந்தார். சுவாமிகளிடம் விசேட தீட்சைபெற்று உடையவரை எழுந்தருள்வித்துப் பூசனைசெய்யும் பேறு பெற்றார். மீண்டும் பூந்துறைக்குத் திரும்பி வந்தார்.

குமரமங்கலம் மிட்டாதார் செங்கோட்டு வேலப்ப கவுண்டர் அவர்களைச் சந்தித்துப் பாராட்டுப் பெற்றார். பின் வேளுக்குறிச்சி மிட்டாதார் சுப்பராயக்கவுண்டர் அவர்களிடம்

சென்றார். அப்போது சுப்பராயக்கவுண்டர் பல பெருமக்களுடன் கூடியிருந்தார். காளியண்ணப் புலவர்,

'இருமடந்தை நண்பன் இராசை வளநாடன்
அருவிழியன் வேள்குறிச்சி யாளன்-பரஞ்சேர்
வழிவே லவன்பேரன் வாள்நஞ்ச யன்சேய்
எழில்சுப்ப ராயன் எவன்'

என்று பாடவே சுப்பராயக் கவுண்டர் எதிர்கொண்டு அழைத்து உபசரித்தார். புலவரவர்கள்,

'சிந்தைமகிழ்ந் திடும்மைசூர்ச் சமஸ்தா னத்தில்
செயவில்லை; கம்பெனியார் செய்ய மாட்டார்;
அந்தமிகு செஞ்சிதஞ்சா வூர்கோ டற்கோ
அரசில்லை; சேதுவுக்கோ ராணிப் பட்டம்;
வந்தஎட்ட யாபுரத்தில் பேட்டி இல்லை
மற்றவர்க்கோ கொடைகொடுக்க வளம்போ தாது
செந்தமிழ்க்கு வேள்குறிச்சி ஒன்றே அல்லால்
செய்யுதற்கே வேறிலைமுச் சகத்தில் தானே!

என்று பாடினார். வேள்குறிச்சி மிட்டாதார் விருப்பத்திற்கிணங்க அங்கேயே பலதிங்கள் தங்கி அவர்களைத் தம் புலமையால் மகிழ்வித்தார்.

கொக்கராயன்பேட்டை மிட்டாதார் பெரிய ரங்கைய கவுண்டர் அவர்களைக் கண்டு,

'மெலிந்தபல சினகரமும் மதிலுமெழில் மண்டபமும்
விளக்கி, இந்து
மலிந்தமுடி அரன்அரியெண் பந்தனநல் திருஉருவு
மாதேர் கண்டு,
பொலிந்தபல சமயமுதி யோர்உறவு கொண்டு, சைவப்
புனிதத் துள்ளம்
வலிந்தமுள சைப்பெரிய ரங்கயநின் நடைநோக்கி
மகிழ்கின் றேனே'

என்பது முதலாய பல பாக்கள் பாடிச் சிலநாள் இருந்து மிட்டா மானியமாக நிலம் அளிக்கப் பெற்றார். அப்பகுதியில் இருந்த வேறு மிட்டாதார்கள் சிலரிடமும் பாடிப் பரிசிலும் நிலங்களும் பெற்றார். தமிழகமெங்கும் நன் மதிப்பைப் பெற்றார்.

வெள்ளோடு சாத்தந்தைகுலப் பெருமக்களால் ஆதரிக்கப் பட்டுக் கொன்றை வேந்தன் வெண்பா என்னும் நூலை வெள்ளோடு முத்துத் திருமலைக் கவுண்டர்மீது பாடினார்.

கொன்றை வேந்தன் மாலை என்னும் நூலையும் இவர் இயற்றியுள்ளார்.

இளமைக்காலத்தில் வரலாற்று ஆவணங்கள் தொகுத்த மெக்கன்சியின் உதவியாளர்களுக்குப் பல உதவிகள் செய்துள் ளார். அக்காலத்திலேயே சேர சோழ பாண்டிய மூவேந்தர்கள் பட்டியல் தொகுத்து மெக்கன்சிக்கு அனுப்பியுள்ளார்.

பின்னரும் வேளுக்குறிச்சி சென்று அங்கிருந்த புளியங்குடி முத்துவீரக் கவிராயர், வலங்கைப்புலிக் கவிராயர், இன்பக் கவிராயர், மாம்பழக் கவிராயர் முதலிய பல புலவர்களுடன் கூடி அளவளாவி மகிழ்ந்திருந்தார். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் முதுமைப் பருவத்தில் வாழ்ந்த இவர் வேளுக்குறிச்சியிலேயே சிவபெருமான் திருவடியை அடைந்தார்.

காளியண்ணப் புலவர் வாழ்ந்த சிறப்புமிகு ஊராகிய திருஞானசம்பந்தபுரத்தையும் காளியண்ணப் புலவர் வரலாற் றோடு தொடர்பு கொண்ட இடங்களையும் பார்வையிடப் பூந்துறை அருள்மிகு புட்பவனேசுவரர் கோயில் திருப்பணிக் குழுவினர் 29.7.90 அன்று பார்வையிடத் தக்க ஏற்பாடுகளைச் செய்து உதவினர்.

காளியண்ணப் புலவர் பற்றித் திருவாவடுதுறை ஆதீனம் பொன்னம்பல சுவாமிகள் இயற்றிய பாடல்

'வேதமுனி குன்றுறைந்தான் மெய்ச்சேடன்
மண்சுமந்தான்
மாதுவிதி நாவில் மறைந்திருந்தாள்-ஏதமிலா
ஆழிசூழ் பூந்துறைநாட்டு அண்ணல் தமிழ்க்குஅதிபன்
காழியண நாவலனைக் கண்டு'.

## பூந்துறைப் புராண வசனம்

### புராண வரலாற்றுச் சருக்கம்

நைமிசாரணியத்திலே தவம் இயற்றும் முனிவர்கள் பலர் சூழ்ந்திருந்தனர். அப்போது சூத முனிவரை நோக்கிச் சவுனகரும் மற்ற முனிவர்களும் உலகில் உயிர்வர்க்கங்கள் தங்கள் பாவங்களைப் போக்கிக்கொள்ளவும், வேண்டிய வரங்களைப் பெறவும் தகுதிசிறந்த ஒரு புண்ணியத் தலத்தைச் சொல்லியருள வேண்டுமென்று வேண்டினர்.

அப்போது சூத முனிவர் புன்முறுவல் பூத்து "தவ முனிவர்களே! நீங்கள் கேட்டது நல்ல கேள்வி. இதனை ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டியது நல்லது; ஆதலின் அதனைச் சொல்லுகிறேன்.

உலகில் எவ்வளவோ புண்ணியத் தலங்கள் உள்ளன. அதில் 1008 தலங்கள் விசேடமானவை. அதனுள் 108 தலங்கள் மிகச் சிறந்தவை. இன்னும் சிந்தித்தால் எட்டும், அதிலும் ஐந்தும் மிகமிகச் சிறப்புடையவை. உலகில் எத்துணையோ தேவர்கள் இருக்க சிவபிரான் மட்டும் எப்பொழுதும் அழிவில்லாமல் விளங்குகிறார் அல்லவா? அதுபோலச் சத்திசிவம் பிரிவு இல்லாது ஒன்று என்றால் ஒன்றாய், இரண்டு என்றால் இரண்டாய், விளங்குகின்ற ஒப்பற்ற தலம் ஒன்று உலகில் உண்டு. அது தமிழ்நாட்டில் கொங்கு நாட்டில் உள்ளது. அதனைப் பூந்துறைநாடு என்பார்கள்.

பூந்துறை நாடு ஒன்று; கரை இரண்டாகும். கீழ்க்கரை, மேல்கரை எனக் கரை இரண்டு என்றாலும் ஒன்றிப் பார்க்கும் போது இரண்டும் ஒன்றாகவே விளங்கும். அந்நாட்டில்தான் சத்தியும் சிவமும் பேதமில்லாமல் ஒன்றாக உள்ளது. பூந்துறை நாட்டுக்குச் சமமான நாடு வேறு இல்லை. எல்லா நாட்டையும்விடப் பூந்துறைநாடு உயர்ந்தது. பார்வதி தேவியார் எத்துணையோ கோடி காலம் தவம் செய்தும் கிடைக்காத இடப்பாகம் அந்நாட்டிலேதான் கிடைத்தது.

அர்த்தநாரீசுவரராக எழுந்தருளியுள்ள அவர் திருப் பெயரை உச்சரித்தாலும், நினைத்தாலும் பெரும் புண்ணியம் கிடைக்கும். அங்கு வழிபட்டோரும், வசிப்பவரும் அடையும் பயனை எடுத்துரைக்க இயலாது" என்று சூத முனிவர் கூறி முடித்தார்.

முனிவர்கள் அனைவரும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து பூந்துறைநாடு உள்ள திசையை நோக்கி வணங்கினர். சூத முனிவ்ரிடம் பார்வதி தேவியார் இடப்பாகம் பெற்ற வரலாற்றைக் கூறுமாறு வேண்டினர். சூத முனிவர் ஐந்தெழுத்தை உச்சரித்துச் சொல்லத் தொடங்கினார்.

## உமைதவச் சருக்கம்

பொன்மயமான மேருமலையில் வெள்ளி மயமாக உள்ளது கைலாயகிரி. அங்கு அமரர், கின்னரர், கருடர், காந்தருவர், இயக்கர், வித்தியாதரர், முனிவர்கள் ஆகியோர் ஓதும்

வேத முழக்கம் நிறைந்து விளங்கும். எட்டுத்திக்குப் பாலகர் அங்கு வந்து வணங்குவர்.

அங்குள்ள செம்பொற் கோயிலில் நவரத்தின சிம்மா சனத்தில் இடப்பாகத்தில் உமாதேவியர் விளங்க தேவர்கள் முதலியவர்களுக்குக் காட்சிகொடுக்கும்பொருட்டுச் சிவபெருமான் வீற்றிருந்தனர். மிகுதியான கூட்டத்தை நந்தி தேவர் பொற் பிரம்புகொண்டு சந்நிதி விலக்கினார்.

தேவர்கள் சிவபெருமானை வணங்கினர். பிரமதேவன் வேத மந்திரத்தால் அர்ச்சித்தார். அதில் சந்திரன், சூரியன், அக்கினி சிவனுடைய முக்கண்கள் என்று கூறப்பட்டது. அப்போது சிவபெருமான் முழுமுதற்கடவுள் என்பதைக் காட்டும் பொருட்டும், தமிழ்நாடும், கொங்குநாடும், குறிப்பாகப் பூந்துறையும் சிறப்புடையது என்று காட்டும் வண்ணம் உமாதேவியார் சிவபெருமானின் கண்களை மூடினார்.

உலகில் இருள் மூழ்கியது. சந்திர சூரியர் ஒளியிழந்தனர். ஒரு பொருளும் கண்களுக்குத் தெரியவில்லை. உயிர் வர்க்கங்கள் குருடாயின. தேவர், முனிவர் பணிகள் நின்றன.

இதைக்கண்ட உமாதேவியார் பயந்து கைகளை எடுத்துத் தான் தவறு செய்து விட்டதாகவும் மன்னிக்குமாறும் வேண்டினார். தென்நாடு சென்று தவமியற்றுமாறு சிவபெருமான் கூறினார்.

உமாதேவியார் காஞ்சிபுரத்தில் கம்பையாற்றங்கரையில் மணலால் சிவலிங்கம் செய்து வழிபட்டார். மூன்று கண்களில் ஒரு கண்ணை மூடிய பாவம் இதனால் நீங்கிற்று என்று சிவபிரான் தோன்றிக் கூறினார். இன்னும் இரண்டிடங்களில் தவம்செய்ய வேண்டுமென்றும் முதலில் திருவண்ணாமலையில் அக்கினி யிலிருந்து தவம்செய்ய சிவபெருமான் வேண்டினார்.

அவ்வாறே பல சத்திகள் சூழ உமாதேவி திருவண்ணா மலையில் தவம் இருந்தார். சிவபெருமான் நேரில் தோன்றி 'முன்பு வாதாபி முதலிய அரக்கர்கள் தோன்றி மனிதர்களை வதைத்தனர். அப்போது சம்பு முனிவர் யாகத்தில் ஒரு அரசன் தோன்றினார். அவனே அக்கினிகுலச் சேர அரசன். வாதாபி முதலிய அரக்கர்களை வென்று அவன் அரசுபுரிந்தான். அச்சேரனுக்குரியது கொங்கு மண்டலம். அங்கு உள்ள மேலான பூந்துறை நாட்டில் சங்கவனத்தில் தவம் செய்' என்று கூறினார்.

சத்திகள் பலரோடு பூந்துறைக்கு வந்த உமாதேவி உடன் வந்த விநாயகப் பெருமானிடம் நீராடத் தடாகம் ஒன்று அமைக்குமாறு கூறினார். உமாதேவியின் ஒரு வாக்கால் உருவானதுதான் பூந்துறை ஒருவாய்க்கிணறு. எல்லோரும் அங்கு நீராடினர். உமாதேவியார் வெயிலில் சங்கவனத்தில் தவமிருந்தார்.

அப்போது தேவலோகத்தில் தேவேந்திரன் கொலு வீற்றிருந்தான். அரம்பை, மேனகை, ஊர்வசி போன்ற தேவமாதர் நடனம் ஆடினர். அப்போது தேவகுரு வியாழ பகவான் அங்கு வந்தார். அவரை வணங்காத அரம்பை ஊர்வசி என்னும் தேவமாதர் இருவரையும் பூந்துறை நாட்டில் முத்தமா நகரில் முத்தி என்னும் தாசி வயிற்றில் இரட்டைப் பெண்களாகப் பிறக்கச் சபித்தார். அவர்களிருவரும் வணங்கி 'தேவரீர் எழுந்தருளியதை நாங்கள் கவனிக்கவில்லை; மன்னிக்க வேண்டும்' என்று வேண்டினர்.

அப்போது வியாழ பகவான் 'நங்கையீர், நீங்கள் தாசிகளாய்ப் பிறந்து பார்வதி தேவியாரை வணங்கிப் பனிரண்டு ஆண்டுகள் இருந்தால் அயிராவதம் ஏறி இந்திரன் வந்து பொன்மாரி பூமாரி பொழிந்து உங்களை மணப்பான்; நீங்கள் தேவ சரீரத்துடன் விண்ணகம் செல்லலாம்' என்றார். அவ்வாறே பூமியில் தோன்றிய அவர்கள் பார்வதி தேவியாரை வணங்கி வாழ்ந்தனர்.

பிரமன் முதலிய தேவர்கள் கைலாயகிரி சென்று சிவபெருமானை வணங்கிச் சலந்தராசுரனை வெல்லத்தக்க ஆயுதங்கள் அளிக்க வேண்டினர். சிவபெருமான் தான் திக்குவிசயம் செய்வதாகக் கூறினார்.

சலந்தராசுரன் பெரிய வரங்களைப் பெற்றோம் என்ற செருக்கால் தேவர்களை வதைத்தான். அடியார்க்கு எளியவனாகிய சிவபெருமான் பார்வதி தேவியார்முன் தோன்றினார். பலவாறு மொழிகூறி வணங்கிய பார்வதி ஆனந்தக் கண்ணீர் சொரிந்து 'சுவாமி அடியாள் வேறாகவும் தாங்கள் வேறாகவும் இருப்பதால் அன்றோ பல ஆண்டுகள் பிரிந்து தவம் செய்யவேண்டியிருந்தது. இடப்பாகம் வேண்டுகிறேன்' என்றார்.

சிவபெருமான் பார்வதி தேவியாரின் தவத்தை மெச்சி இடப்பாகம் கொடுக்க அருள்புரிந்தார். பின் 'கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் நாககிரி என்னும் திருச்செங்கோட்டில் தேவதீர்த்தமும் அதில் பொன் தாமரையும் உள்ளது; அங்கு

இருபத்தோராயிரம் ஆண்டு தவம் செய்தால் அர்த்தபாகம் அருளுவோம்' என்றார்.

பார்வதி நாககிரி சென்று தேவ தீர்த்தத்தில் நீராடிப் பூமேல் தவம் இருந்தார். தேவர்கள் வணங்கினர். பரமசிவன் தோன்றி அர்த்தபாகம் வழங்கி அர்த்தநாரீசுவரர் என்னும் பெயர்கொண்டு விளங்கினர்.

## சலந்தராசுரச் சருக்கம்

பெண்களின் பூப்பைப் போலவும், கடலின் உப்பைப் போலவும் சோழநாட்டு இற்குடியில் சலந்தராசுரன் என்பான் இருந்தான். அவன் தேவர்களைச் சிறையில் வைத்தான். அறத்தை அறியான். மூவுலகை ஆள்வான். பெண்களைக் கண்டால் தவறான நோக்கம் கொள்வான். அவனைச் சண்டாளன் எனலாம். ஏழு கடலைக் காலால் கலக்குவான். ஏழு மேகங்களைக் கையால் பிசைவான்; குடிப்பான். ஏழு மலைகளைப் பந்தடிப்பான். அட்டதிக்கு பாலகர்களைப் பிசைந்து பொடியாக்குவான். உலகினர் அவனுக்குப் பயந்து பணிவிடை செய்தனர்.

அவனிடம் கொலை, பொய், களவு குடிகொண்டிருந்தது. கலை, வேதம் கற்றாரைத் துன்புறுத்துவான். சந்திர, சூரியர், முனிவர் இவனை நெருங்கார். இவன் கொடுமையைத் தீர்க்கவேண்டும் என்று தேவர்கள் பரமசிவன்பால் வேண்டினர்.

பூதகணங்கள் இற்குடியைச் சூழ்ந்தனர். அப்போது சலந்தராசுரன் இடக்கண்களும், தோள்களும் துடித்தன. இதைக் கேட்ட அமைச்சர்கள் வெற்றியும் வீரமும் செல்வமும் விருதும் அழிந்து போகும் போது இப்படித் தோன்றுமென்றனர்.

அப்போது நந்திகேசுவரர் ஒரு தூதுவனாகச் சிவபெருமானின் திருமுகத்தைக் கொண்டுவந்து நீட்டினார். அப்போது அசுரன் 'தூதா நீ எந்த ஊர்? உன் பெயர் என்ன? உனது அரசன் யாவன்?' என்றான்.

திருமுகத்தை வாசித்த அமைச்சன் போர் தொடங்குவதே சரியென்றான். அதனை நந்திகேசுவரர் சிவபெருமானுக்கு அறிவித்தார்.

விடைக்கொடியை உடைய சிவபெருமான் நந்திகேசுவரருக்கு வெற்றி அபிடேகம் செய்து பூத, பிசாசு சேனைகள் ஆயிரத்து ஐநூறு வெள்ளம் அளவும் அதை விட இருமடங்கு

ஆயுதத்துடனும் நெருங்கினர். இதற்கு இரட்டிப்பாக அசுர சேனைகளும் வந்தன.

பெரும்போர் மூண்டது; பிணமலை குவிந்தது. சலந்தரா சுரன் கலங்கினான். அசுரப் பெண்கள் அழுது புரண்டனர். சலந்தராசுரன் தன் மூலபல சேனைகளையெல்லாம் வரவழைத்துத் தன் வீரர்கள் பலர் மடிந்து போனதையும் எதிரியின் பலத்தையும் கூறிச் சமாதானம் செய்து கொள்ளலாமா ? யுத்தம் நடத்த லாமா ? என்று கேட்டான்.

அவர்கள் 'அசுரர்களுக்கு வெற்றியே முக்கியம். வெற்றி அல்லது வீரமரணமே மேல்' என்றனர். 'பணிவது இழிவு' என்றனர். அதனைக் கேட்ட சலந்தராசுரன் போர்க்கோலம் புனைந்து யுத்தகளம் சென்றான். போரிட்டான்; சிவபெருமான் விட்ட சக்கராயுதத்தால் சலந்தராசுரன் தலை துண்டிக்கப்பட்டது.

தேவர்கள் பூமாரி பொழிந்தனர். மகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டு பார்வதி தேவியார் தவம் செய்துகொண்டிருந்த வனத்தை நெருங்கினர். வணங்கினர்.

## தேவர்கள் பூசைச் சருக்கம்

பூந்துறையில் பெருமைபொருந்திய தீர்த்தம் ஒன்றுண்டு. அது சவ்வாது மணம் கமழும் இந்திரதீர்த்தம். இதன் வடக்கே பிரம தீர்த்தம், சண்பக தீர்த்தம். அதன் வடக்கே விட்டுணு தீர்த்தம். இதன் வடக்கே சக்கர தீர்த்தம். இதன் வடக்கில் சிவ தீர்த்தம். இதன் மேற்கில் காளி தீர்த்தம். இதன் தெற்கே இலட்சுமி தீர்த்தம். இதற்குத் தாமரைத் தடாகம் என்று பெயர். வடகிழக்கில் சர்வ தீர்த்தம். இதற்குக் கிழக்கே பொன்னி நதி. வடக்கே வானி தீர்த்தம். தெற்குப் பக்கத்தே சண்பக நதி. இதன் தெற்குப்புறம் அனுமநதி, காஞ்சி(நொய்யல்) முழக்கம் விசேடமாக இருக்கும். சிறப்புவாய்ந்த இத் தீர்த்தங்களின் மேலானது சென்னிமலை மாமாங்க தீர்த்தம்.அத்தீர்த்தம் கன்ம வினைகளைப் போக்கும். ஐராவத தீர்த்தம் என்ற ஒப்பற்ற தீர்த்தமும் உண்டு. அசுவ தீர்த்தம் ஒன்றும் உண்டு. அதில் மூழ்கினால் மலடிகளும் கர்ப்பம் அடைவர். பின் சிவலோகப் பதவியை அடைவர்.

விநாயக தீர்த்தம் முதலிய தீர்த்தங்களில் முறைப்படி முழுகி மனமகிழ்ச்சி உடையவர்களாக நிலப்பூ, நீர்ப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ முதலிய பூக்களைப் பரமசிவன் திருமேனியில் சாத்தித் 'தங்கள் மன இருளை நீக்கும் பரஞ்சுடரே; எங்கள் தலைவனே' என்று தேவேந்திரன் முதலிய தேவர்கள் பரமசிவனை

வணங்கினர். நாரதர் கீதம் பாடினார். தேவர்கள் பூமாரி பெய்தனர். அரம்பை முதலிய தேவ மாதர் தும்புருவை மீட்டினர். நந்திகேசுவரர் மத்தளம் முழக்கினார். அகத்தியர் முதலான முனிவர்கள் வேதம் இசைத்தனர். குறுகிய கால்களையுடைய பூதகணங்கள் குடைபிடித்தன. அடியார்கள் ஆனந்தக் கண்ணீர் சொரிந்து ஆடினர்.

தேவேந்திரன் தன் ஆயிரம் கண்களாலும் மாறாது பார்த்தான். பரமேசுவரரது திருமுடிமேல் தழும்பு, நெற்றியில் நெருப்பு, வாயில் சிவப்பு, இடுப்பில் உடுப்பு, மலர்க்கையில் வெற்புப் பாம்பு வம்பு, திருமார்பில் என்பு, இவ்விதமாகத் திருமேனி முழுவதும் பு ஆகத்தோன்றத் தேவர்கள் புட்பவனநாதர் என்று பெயரிட்டு வாழ்த்தினர். இப்படிப்பட்ட தேவர்களில் சிவபெருமான் விட்டுணுவை நோக்கி 'மாதவா! இதய மலரால் என்னை அர்ச்சித்தமைக்கு மகிழ்ந்தேன். ஆதலால் தாமோதரன் என்று பெயர் தாங்கி இங்கு இருப்பாயாக' என்றார். இந்த அருள் எவராலும் சொல்லும் தரத்ததன்று.

சங்கவனத்தில் உமாதேவி அர்ச்சித்த இந்த பிம்பத் திலிருந்து மான்,மழு, முக்கண், விடை வாகனத்துடன் தோன்றிய நாதர் என்று தேவர்கள் போற்றினர். விசுவகன்மியன் ஒரு சிவலிங்கம் செய்து தென்பக்கம் வைத்து வழிபட்டான். இந்திரனது யானையாகிய ஐராவதம் மதம் பொழிய வெள்ளோடையான பாலோடை அருகே அர்ச்சித்திருந்த பாடகவல்லி சமேதராக விளங்கும் சர்வலிங்கநாதர் எழுந்தருளியிருக்கத் தேவர் வணங்கினர். பாண்டியனால் பூசிக்கப்பட்டு வரம் பெற்று இந்திரனை வெல்லும் தரம் அருளிய நசியனூர்ச் சிவபெருமானைத் தேவர்கள் வணங்கினர். சத்தமாதர் பூசித்து வரம்பெற்ற எழுமாத்தூர்ச் சிவபெருமானை வணங்கினர். ஒரு காலத்தில் ஏழுமாதர்கூடி பந்து, அம்மனை ஆடியபின் ஒரு நதியில் மூழ்கினர். முன் வினையால் பெண் வடிவம் ஒழித்து ஆணாயினர். கொங்குநாட்டில் சிவலிங்க பூசை செய்தால் இவ்வுருவம் நீங்கி நல்லுருவம் பெறுவீர் என அசரீரி எழுந்தது. அப்படியே செய்தனர். இந்த இலிங்கத்தைப் பூசை செய்யும் விருப்பில் அகத்தியர் வந்தார்.

அகத்தியர் வரும் வழியில் வாதாபி, வில்வலன் என்ற இரு அசுரர் வந்தனர். வாதாபி ஆடானான். வில்வலன் அகத்தியரை வணங்கி உணவருந்த வேண்டினான். குறுமுனிவர் அகத்தியர் ஒப்புக் கொண்டார். ஆட்டைப் படைத்தான். அகத்தியர்

உண்டபின் தம்பியை அழைத்தான். வயிற்றில் இறைச்சி திரண்டு உரு ஆவதை அறிந்த அகத்தியர் ஜீரணம் ஆகுக என்றார். வயிற்றைத் தடவினார். வாதாபி ஜீரணமாய்விட்டான். எதிர்த்த வில்வலனும் மாண்டான். இவர்களைத் தின்றதால் 'பிரமகத்தி' வந்ததால் அகத்தியர் வருந்தினார். ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும் ஏற்பட்ட போரில் பெயர்ந்த மேருமலையின் உச்சி கனகாசலம் ஆயிற்று. 'பல அதிசயம் உடைய அம்மலையில் முருகனையும் அடிவாரத்தில் சத்தீசரையும் வணங்குக' என்று அகத்தியரைச் சிவபெருமான் வேண்ட அகத்தியர் அவ்வாறே வணங்கிப் பொதியம் மீண்டார்.

சோழ தேசத்து வணிகன் சேரநாடு சென்று மிளகு வாங்கிப் பொதிமாட்டில் போட்டுவர வழியில் இருட்டாகியது. கனககிரிக்குக் கீழ்பால் எழுமாத்தூர் நகரில் தங்கினான். விடிந்தபின் பரமேசுவரன் சித்த வடிவம் கொண்டு மிளகு கேட்டார். வணிகன் பயற்றுப் பொதி என்று பொய் சொல்லிச் சோழநாடு சென்றான். அங்கு வியாபாரம் பேசிப் பணத்தை வாங்கி மூட்டை கட்டிக்கொண்டு மிளகு மூட்டைகளை எடுத்துக்கொள்ளச் சொன்னான். வாங்கியவர்கள் அவிழ்த்துப் பார்க்கப் பச்சைப் பயற்றுப் பொதியாக இருந்தது. வணிகனைப் புரட்டன் எனத் துன்புறுத்தினர். வழியில் மிளகு கேட்ட சித்தரிடம் பயறு என்றுகூற அவர் பெருமையால் மிள்கு பயறு ஆனது. மீண்டும் பயறு மிளகானால் விற்ற பொருள் முழுவதையும் சத்தீசருக்குப் படைப்பேன் என்றான். பயறு மூட்டை மிளகாகியது. பார்த்தவர்கள் சத்தியுள்ள ஈசன் என்று பாராட்டினர். சத்தீசுவரனைப் பலர் வணங்கிப் பேறு பெற்றனர்.

## கரிகாற்சோழச் சருக்கம்

வளமிக்க உறையூரிலிருந்து சோழநாட்டை ஆண்டுவந்த பராந்தகன் என்னும் சோழன் பெண் மோகத்தில் மூழ்கியவனாக இருந்தான். அப்பொழுது சாரமாமுனிவர் என்பவர் நந்தவனப்பயிர் செய்து திருச்சிராப்பள்ளித் தாயுமானவருக்குத் திருமாலை சாத்தும் பணிவிடைசெய்து வாழ்ந்துவந்தார். அம்முனிவர் விசேடமாகச் செவ்வந்திப் பூவைப் பிரியமாகத் தொடுத்து இறைவனுக்குச் சாத்திவந்தார்.

இப்புட்பங்களைச் சோழன் மனைவி வேண்டினாள். மனிதர்களுக்குப் பூக்கொடுக்க முனிவர் இசையவில்லை. திருட்டுத் தனமாகவேனும் அப்பூக்களைக் கொண்டுவருமாறு அரசி வேண்டினள். அரசனின் ஊழியர்கள் இரவில் சென்று அப்பூக்களைப் பறித்துக் கொண்டுவந்து கொடுப்பார்கள். பூக்கள் களவு போவதை அறிந்த முனிவர் இரவில் எவ்வகையிலேனும் கள்வனைப் பிடிக்கவேண்டுமென்று காத்திருந்தார். கள்வனைக் கண்டனர். இறைவனுக்குக் கொடுக்கும் பூவைத் திருடி மனைவிக்குக் கொடுப்பது அரசனின் கடமையா? என்று அரசனைக் கேட்டார். இவ்வுயிரை எமன் கொண்டு போனவுடன் கட்டையில் இத்தேகத்தை வைத்துச் சுடும்போது சூறை நாற்றம் அடிக்குமா அல்லது சந்தனம் சவ்வாது மணம் வீசுமா என்றும் கேட்டார். அரசன் சினந்து நந்தவனத்தை அழித்தான். உறையூரில் மண்மாரி பொழிக என முனிவர் சாபமிட்டார்.

அன்றே மண்மாரி பெய்தது. இந்த ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளக் கம்மியன் ஒருவன் செய்த மயில் பொறியில் அரசனும் அரசியும் ஏறினர். மேலே பறந்த பொறியிலிருந்து அரசன் விழுந்துவிட்டான். மயில்பொறி கொங்குநாட்டில் இறங்கியது. குழந்தை பிறந்தது. இறங்கிய ஊர் சூலூர் என்பார்கள்.

சோழ நாட்டுக்கு அரசன் வேண்டி யானையிடம் குடநீரும் பூமாலையும் கொடுத்தனுப்பினர். சூலூரிலிருந்த அக்குழந்தைக்கு அபிடேகம் செய்து கழுத்தில் மாலையிட்டது. யானை குழந்தையை எடுக்க முடியவில்லை. ஒரு கரியை எடுத்துக் காலில் கீறினார்கள். குழந்தையை எடுத்துப்போய் முடிசூடிக் கொண்டனர். கரிகாலன் என்ற பெயர் கொண்ட அரசன் பேரூர்வந்து வழிபட்டுப் பல தலங்களை வணங்கிப் பூந்துறை வந்தான். பங்குனி மாதத்தில் திருவிழா எடுத்தான். கரிய காளியைப் பிரதிட்டை செய்தான்.

ஈரோட்டில் ஒரு சிவலிங்கப் பிரதிட்டையும், கரிய பெருமாள் பிரதிட்டையும், எழுமாத்தூரில் சத்தீசுவரர் கோயில் திருப்பணியும் கரிகாலன் செய்தான். பூந்துறை தாமோதரப் பெருமாளுக்குப் புரட்டாசிமாதம் திருவிழா எடுத்தான். இவ்வாறு நான்கு வீட்டுக்கும் செய்து ஐந்தாம் வீடாகிய பிடாரியூர் காளி பூசை செய்து முருகவேளுக்குத் தைப்பூசத்தேர் நடத்தி வைத்தான்.

குலோத்துங்க சோழன் என்பவன் ஊர் ஒன்பது, மங்கலம் நான்கு, ஓடை நான்கு, பள்ளி இரண்டு, நிலை இரண்டு, துறை

இரண்டு, பாடி ஒன்று, தொழு ஒன்று, மலை ஒன்று, வாச்சி ஒன்று, தல் ஒன்று, குறிச்சி ஒன்று, விளக்கு ஒன்று, கம் ஒன்று, விளக்கேத்தி ஒன்று என்னும் முடிவுகளையுடைய முப்பத்தி இரண்டு ஊர்களை ஏற்படுத்தினான். 32 வகைத் தருமங்களையும் செய்தான்.

## சேரமான் வரலாற்றுச் சருக்கம்

தமிழ்நாட்டில் சேர சோழ பாண்டியர் முறையே வஞ்சியிலும், உறையூரிலும், மதுரையிலும் அரசு புரிந்தனர். பயிர்த்தொழில் நடத்தும் பொருட்டுக் காஞ்சிபுரத்திலிருந்து தத்தம் நாடுகளில் வேளாளர்களைக் குடியேற்றினர். இப்படிக் குடியேறும் கங்கா குலத்தார்களில் கொங்கு நாட்டில் நான்கு இடங்களில் நால்வரைக் குடி அமர்த்தினர்.

அதில் பூந்துறை நண்ணாவுடையார் வழியில் 11 பேர் வந்தனர். வெள்ளோடு உலகுடையான் வகையில் 9 பேர் வந்தனர். நசையனூர் வீரனுக்கு ஏழுபேரும் எழுமாத்தூர் உலகுடையானுக்கு 5 பேரும் ஆகத் தோன்றிய 32 பேர்களை 32 ஊர்களில் குடியேற்றினர். இவர்கள் கொங்கு 24 நாடுகளிலும் பல்கிப் பரவினர்.

இவர்கள் வழியில் செங்குன்றூரில் விறல்மிண்டர் பிறந்து திருவாரூர் சென்றார். அவ்வூர் வன்மீகநாதர் கோயிலில் அசுத்தத்தோடு வருபவர்களைத் தண்டிப்பேன் எனக் கோடரியுடன் அதிகாலை கோயிலில் காத்திருப்பார். ஒரு நாள் வெற்றிலைபாக்குப் போட்டுக் கொண்டு உல்லாசமாகச் சுந்தரர் கோயில் வருவதை அறிந்தார். வாய்த்தம்பலத்தோடு வரும் அவரை வெட்டுவேன் எனக் கோடரியைத் தூக்கினார். சுந்தரர் கோயிலுக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் கொண்டார். சுந்தரர் புகுந்த ஆலயம் உள்ள ஊரில் இருத்தல் கூடாதெனப் புறநகரில் விறல்மிண்டர் வாழ்ந்தார். அடியார்கட்கு அன்னமிட்டு வந்தார்.

உலாச் சோழன் காலத்தில் பஞ்சத்தால் மக்கள் வாடினர். அக்காலத்தில் மதுரையில் கோயில் கொண்டுள்ள சொக்கநாதப் பெருமான் யாழ்ப்பாண நாயனாருக்குப் பொருள் கொடுக்கும்படி மதிமலிபுரிகை என்னும் திருமுகப் பாசுரம் பாடிச் சேரனுக்குக் கொடுத்தனுப்பினார். அதைக் கண்டு வேண்டிய பொருள்களை எடுத்துக் கொள்ளுமாறு சேரன் வேண்டினான்.

சேர மன்னன் சுந்தரர் பெருமையை அறிந்து திருவாரூர் வந்து வன்மீக நாதரையும், தியாகராசப் பெருமானையும் வணங்கிப் பரவை நாச்சியாரையும் கண்டான். கொங்கு நாடு முழுவதையும் சிவபெருமானுக்குப் படைத்தான். சிவப் பிராமணர்களை அழைத்து கங்கா குலத்தவர் எங்கே என்று கேட்கப் பசியாலும் நோயாலும் வாடித் தொண்டைநாட்டுக் காஞ்சியில் உள்ளனர் என்றனர்.

நண்ணாவுடையார் மரபில் வந்த வேலப்பநயினார் என்பவர் சேரமானுடன் சேர்ந்தார். திருவஞ்சைக் களம் சென்று சேரமான் தன்முடியை நயினாருக்குச் சூட்டினர். பொன்வண்ணத் தந்தாதி பாடினார். சுந்தரர் தேவர்கள் அனுப்பிய வெள்ளை யானை மீது ஏறிக் கைலாயம் அடைந்தார். உடனே சேரமான் குதிரைக்குத் திருவைந்தெழுத்து ஓதச் சேரமானுடன் குதிரை கைலாயம் சென்றது. அங்கு சேரமான் திருக்கயிலாய ஞான உலாப் பாடினார்.

கொங்கு நாட்டைச் சிவபிராமணர்கள் கொங்கச் செட்டியார்களிடம் அடகு வைத்தனர். கொங்கு நாட்டில் கள்ளர் பயம் அதிகம் ஆகவே, கள்ளர்களை அடக்குபவர்களுக்கு நாட்டுக்காணி கொடுப்பதாகச் சோழன் அறிவித்தான்.

வடதேசத்திலிருந்து நான்கு வேட்டுவத் தலைவர்கள் வந்தனர். அவர்கள் பொத்திராயன், புசபலராயன், வல்லா ளராயன், கொங்குராயன் என்பவர்கள். அவர்கள் கள்ளர் பயத்தை நீக்கினர். சோழன் கொங்கு 24 நாட்டுக்கும் தலைவர்கள் எனப்பட்டம் அளித்தான்.

கம்பரால் சாபம் பெற்றுச் சோழர் மரபு அழிந்தது. பறையன் அந்நாட்டைப் பெற்று ஆண்டான். அரசு பெற்ற பறையன் வேளாளப் பெண்ணை மணம் செய்து கொள்ள விரும்பினான். பெண் கேட்டான். வல்லைக்காளத்தி என்பவர் பறையர்கள் வருவதை அறிந்து கற்கம்பம் நாட்டிப் பெண்நாயைக் கட்டி வைத்துவிட்டுப் போய்விட்டார். தச்சன் பொறியைத் தட்டிவிட வந்த பறையர் மாண்டனர். ஒருத்தி மட்டும் தப்பி ஒரு மகவைப் பெற்றாள். அவன் முதல் மூன்று வமிசத்தார் ஆண்டனர். அவர்கள் வேளாளரைக் கொல்லவேண்டும் என்று இருந்ததால் கொங்கு நாடு வந்த வேளாளர்கள் கவுண்டர் பட்டம் வைத்துக் கொண்டு மறைந்து வாழ்ந்தனர். போதாயனர் வந்து வேளாளர்கட்கு வேண்டியன செய்தார்.

## குமாரச் சருக்கம்

கைலை மலையில் எழுந்தருளியிருக்கும் பரமசிவனிடம் பார்வதி தேவியார் பிரணவ மந்திரத்தை உபதேசிக்கும்படி வேண்டினார். முருகப் பெருமானை விட்டுவிட்டுப் பார்வதியைத் தனியாக வருமாறு சிவன் வேண்டினார். பரமசிவன் பார்வதிக்குப் பிரணவ மந்திரத்தை உபதேசித்தார். அதனை முருகன் வண்டு வடிவமெடுத்துக் கேட்டார். சிவபெருமான் முருகனைக் கோபித்து மண்ணுலகில் பிராமண, சத்திரிய,வைசிய, சூத்திரர் குலத்தில் பிறக்குமாறு சாபமிட்டார்.

முதலாவதாக முருகன் சீர்காழியில் திருஞான சம்பந்தராய் அவதாரம் செய்து சமணரை அழித்து எலும்பைப் பெண்ணாக்கிப் புகழுடன் வாழ்ந்தார்.

இரண்டாவதாக உக்கிர குமார பாண்டியனாக மதுரையில் அவதாரம் செய்தார். கடலை வற்றச் செய்து இந்திரனை மானபங்கம் செய்து வாழ்ந்தார்.

மூன்றாவதாகச் சுவாமிமலையில் வைசியர் குலத்தில் சுவாமிநாதன் என்னும் பெயர் கொண்டு பிறந்தார். கண்ணில் கண்ட கன்னிகள், விதவைகட்குக் கரு உண்டாகச் செய்து சித்துவிளையாடி வாழ்ந்தார்.

நான்காவதாகக் கொங்கு நாட்டு முத்தூரில் வேளாளர் குலத்தில் செல்லப்பனுக்கு மகவாகத் தோன்றிச் செல்வக் குமாரன் என்று பெயர் பெற்றார். கலைகள் பல கற்று நோய் நீக்கம் செய்து செஞ்சேரி மலைக்குப் போய் மாடுகளை மேய்த்துவந்தார். பின்னர் பூந்துறைக்கு வந்து பசுக்களை விருத்தி செய்தார். சேமூரில் தங்கி அன்னம் நீக்கிப் பால் அருந்தி மக்கள் துன்பும் நீக்கி வாழ்ந்தார்.

தென்னிலையை ஆண்ட வேட்டுவர் கொங்கராயன் யாரையும் வணங்காமல் வணங்காமுடி என்னும் பெயர் பெற்று வாழ்ந்தார். அப்போது ஆட்சி புரிந்த பிரபுட தேவர் அவையில் அப்பாச்சி என்பவர் இருந்தார். கொங்குராயன் ஏன் வரவில்லை என்று கேட்க நாட்டுக்கு ஒத்தது கொங்குராயனுக்கும் என்றார். கன்னப் பறையர்களை அழைத்துக் கொண்டு கொங்கராயன் கோட்டையைக் கன்னமிட்டு அழித்து முக்குறுணி தாலி கொள்ளும்போது குப்பன் என்னும் பறையன் வழியில் இறந்தான். உயிர் துறக்கும்போது 'செல்வக்குமாரருக்கு அடிமையானேன்' என்றான். கன்னக்கோலைக் கையில் கொண்டு வியாதிகளை

நீக்கிப் பூந்துறைச் சேமூரில் வரம்பெற்று இறைவடிவில் வாழ்ந்து வருகின்றான் (பூந்துறைச் சேமூரில் ஊரினுள் கிழக்கு நோக்கிக் குப்பியணன் கோயில் உள்ளது).

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# பூந்துறைப்புராணம்

## 1. பாயிரம்

### விநாயகர் துதி

(எண்சீர் விருத்தம்)

பொன்நாட்டுத் தேவர்வலம் புரியும் எந்தை
 புட்பவனத்து அப்பர்அன்பு பூண்டு வாழும்
நன்னாட்டுத் தலத்தின்மான் மியத்தைச் சூதர்
 நவின்றவட மொழிதமிழால் நவில வேதான்
தென்நாட்டுப் பொதிகைமுனிக்கு உபதேச சங்கள்
 செயும்சென்னிப் பொருப்பின்மிசை செழிக்கும் செவ்வேள்
முன்ஆட்டும் துதிக்கையுடன் பேழ்வாய் யானை
 முகத்தேவன் பதமலர்எம் முடிமேல் கொள்வாம். 1

### வலம்புரி விநாயகர் துதி

(கலி விருத்தம்)

தருவின் நாயகன் தாமரை நாயகன்
கருஇல் நாயகன் கைதொழுது ஏத்திடத்
திருவின் நாயகன் தேடியு மேவலம்
புரிவி நாயகன் பொன்னடி போற்றுவாம். 2

### காடை விநாயகர் துதி

(அறுசீர் விருத்தம்)

ஓடைவினாய் அகன்துறையின் உள்படிந்து திருவெண்ணீறு
 உகந்து பூசி
நீடைவினா அகல்பிறவித் துயரமதை எப்போதும்
 நீக்கும் செம்பொன்

---

1. பொன்நாடு - தேவலோகம்; புட்பவனம்-பூந்துறை; அப்பர்-சிவபிரான்; மான்மியம்-பெருமை, சரித்திரம்; பொதிகை முனி-அகத்தியர்; சென்னிப் பொருப்பு-சென்னிமலை; பேழ்வாய்-பெரிய வாய்.

2. தருவின் நாயகன்-கற்பக மரத்திற்குத் தலைவன், இந்திரன்; தாமரை நாயகன்-பிரமன்; கருஇல் நாயகன்-பிறவி இல்லாதவராகிய சிவபிரான்; திருவின் நாயகன்-திருமகள் கணவன், திருமால்.

கோடைவினா யகன்பெற்ற குமரவேள் முன்வந்து
குலவும் தெய்வக்
காடைவினா யகன்பதத்தை எமதுஉளத்தில் கண்டுநலம்
களித்து வாழ்வாம். 3

## செல்ல விநாயகர் துதி

### (கலி விருத்தம்)

வெல்லும் ஐங்கர வீரக ணேசனை
வல்ல பைக்கு மணாளன் எனவரும்
செல்ல விநாயக தேசிகன் தன்பதம்
சொல்லி வாழ்த்தித் துதித்திடு வாமரோ. 4

## புட்பவனநாதர் துதி

### (அறுசீர் விருத்தம்)

சும்மாநைந்து இருவினையால் சுழன்றுஏம புரம்சூழ்ந்து
சுழலால் சிக்கும்
செம்மானைத் தேடிஅயர் திருமால்முன் காணாத
செம்பொற் சோதி
அம்மானைக் கழங்கொடுகந் துகம்ஆடல் செய்வாள்தன்
ஆகம் மேவும்
பெம்மானைப் புட்பவனப் பெருமானை எப்போதும்
பேணல் செய்வாம். 5

## பாகம்பிரியாள் துதி

### (சந்த விருத்தம்)

மாகம்பெறு தேவன்துதி வாழும்கொடி விடையார்
வேகம்பெறு சேஉந்திய மேவும்சடை முடியார்
நாகம்பணி தோலும்துகில் நாடும்சிலை மலையார்
பாகம்பிரி யாளின்செய பாதம் துதி செய்வாம். 6

---

3. ஓடைவினாய்-புனித நீர்நிலை எதுவெனக் கேட்டறிந்து; நீடை-நீடு+ஐ, நெடுநாள் நிலைத்திருத்தலை; வினா-தன்பாற் பெறாமல்; அகல்-விரைவில் கழியும்; செம்பொற் கோடு-செம்மையான பொன்மலை, இமயம்; ஐ-அழகிய; வில்நாயகன்-வில்லை உடைய சிவபிரான்.

5. சும்மா-உரிய பயன்களைப் பெறாமல்; ஏமபுரம்-எமனுடைய ஊர், நரகம்; செம்மானை-மாரீசனாகிய மாய மானை; கழங்கு-கழற்சிக்காய்; கந்துகம்-பந்து; ஆகம்-திருமேனி.

6. மாகம்பெறு தேவன்-விண்ணுலகத்தின் தலைவன், இந்திரன்; விடை-எருது; தேவு உந்தி-கடவுள் தன்மை பெற்ற ஆறு, கங்கை; நாகம்பணி-பாம்புகளாகிய அணிகலன்கள்; சிலை-வில்.

## தான்தோன்றிலிங்கர் துதி

### (அறுசீர் விருத்தம்)

வையநா யகிஞானம் வளர்க்கும்நா யகிபூவில்
வளரும் எங்கள்
தெய்வநா யகிசுரர்கள் தேவநா யகிமுனிவர்
செழிக்கும் வெற்புக்
கையநா யகிமுந்நீர்க் கருணைநா யகிஇவர்கள்
கனிந்து போற்றும்
தையல்நா யகிஇடத்தில் தான்தோன்றி லிங்கர்பதம்
தலைமேல் கொள்வாம். 7

## விசுவேசர், விசாலாட்சி துதி

நன்னயம்சேர் காசிஎனும் நதிக்கரையில் முளைத்தோங்கி
நவில்வோர்க்கு எல்லாம்
மன்னுபிற வித்துன்ப மாசுஅகற்றிப் பரகதியை
வழங்கும் மேலாம்
சொன்னமத்தி பாதாளத் தோர்க்குஎல்லாம் இனியஅருள்
சுரக்கும் ஞானக்
கன்னிஎனும் விசாலாட்சி விசுவேசர் இருவரையும்
கருத்துள் கொள்வாம். 8

## தட்சிணாமூர்த்தி துதி

முக்கணாச் சுவைஉணர்ந்து சுரும்பினங்கள் இசைபாடும்
முந்நீர் சூழ்ந்த
திக்கணா மலைஉருவாய்ச் சிந்திப்போர் இருவினையும்
தீர்த்து நால்வர்
பக்கணான் மறைஉணர்ந்த குருஉருவாய்க் கல்லாலின்
பக்கம் வைகும்
தெக்கணா மூர்த்திதனைச் சிந்தித்துப் பதமலரைச்
சிரமேல் கொள்வாம். 9

---

7. வைய நாயகி-நிலமகள்;ஞானம் வளர்க்கும் நாயகி-கலைமகள்; பூவில்-தாமரை மலரில்; தெய்வநாயகி-திருமகள்; தேவ நாயகி-இந்திராணி; வெற்புக்கு ஐய நாயகி-மலைகளுக்குத் தலைமை உடைய மலையர மகள்; முந்நீர்க் கருணை நாயகி-நீரரமகள்.

8. மன்னு-நிலையான; மாசு-குற்றம்; பரகதி-வீடு; சொன்னம்-பொன்னுலகு, தேவலோகம்; மத்தி-இடைப்பட்ட நிலவுலகு.

9. கள்நாச்சுவை உணர்ந்து; சுரும்பு-வண்டு; திக்கு-திசைகளில் பரந்த; அணாமலை-திருவண்ணாமலை;பக்கு-(ஐயமாகிய) குறையை; அள்-அள்ளிக் கொள்ளும்.

## அர்த்தநாரீசர் துதி

யோகம்மிகும் கயிலையில்நின்று உயர்காஞ்சி நதிமூழ்கி
உரைக்கும் நல்வே
தாகமம்வாழ் அருணைநகர் அழற்கண்உயர் தவம்இயற்றி
அன்பு கூர்ந்து
தாகமுடன் பூந்துறையில் சங்கவன வயின்மேவித்
தழைக்கும் கீழ்பால்
நாககிரி தனில்மேவும் அர்த்தநா ரீசர்பதம்
நாம்உள் கொள்வாம். 10

## சபாநாயகர் துதி

அருச்சிற்றம் பலம்அடைய மாரனைமுன் நாள்எரித்தும்
அன்பு பூண்ட
உருச்சிற்றம் பலம்உடைய அகத்தியனும் மற்றும்உள்ளோர்
உவப்பத் தேவர்
தருச்சிற்றம் பலம்உடைய ஓர்படிவம் ஆகியுமே
தழைக்கும் செம்பொன்
திருச்சிற்றம் பலநடன கனகசபா பதிசரணம்
சிரமேல் கொள்வாம். 11

## தாமோதரப் பெருமாள் துதி

நாமோத ரவணைவிட்டு இராக்கதரை வென்றுஉலகம்
நன்றாய்க் காத்துத்
தேமோத றம்செழிக்கத் தேவர்கள்பூ மாரிபெய்யச்
செல்வம் ஓங்க
காமோத ரம்சிலம்பு கலித்திடுநன் மலர்மகளைக்
கலந்து வாழும்
தாமோத ரப்பெருமாள் பதமலரை எப்போதும்
தலைமேல் கொள்வாம். 12

---

10. காஞ்சிநதி-வேகவதி; அழற்கண்-தீயில்; சங்க வனம்-பூந்துறையில் அம்மை தவமியற்றிய சோலை; நாககிரி-திருச் செங்கோடு.

11. அரு சிற்று அம்பு-மாயையைச் செய்யும் சிறிய மலர்க்கணைகள்; அலம் அடைய-(தோற்றுக்) கலங்குமாறு; உரு சிற்று-உடல் சிறுத்தும்; அம்பலம் உடைய-அழகின் வலிமையைப் பெற்ற.

12. நாம் ஓது அரவு அணை-நம்மால் புகழப்படுகின்ற பாம்புப் படுக்கை; தேம் ஓது அறம் செழிக்க-தேயத்தில் வேதத்தில் விதந்தோதப் பெற்ற தருமம் வளர; கலித்திடு-ஒலிக்கின்ற.

## இலக்குமி துதி

### (கலி விருத்தம்)

சலக்கு மிழிஎனத் தானவர் தங்களைக்
கலக்கும் இருடியாம் காரணன் மார்பினில்
பிலக்குமின் தேவர்கள் பேசிப் பதம்பணி
இலக்கு மிபாதம் இரண்டினை ஏத்துவாம். 13

## பிரமன் துதி

### (வேறு)

ஈன்றவன் ஏழ்பிறப்பு எண்இ லாதவை
ஊன்பொதி உடலையும் உண்டு பண்ணினோன்
தேன்துளி பூவின்மேல் தெய்வ மாய்வரும்
நான்முகப் பண்ணவன் நளினம் போற்றுவாம். 14

## வாணி துதி

### (வேறு)

ஆதிமறை நூல்கள்பல ஆகமமும் ஓதிச்
சாதிமுதல் நால்வருண தாபரமும் நீடி
ஓதிமம்மீது ஏறிவரு வோனுடைய நாவில்
நீதிபெரு வாணிபதம் நீடுதுதி செய்வாம். 15

## சுப்பிரமணியர் துதி

### (அறுசீர் விருத்தம்)

கள்ளொழுகு மலர்ப்பொழில்சூழ் குறிஞ்சிநிலம் தனில்மேவிக்
கருணை கூர்ந்து
தெள்ளியநல் மணிக்கல்லால் கவண்எறிந்து பரண்ஏறித்
தினமும் மேவும்

---

13. சலக்குமிழி-நீரில் தோன்றும் மொக்குள்; தானவர்-அசுரர்; பெலக்கும்-வலிமை பெற்றுத் திகழும்; மின்-மின்னலைப் போன்றவள்; பேசி-புகழ்ந்து.

14. நளினம்-தாமரை.

15. தாபரம்-துணை, உலக இயக்கத்திற்கு உதவியானவை; நீடி-நிலைத் திருக்கச் செய்து; ஓதிமம்-அன்னப்பறவை; நீதி-நியாயவாதங்களாக உள்ள.

புள்ளினங்கள் தமையோச்சிப் புனம்காத்துச் சிறுகுடிசைப்
புறத்தில் வாழும்
வள்ளிதெய்வா னைக்குரிய மணவாளன் செழுங்கமலம்
மனத்துள் கொள்வாம். 16

## சென்னிமலை வேலர் துதி

(வேறு)

குளர்கூகை யொடுபேய்கள் குடர்பீறி யிடுராவு
குறியாது புவியோடியே
களர்தன்னில் இடுசெந்நெல் அதுபோல வெகுலோப
கயவர்மேல் கவிசொல்லிநான்
தளர்வுஎய்தி மனம்நொந்து சலியாமுன் அடியன்மேல்
தயவாகி அருள்புரிகுவாய்
வளர்சென்னி மலைமேவு மயில்மீதில் நடமாடி
வருசூலி அருள்பாலனே. 17

## வீரபத்திரர் துதி

(வேறு)

நத்திரையும் கடல்சூழ்ந்த ஞாலமதில் தேவர்களை
நடுஇ ராவில்
நித்திரையில் லாதுஅமரை நேர்நடத்தும் மயிடனது
நிணத்தை வேற்கு
வைத்திரையாய்க் கொண்டகவு மாரிதிரி சூலிஎனும்
வடபால் உற்ற
பத்திரையும் மகிழ்வீர பத்திரன்தாள் எப்போதும்
பணிதல் செய்வாம். 18

## வயிரவர் துதி

(சந்த விருத்தம்)

விதுவும்குளிர் நதியும்புனை விரவும்சடை முடியார்
மதுவும்துளி மலரும்தலை மருவும்தொடை உடையார்

---

16. மணிக்கல்-இரத்தினம்; புள்-பறவை; ஓச்சி-விரட்டி; புனம்-தினைப் புனம்; கமலம்-தாமரையாகிய திருவடி.

17. குளர்-அலறுகின்ற; கூகை-கோட்டான்; குடர்-குடல்; ராவு-இரவு; புவியோடி-உலகில் அலைந்து.

18. நத்து இரையும்-சங்குகள் ஒலிக்கின்ற; அமரை-போரை; மயிடன்-மயிடாசுரன்; வேற்கு-வேலாயுதத்திற்கு; வடபால் உற்ற-ஊருக்கு வடக்கே எழுந்தருளியுள்ள, கோயிலின் வடக்குக் கோஷ்டம் எனினுமாம்; பத்திரை-சுமங்கலி.

அதிரும்கழல் முடுவெண்படை அமலன்தலம் உடையார்
மதுரம்பெறு தமிழும்புனை வடுகன்கழல் துணையே. 19

## சண்டேசர் துதி

### (அறுசீர் விருத்தம்)

பண்டேசர்க் கரைஎனும்தீம் பால்கலசம் தனைக்கவிழ்த்துப்
பரிவுஇல் லாமல்
கண்டேசற்கு உளம்கொண்ட தந்தையின்தாள் தனைத்தடிந்து
கனிவு கூர்ந்தும்
அண்டேசர் பரவுதிருக் கயிலையினில் எப்போதும்
அன்பு கூர்ந்த
சண்டேசர் தமைத்துதித்துப் பதமலரை எப்போதும்
தலைமேல் கொள்வாம். 20

## நந்திதேவர் துதி

### (எண்சீர் விருத்தம்)

முந்தியநால் ஐங்கரனைக் கொன்று முன்நாள்
முல்லைநிலந் தனில்மேவி ஆய மாதர்
தந்தனத்தைத் தான்தழுவித் தயிர்பால் வெண்ணெய்
தானருந்தி அநேகநாள் தவங்கள் செய்து
கந்தமலர்ச் செஞ்சடிலக் கடவுள் தன்னைக்
கையினால் அருச்சித்துக் கயிலை மேவி
நந்திஎன உருஎடுத்த தேவ தேவன்
நளினமலர்ச் செஞ்சரணம் நாம்உள் கொள்வாம். 21

## அங்காளம்மை துதி

### (அறுசீர் விருத்தம்)

வெங்காளம் எனஉலகில் வரும்மறலி தனைத்துரத்தி
விண்ணோர் போற்றப்
பங்காள வருஞானப் பரஞ்சோதி அடியார்கள்
பவத்தைத் தீர்க்கக்

---

19. விது-சந்திரன்; மது-தேன்; தலை-தேவர்களின் மண்டையோடு; தொடை-மாலை; மண் படை அமலன்-உலகைப் படைக்கும் பிரமனுடைய; தலை முடையார்-மண்டையோட்டின் முடை நாற்றத்தை உடையவர்.

20. கண்டு ஏசற்கு உளங்கொண்ட; அண்டேசர்-தேவலோகத் தலைவர்கள்.

21. நால் ஐங்கரன்-இருபது கைகளைப் பெற்ற இராவணன்; ஆய மாதர்-இடைச்சியர்; கந்தமலர்-மணம் மிக்க பூ; செஞ்சடிலம்-சிவந்தசடை; உள்கொள்வாம்-தியானிப்போம்.

கங்காளம் திரிசூலம் கபாலம்மழு எல்லாம்தன்
கைக்கொண்டு ஓங்கும்
அங்காள அம்மைஇரு பாதமதை எப்போதும்
அகத்துள் கொள்வாம். 22

## காளி துதி

### (கலி விருத்தம்)

ஏகசட தாரிகுறள் கூளிகள்இ லங்கப்
பாகரிய சொல்லின்மொழிப் பாவையர்கள் சூழ
நாகசுரம் மேளம்மணி நாதமும்மு ழங்க
மாகரிய காளிபதம் வாழ்த்துதுதி செய்வாம். 23

## துர்க்கை துதி

### (சந்த விருத்தம்)

கலைஏறி நடனமிடு கடிகூளி உறவுபெறு
கலியாணி சுடுநிலம்உளாள்
நிலமீது மயிடன்உடல் பொடியாக உதையிடுவள்
நிசம்ஈது பொய்கள்இலையே
சலம்ஆடை உடையபுவி தனில்ஆசை விடுகநினை
தயவாகி அருள்புரிகுவாய்
மலையாள பகவதியின் இருபாத கமலமது
மறவாது துதிகள்செய்வாம். 24

## மாரியம்மை துதி

### (அறுசீர் விருத்தம்)

சொன்மாரித் திரிகின்ற அரக்கர்குலம் தனைத்தடிந்து
சுரர்கள் வாழ்த்தக்
கன்மாரி தனைவிலக்கிக் கவிமாரி பொழிந்துஅறங்கள்
கருத்தின் மேவப்
பொன்மாரி பொழிந்துஇலங்கும் பூமாரி பொழியும்பூந்
துறையில் வாழும்
நன்மாரி யம்மைஇரு பதம்பணிவோர்க்கு இருவினையும்
நலியும் தானே. 25

---

22. வெம் காளம்-கொடிய நஞ்சு; பங்காள வரு-ஏழை பங்காளியாக வருகின்ற; பவம்-துன்பம்; கங்காளம்-கொப்பரை.

23. சடதாரி-சடையை உடையவள்; குறள்-பூதம்; கூளி-பேய்; பாகு அரிய-வெல்லப்பாகு போன்றதும் கிடைத்தற்கரியதுமாகிய.

24. கலை-ஆண்சிங்கம்; சுடுநிலம்-சுடுகாடு; சலம்ஆடை-நீராரும் கடலுடுத்த.

25. சொல்மாறி; தடிந்து-கொன்று; சுரர்-தேவர்.

## ஐயனார் துதி

துய்யனார் எனும்சொல்லால் புகழ்ப்பூவை யேதொடுத்துச்
சுகமாய்ச் சூட்டும்
கையனார்க்கு இருவினையாம் களைநீக்கி எப்போதும்
கருத்தில் வாழும்
மெய்யனார் சுரர்துதிக்கும் விமலனார் அரன்அரியால்
விளங்க வந்த
ஐயனார் பூந்துறையூர் ஐயனார் இருபதமும்
வணக்கம் செய்வாம். 26

## அடியார் வணக்கம்

அலைநாட்டும் கருங்கடலில் கலைமிதக்கச் செய்தோனை
அகத்தில் வாழ்த்தி
விலைகாட்டி நரிபரியாய்ச் செய்தோன்தன் செழுங்கமலம்
மிகவும் போற்றி
கலைநாட்டிச் சமணர்களைக் கழுவேற்றும் தமிழ்முனிவன்
கழலும் வாழ்த்தி
மலைநாட்டில் முதலையுண்ட மகவழைத்தோன் செஞ்சரணம்
மனதுள் கொள்வாம். 27

(கலித்துறை)

வேத வேதியர் சாத்திரர் சைவமா விரதர்
ஓதும் மாதவர் புராணிகர் வைணவர் உயர்ந்தோர்
நீதி யாளர்நன் மடாதிபர் கவிஞர்கள் நிகழ்த்தும்
பாத பங்கயம் என்தலை மேற்கொளப் பணிவாம். 28

## அவையடக்கம்

(கலி விருத்தம்)

நல்ல சூதர் நவின்றிடு காதையை
வல்ல மாக்கள்முன் வாய்திறந்து ஓதுதல்

---

26. துய்யனார்-புனிதமானவர்; புகழ்ப் பூவை-கீர்த்தியாகிய மலரை; கை அனார்க்கு-கரங்களைப் பெற்ற அவர்கட்கு; தளை-விலங்கு; மெய்யனார்-சத்தியமானவர்; ஐயனார்- 1. அழகராகிய, 2. அய்யப்பன்.

27. கலை-கல்லை; மிதக்கச் செய்தோன்-அப்பர்; விலை காட்டி-விலைகூறி என்றபடி, இது மாணிக்கவாசகர்; கலை காட்டி-கல்விப்பெருமையால் வாதத்தில் வென்று; தமிழ் முனிவன்-திருஞானசம்பந்தர்; மலை நாடு இங்கு கொங்குநாட்டைக் குறித்து நின்றது; மகவு அழைத்தோன்-சுந்தரர். முதலையுண்ட மகவு அழைத்தது அவிநாசியில்.

28. மாவிரதர்-சைவ சமயியருள் ஒரு பிரிவினர்.

ஒல்லும் கேழல் உறுமிக் கடாம்பொழி
வெல்லும் வேழத்தை வெருட்டுதல் போலுமே. 29

உற்ற பேதை உணும்மணல் சோறுபோல்
கற்ற கேள்விக் கவிஞர்முன் கூறுதல்
சிற்றில் ஏய்த்துச் சிறார்மணம் செய்துகைப்
பற்றல் போலும்என் பாவது ஒக்குமே. 30

பாயிரம் முற்றிற்று.

## 2. திருநாட்டுச் சருக்கம்

### (கலி விருத்தம்)

1. ஆடும் மாமயில் அன்னம் நடந்திடப்
பாடும் மாமிசைப் பண்ணினை வண்டினம்
தேடும் மாதவர் சிராசலர் பொற்பதம்
நாடு பூந்துறை நாட்டுஅணி கூறுவாம். 31.

### (கலித்துறை)

2. மன்னு மேகங்கள் மதன்குடை போலவான் வயங்கிப்
பன்னெ டும்திரைப் பரவையில் போய்ப்படிந்து உண்டு
அன்ன வன்களிறு அனையவாய்க் கொண்டரன்
அருள்போல்
துன்னு நீர்சுரந்து எழுந்தன நால்திசை தோறும். 32

3. சென்னி மாமலை மீதினில் சென்றுஎழுந்து ஓங்கி
மன்னும் வேலவர் மகுடம்போல் பளீர்என வானில்
மின்னி ஆங்குஅவர் முரசுஎன விண்ணிடை அதிர்ந்து
சொன்ன மாரியாய் அன்பர்கைப் போதுஎனச் சொரிந்த.33

4. சாந்தம் மேவுநல் சென்னிமா மலைமுடி தனில்வாழ்
சேந்தன் மாமுடிக்கு அன்பினால் எட்டவர் சேர்ந்து
நேர்ந்து கைப்புனல் பால்தயிர் நறுநெயும் நிறைத்து
போந்து மஞ்சன மாட்டுதல் போல்மழை பொழிந்த. 34

---

29. கேழல்-பன்றி; கடாம்-மதநீர்; வேழம்-யானை.

30. சிற்றில் ஏய்த்து-மணல்வீடு கட்டி; சிறார்-குழந்தைகள்.

1. சிராசலர்-சென்னிமலையாண்டவர்.

2. மதன்குடை-சந்திரன்; பரவை-கடல்; (மாரனின்) களிறு-இருள்.

3. மகுடம்-கிரீடம்; சொன்னமாரி-பொன்மழை; கைப்போது-கரங்களால் தூவப்பெறும் மலர்கள்.

4. சாந்தம் மேவு-சந்தன மரங்கள் நிறைந்த; முடி-உச்சி; சேந்தன்-கந்தன்; எட்டவர்-தொலைவில் உள்ளோர், விண்ணவர்; நேர்ந்து-நேர்த்திக் கடனாக; மஞ்சன மாட்டுதல்-திருநீராட்டல்.

5. பாயும் யானையின் பருமருப்பு எறிந்தவெண் முத்தும்
வேயின் முத்தமும் விண்ணவர் மணிகளும் விரும்பித்
தோயும் நன்முகட்டு உச்சியில் தோன்றிவீழ் அருவி
சேயின் மார்பினில் செங்கடம்பு ஆரம்ஒத் துளதால். 35

6. மானும் வேங்கையும் வயங்கிய மரைகளும் வதைத்துத்
தேனும் ஏலமும் செறிந்திடு கறிகளும் திமிர்ந்து
போன கம்செயும் புளிஞர்போல் பொருமலை மேவி
வான யாறுதன் வயறுகீண்டு ஒழுகிய அன்றே. 36

(கலி விருத்தம்)

7. அரியும் வேங்கையும் அத்தியும் கூறுகோ
ளரியும் வேங்கையும் அத்தியும் வாரியே
உரிய மாவையும் மாவைமு றித்துமேல்
உரிய மாவையும் மாவையும் உற்றதே. 37

8. ஆடும் வாழையும் அஞ்சுக மும்வரை
யாடும் வாழையும் அஞ்சுகம் வாரிமீக்
கோடு வாழைக் குகன்கழல் தாழ்ந்துபூங்
கோடு வாழையும் கொண்டுக டந்ததே. 38

---

5. பரு மருப்பு-பருமனான தந்தம்; வேயின்-மூங்கிலின்; முகட்டு-மலைச் சிகரத்தின்; சேய்-முருகன்.

6. ஆற்று வெள்ளத்திற்கும் வேடருக்கும் சிலேடை. புளிஞர்-வேடர்; இவர் விலங்குகளைக் கொன்று வாசனைப் பொருள்களைச் சேர்த்து உண்பர்; பொருமலை-பொருந்திய மலை, அதாவது நிலையான பருவதம் என்றபடி; கறி-மிளகு; போனகம் செய்யும்-சாப்பிடும்.

வெள்ளம்-விலங்குகளையாழ்த்திக் கொன்று, தேன் முதலிய மலைபடுபொருள்களையும் ஈர்த்துக் கொண்டு, போர் புரிகின்ற அலைகளைப் பெற்றுப் பாயும்; பொரும் அலை எனப் பிரியும்.

7. அரி-மூங்கில்; வேங்கை-1. வேங்கை மரம் 2. வேங்கைப் புலி; அத்தி-1. அத்தி மரம் 2. யானை; கோளரி-சிங்கம்; மா வையும் மாவை முறித்து-வண்டுகள் தங்கியுள்ள மாமரங்களை ஒடித்து; மேல்-பிறகு; மா வையும்-(தானிய லட்சுமி) திருமகள் வதியும்; மாவையும்-வயலையும்.

8. ஆடும் வாழை-அசைகின்ற வாழைமரம்; அஞ்சுகம்-கிளி; வரையாடு-ஒரு வகை ஆடு; வாழை-தவளை; அஞ்சு உகம்-அச்சுறுத்தும் பாம்பு; மீக் கோடு-உயர்ந்த சிகரம்; வாழ் ஐ குகன் -கோயில் கொண்ட தலைவனாகிய முருகன்; பூங்கோடு-அழகிய நீர்ப்பெருக்கு; வாழை-ஓசை.

9. ஈயும் பூவும் எருவையும் சாடிநெல்
வீயும் பூவும் எருவையு மேகனல்
காயும் பாலையும் வாரிக் ககனமேல்
காயும் பாலையில் வந்து கலந்ததே. 39

10. ஏரில் நின்றும் எதிர்த்திடு தாருவும்
ஏரில் நாறும் எதிர்ச்சரம் வாரியம்
மூரி வாழும் முகுந்தன் பதம்பணி
மூரி வாழ்ந்திடும் முல்லையில் வந்ததே. 40

(அறுசீர் விருத்தம்)

11. நன்மலர் மாலை வேய்ந்து
நானமும் புழுகும் பூசிப்
பன்மணி ஆரம் தாங்கிப்
பால்நுரைப் போர்வை போர்த்து
மன்னவன் போல வானி
வயங்கிய காஞ்சி நாகம்
பொன்னிசெண் பகம்ஐ யாறு
மருதத்தில் புகுந்த தன்றே. 41

12. பண்ணைகள் கால்வாய் கேணி
பரந்திடும் இலஞ்சி குன்றம்
கண்ணகன் றிடும்நீ ரோடை
கதித்திடும் சுனைகள் எல்லாம்
தண்ணுறும் நறுநீர் தேக்கித்
தனக்குநல் விவாகம் வந்த
பெண்ணென முந்நீர் தன்னில்
பிரியமாய்ச் சேர்ந்தது அன்றே. 42

---

9. ஈயும்-வண்டினையும்; எருவையும்-கழுகையும்; நெல்லீ-நெல்லிமரம், நீட்டல்; எருவை-கொறுக்கை; கனல்-கன்னல், கரும்பு; காய்-தேங்காய்; பாலையும்-பசு முதலியவற்றின் பாலையும்; ககனமேல்-ஆகாயத்தின் மீதும்; காயும்-தன் வெம்மையைப் பரப்புகின்ற; பாலை-பாலை நிலம்.

11. நானம்-கத்தூரி; பால் நுரைப் போர்வை-பாலின் நுரையைப் போன்ற மேலாடை; வானி-பவானி; காஞ்சி-நொய்யலாறு; நாகம்-அநுமநதி; பொன்னி-காவிரி; செண்பகம்-ஒர் ஆறு; ஐ ஆறு-ஐந்து நதிகள்.

12. இலஞ்சி-ஏரி; கண்ணகன்றிடும்-விசாலமான; கதித்திடும்-ஒலிக்கும்; தண்ணுறும்-குளிர்ந்த.

13. உழவர்கள் ஏறு பூட்டும்
ஓதையும் உழத்தி தங்கள்
கழனியில் குரவை ஆர்ப்பும்
கண்டிடும் சிறார்கள் ஆர்ப்பும்
பழமறை முழவின் ஆர்ப்பும்
பல்லவர் முளையின் ஆர்ப்பும்
மழைமுழக் குடன்ஈது எல்லாம்
மாறுகொண்டு ஒலித்த மாதோ. 43

(கலித்துறை)

14. மட்டு வாங்கிய மள்ளர்கள் மதகுநீர் தன்னைக்
கட்டு வார்கரை ஏறுவர் கோட்டினால் கவியை
இட்டு மாங்கனி இலாங்கலி பலாக்கனி இவ்ற்றைத்
தெட்டி வாங்குவர் உண்குவர் எருவிடும் சிலரே 44

(அறுசீர் விருத்தம்)

15. முப்பழச் சாறு பாய்ந்து
முதிர்ந்திடும் சாலி முன்நாள்
ஒப்பிலா மாயன் போலும்
ஓங்கிவான் நிமிர்ந்தே ஈன்று
தப்பிலாக் குலத்தி போலத்
தலையினைக் குனிந்து கல்வி
செப்புவார் உள்ளம் போலச்
சிவந்தன வயல்கள் எங்கும். 45

(கலித்துறை)

16. உற்ற சாலியை உன்னித மாகவே
அற்று வீழ்த்தி அடித்துக் குவித்தனர்
கற்ற வாணரும் கைதொழு வோரும்முன்
பற்று பற்றெனப் பாச்சும் அளவையே. 46

---

13. ஓதை-ஒலி; பல்லவர்-வில் வீரர்; பல்லவம்-அம்பு; முளை-[illegible] ஆகுபெயராக வில்லை உணர்த்திற்று.

14. மட்டு வாங்கிய-கள்ளுண்ட; கோட்டினால்-(வயலில் உள்ள) சங்கை எடுத்தெறிவதால்; கவியையிட்டு-குரங்குகளைக் கொண்டு; இலாங்கலி-தேங்காய்; தெட்டி-வஞ்சித்து; மள்ளர் சங்கை எறிந்தால் குரங்குகள் பழத்தைப் பறித்து எறியும்; இதனையே ஏமாற்றிப் பறித்தல் என்றார்.

15. சாலி-நெற்பயிர்; மாயன்-திருமால், உலகளந்ததைக் குறித்தது; ஈன்று-நெல் மணிகளைப் பெற்று; தப்பு இலா-குற்றமற்ற; குலத்தி-நல்ல குடியில் பிறந்தவள்.

16. அற்று-அறுத்து; பாச்சும்-பாய்ச்சும், தாராளமாகக் கொடுக்கும்.

17. பாச்சி னார்கள்தம் பங்குசெங் கோலினை
ஓச்சி னாரவற்கு உற்ற கடன்கொடுத்து
ஆச்சு நெல்லை அளந்துஅவர் சேரினில்
காச்சி இட்டனர் கால்வரை போலுமே. 47

18. தென்பு லத்தவர் தெய்வம் விருந்தினர்
தன்கு லத்தவர் தானும் புசித்துமே
நன்ப கல்கலைக் கேள்வியும் நாடிமா
இன்பம் பற்றுவர் இராமுழுது எங்குமே. 48

19. பூவின் நான்முகப் புங்கவன் அன்பினால்
ஓவி யத்துக்கு உயிர்கள்உண் டாக்கியே
காவில் வாழும் கருங்குயில் போலப்பொன்
பாவை மாரைப் படைத்தனன் நாளுமே. 49

20. அன்ன சத்திரம் ஆலயம் கோபுரம்
வன்ன சித்திர மண்டபம் மாமடம்
சொன்ன பட்டிநல் மண்டபம் சூளிகை
மன்னர் மண்டபம் மாளிகை மேலுமே. 50

(அறுசீர் விருத்தம்)

21. மலையெனக் கரிகள் ஏற்றம்
வயங்கிய புரவி ஏற்றம்
சிலையினது ஏற்றம் எல்லாம்
சிந்தையில் கருதி நல்நூல்
கலைகளும் கற்றார் ஈகை
கருதியே தம்பால் வந்தோர்க்கு
இலைஎனும் சொல்லை இந்நாட்
டினில்எவர் கற்க வல்லார். 51

---

17. பங்கு-களத்தில் விவசாயிகள் வழங்க வேண்டிய பாகம்; களமானியம்; செங்கோலினை ஓச்சினாரவர்-அரசு; உற்ற கடன்-வரி; ஆச்சு-மிகுந்த; சேரினில்-நெற்போராக; காச்சி-காய்ச்சி, உலர வைத்து; கால்வரை-இடமகன்ற மலை.

18. தென்புலத்தவர்-பிதிரர்கள்; கலைக்கேள்வி- கல்வி பற்றிக் கேட்டறிதல்; 'தென்புலத்தார்' எனத் தொடங்கும் குறளோடு ஒப்புமை.

19. பூவின் நான்முகப் புங்கவன்-தாமரையில் உள்ள பிரமன்; கா-சோலை.

20. சூளிகை-மாளிகையின் மேல் நிலா முற்றம்.

21. கரி-யானை; புரவி-குதிரை; சிலையினது ஏற்றம்-வில் வித்தையின் சிறப்பு.

22. நகர்ப்புறம் சாலை தோப்பு
நந்தன வனங்கள் கூவம்
பகற்பொழுது அகற்றும் பாடம்
பயில்இடம் தண்ணீர்ப் பந்தல்
இகத்தில்தே வால யங்கள்
இலஞ்சிகோ புரங்கள் எல்லாம்
சுகப்பட அன்னம் சொன்னம்
சொரியும்பூந் துறைநல் நாடு. 52

23. கொட்டுதல் மேள தாளம்
குவிப்பது வளர்செஞ் சாவி
கட்டுதல் கோட்டை யானை
கவனவாம் புரவி வெள்ளம்
அட்டுதல் கருப்பஞ் சாறே
அழித்தல்தேன் பலாப்ப ழங்கள்
கிட்டுதல் தான தன்மம்
கிளந்தபூந் துறைநல் நாடு. 53

24. ஆடுதல் தோகை மஞ்ஞை
அடிப்பது முரசம் மூன்றும்
வாடுதல் மின்னார் பக்கம்
வளர்ப்பது வேள்வி எல்லாம்
தேடுதல் இரப்போர் தம்மை
சிந்தனை தியானம் ஆகும்
கூடுதல் பெரியோர் தம்மைக்
கோதில்பூந் துறைநல் நாடு. 54

(கொச்சகக் கலிப்பா)

25. காடெல்லாம் சந்தனமே கடல்எல்லாம் சந்தனமே
நாடெல்லாம் தேமாவே நகர்எல்லாம் தேமாவே
கோடெல்லாம் அஞ்சுகமே குளம்எல்லாம் அஞ்சுகமே
வீடெல்லாம் திருமாதே மெய்ப்புகழ்பூந் துறைநாடே. 55

---

22. கூவம்-கிணறு; இலஞ்சி-தெப்பக்குளம், இங்கு கோயிற்குளம்; அன்னம்-உணவு; சொன்னம்-பொன், பொருளைக் குறித்தது.

23. கவனவாம் புரவி-வேகமாகப் பாய்ந்து செல்லும் குதிரை; அட்டுதல்-சமைத்தல்; கிளந்த-புலவர்களால் புகழப்பெற்ற.

24. தோகை மஞ்ஞை-ஆண் மயில்; மூன்று முரசமாவன-வெற்றி முரசு, கொடை முரசு, மணமுரசு; பக்கம்-இடை; கோது இல்-குற்றமற்ற.

25. சந்தனம்-1. சந்தனமரம் 2. சந்து அனம்-தூது செல்லற்குரிய அன்னப்பறவை; தேமா-1. இனிக்கும் மாம்பழத்தைத் தரும் மரம் 2. தேம் ஆ-இனிய இசை; கோடு-மரக்கிளை; அஞ்சுகம்-1. கிளி 2. அம் சுகம்-அழகிய தண்ணீர்; திருமாது-இலக்குமி, இங்கு செல்வவளம்.

26. காவெல்லாம் கரும்புகளே கழனிஎலாம் கரும்புகளே
மாவெல்லாம் சீனிகளே மடம்எல்லாம் சீனிகளே
பூவெல்லாம் சொல்லுகளே புவிஎல்லாம் சொல்லுகளே
நாவெல்லாம் மெய்உரையே நற்புகழ்ப்பூந் துறைநாடே. 56

(எண்சீர் விருத்தம்)

27. அரிஅயனும் தேடிஅறி யாத சோதி
அம்மையின்பால் இந்நாட்டில் அமர்ந்த தாலும்
தருஉலவும் இந்திரன்பொன் மாரி பெய்யத்
தழைத்தபுகழ்ச் சொக்கேசர் தயவு கூர்ந்து
திருமுகம்சே ரற்குஅருளிப் பாணற்கு அன்பாய்ச்
செம்பொன்மிகக் கொடுத்திடலால் சிறப்புஉண் டாகி
உரியகொங்கில் இருபத்து நாலு நாட்டுக்கு
உயர்ந்ததுநல் பூந்துறையாம் நாடு தானே. 57

(அறுசீர் விருத்தம்)

28. உன்னிய தெற்கில் காஞ்சி
உயர்நதி வடக்கு வானி
பொன்னிமா நதியே கீழ்பால்
புகன்றிடும் மேற்குத் திக்கில்
சென்னிமா மலையே ஆகும்
சிறக்கும்முப் பத்தி ரண்டுஊர்
மின்னும்மேல் கரையாய்க் கொண்டு
விளங்குபூந் துறைநல் நாடு. 58

(எண்சீர் விருத்தம்)

29. நற்றவம்சேர் பூந்துறைக்குப் பத்து வீடாம்
நளினம்மிகும் வெள்ளோடைக்கு இருநான்கு என்ப
கற்றவர்சூழ் நசையனூர்க்கு ஆறது ஆகும்
கதித்தஎழு மாதைக்கு நான்கது ஆகும்

---

26. கா-சோலை; கரும்புகள்-கரு அகத்தி; கரும்பு கள்-கரும்பின் தேன்; மா-மாங்கினி; சீனி-சுவையில் சர்க்கரை போன்றன; சீனி-இனிய செயல்கள்; சொல்லு களே-கூறப்படும் தேனே; சொல்லுகளே-புகழ் மொழிகளே.

27. சோதி-ஒளிமயமான இறைவர்; தரு உலவும்-கற்பக மரத்தை உடைய; திருமுகம்-கடிதம்; இது திருவிளையாடற் புராணம்.

28. உன்னிய-கருதப்படுகின்ற; காஞ்சி-நொய்யல்; வானி-பவானி ஆறு.

29. நளினம்-அழகு; எழுமாதை-எழுமாத்தூர்; வீடு-பூந்துறை நாட்டுச் சபையின் உறுப்பினர்கள்.

மற்றையதுஓர் நான்குசமஸ் தானம் ஆக
மனுநீதி தவறாமல் வளங்கள் ஓங்கிக்
கொற்றவர்மெச் சிடக்கொங்கில் நன்றாய் வாழும்
கோதுஇலா மேல்கரைப்பூந் துறைநல் நாடு. 59

30. மூவரையர் பசுபதியார்க்கு அன்பு கூர்ந்து
முந்தியகோ புரம்கட்ட முடிநில் லாமல்
காவலரும் மற்றவரும் பிடிமண் வைக்கக்
கலசம்நில்லாது இந்நாட்டைக் கருதித் தேடி
ஆவலுடன் இவர்கையால் கலசம் வைக்க
அதுநிற்க மூவர்முடி அன்பாய்ச் சூட்டிப்
பூவுலகில் கொங்கில்இரு பத்து நாலில்
பூந்துறைநாடு அதிகம்எனப் புகன்றிட் டாரே. 60

31. கற்றவர்சூழ் தமிழ்நாட்டில் நாலில் ஒன்று
கதித்திடுநல் கொங்கில்இரு பத்து நாலில்
உற்றிடும்நல் நாடுஒன்று கரைஇ ரண்டாம்
உயர்அரசர் பதிமூன்று வீடு நாலு
மற்றயஐந்து ஆறுநதி ஏழது ஆகும்
மன்னியஎட்டு ஒன்பதுபத்து இருபத்து ஏழாம்
சொற்றிடும்ஓர் பத்துஎனும்மா நகரம் சூழ்ந்த
துய்யதமிழ்ப் பூந்துறைநல் நாடு தானே. 61

(வேறு)

32. சந்திரசூ ரியர்வந்து சாளரத்தைக் காக்கும்
தழைத்தபொன்நாட்டு அரம்பையர்கள் சாபமதைத் தீர்க்கும்
மந்திகள்மாங் கனிபறித்துப் பந்தடித்து மகிழும்
வாழைபலாக் கனிச்சாறு வயலோடிப் பாயும்

---

30. மூஅரையர்-சேர, சோழ, பாண்டியர்; இந்நாடு என்றது பூந்துறை நாட்டை; இது திருக்கருவூர் ஆநிலைச் செய்தி.

31. நாலு-சேர, சோழ, பாண்டிய, கொங்கு மண்டலங்கள்; நாடு ஒன்று-முதலாவதாகிய பூந்துறை நாடு; கரை இரண்டு-மேல்கரை, கீழ்க்கரை; 8 +9+10 +27+10 = 64 மேல்கரைப் பூந்துறை நாட்டிற்குரிய ஊர்கள் 32, கீழ்க்கரைப் பூந்துறை நாட்டிற்குரிய ஊர்கள் 32 ஆக மொத்தம் பூந்துறை நாட்டு ஊர்கள் 64 ஆகும்.

32. சாளரம்-சன்னல்; அரம்பையர்-அரம்பை, ஊர்வசி, இவ்வரலாறு இப் புராணம் உமைதவச் சருக்கம் 20 -26 ஆம் பாடல்களில் காண்க; மந்தி-குரங்கு; கருநெல்லி-இம்மரம் நரை, திரையைப் போக்கி இளமையை மீட்டுத் தரவல்லது என்பர். வெண்சாரை-வெள்ளைச் சாரைப் பாம்பு; காணாச்சுனை-சென்னிமலையில் உள்ளது (இந்நூல் தேவர்கள் பூசைச் சருக்கம் 21); மாமாங்க தீர்த்தம்-மேற்படி சருக்கம் 4 ஆம் பாடல்; புத்தேள்-கடவுள், சென்னிமலை ஆண்டவர்.

சுந்தரம்சேர் கருநெல்லி வெண்சாரை காணாச்
சுனைகளுடன் மாமாங்கச் சுரர்தீர்த்தம் வாழும்
புந்திமிகும் சென்னிமலைப் புத்தேட்கும் அன்பாய்ப்
பூசத்தேர் நடத்திவைக்கும் பூந்துறைநல் நாடே. 62

33. மூவரசர் தான்கூடி முடிசூட்டும் வானி
முகுர்த்தம்இடக் கால்வாய்கள் முந்திவயல் பாயும்
பாவலர்கள் கவியதனால் பனிவிளக்கும் உமையாள்
பாவமதை விலக்கிஅர்த்த பாகமதைக் கொடுக்கும்
தேவர்கள்பொன் பூமாரி சிறப்புடனே பெய்யும்
செய்யதமிழ்க் குறுமுனிவன் செபதபங்கள் முடிக்கும்
பூவுலகில் மறையோர்க்கும் அதிதிகட்கும் அன்னம்
புகழ்ந்தளிக்கும் புண்ணியர்சூழ் பூந்துறைநல் நாடே. 63

34. சங்ககிரி மதிதகிரி அரவகிரி மகவைத்
தான்கொல்லி கிரிபெருமாள் கிரி அகத்ய கிரியும்
மங்கலகிரி ஊராட்சி கிரிதிண்டல் கிரியும்
வளர்கன்னி கிரிசெண்ப கக்கிரிவெண் கிரியும்
துங்கமிகும் கனககிரி நாககிரி பொதியை
சூழ்அணிஅ ரங்ககிரி ரத்னகிரி யுடனே
புங்கவர்சூழ் சென்னிகிரி மேலோங்கி வாழும்
புண்யகிரி பதினேழ்சூழ் பூந்துறைநல் நாடே. 64

35. ஆவலுடன் மறையோருக்கு அக்கிராரம் அளிக்கும்
அகிலாண்ட தீட்சிதருக்கு அடிமைகள்உண் டாக்கும்
பாவலர்கள் கவிபாடிப் பவிசுமிகப் படைக்கும்
பங்கயனும் நெடுமாலும் பகவனைஅர்ச் சிக்கும்
தேவர்களும் மகவானும் திண்பகையைச் செயிக்கும்
செங்கோல்மன் னவர்நீதி செழித்துமிக வாழும்
பூவையர்கள் கற்பதனால் திங்களின்மும் மாரி
பொழிந்துஅறங்கள் தான்வளர்க்கும் பூந்துறைநல் நாடே. 65

திருநாட்டுச் சருக்கம் முற்றிற்று.

---

33. பாவலர்கள்-திருஞானசம்பந்தர், சிறப்புப்பன்மை; கவி-'அவ்வினைக் கிவ்வினை' எனத் தொடங்கும் தேவாரப் பதிகம்; பனி-குளிர் சுரம்; பாவம்-இறைவனின் கண்களைப் பொத்திய குற்றம்; அர்த்தபாகம்-பாதிப் பங்கு, இவை திருச்செங்கோட்டு நிகழ்ச்சிகள்; குறுமுனிவன்-அகத்தியர்; அதிதி-புதிய விருந்தினர்.

34. புங்கவர்-தூயவர்.

35. அகரம்-அந்தணர் குடியிருப்பு; பவிசு-பெருமை; பங்கயன்-பிரமன்; பகவன்-சிவபெருமான்; மகவான்-இந்திரன்; திண்-வலிமை மிக்க; அகிலாண்ட தீட்சிதர்-குலகுருவாகிய பாசூர் அகிலாண்ட தீட்சிதர் மரபு, இப்போது திருவானைக்காவில் உள்ளனர்.

## 3. திருநகரச் சருக்கம்

### (கலி விருத்தம்)

1. சென்னி மாமலைச் செவ்வேள் பதத்தினைப்
பன்னி வாழ்த்திப் பவவினை போக்கியே
நன்னர் பூந்துறை நாட்டுஅணி கூறிப்பின்
மன்னும் அந்நகர் மாநலம் கூறுவாம். 66

### (அறுசீர் விருத்தம்)

2. மன்னிய கோட்டை பேட்டை
வளங்கொள்மா நகரம் ஓங்கும்
கன்னியர் ஆடல் பாடல்
கதித்தவாத் தியமு ழக்கம்
உன்னுபூ ரணகும் பங்கள்
உயர்ந்ததோ ரணம்மேற் கட்டு
கன்னல்சேர் வாழைக் கம்பம்
கட்டிமா மணங்கள் செய்வார். 67

3. நாட்டுதே வால யத்தில்
நல்லதுந் துபிமு ழக்கம்
வீட்டில்மா மணமு ழக்கம்
விரும்பிய அரசர் வீதி
காட்டும்நன் மதமாச் சேனை
கவனவாம் பரிமு ழக்கம்
ஈட்டிய பரவை போலென்று
இராப்பகல் முழங்கும் தானே. 68

---

1. பவ வினை-பிறப்பிற்குக் காரணமாகிய இருவினைகள்; நன்னர்-நன்மைமிக்க.

2. பேட்டை-சந்தை கூடுமிடம்; கதித்த-ஒலிமிகுந்த; மேற்கட்டு-பந்தல்கள்.

3. மத மா-மதம் பொழிகின்ற யானை; சேனை-காலாட்படையையும் தேர்களையும் கொள்க; ஈட்டிய-(பல பொருள்களைச்) சேர்த்து வைத்துள்ள; பரவை-கடல்.

(வேறு)

4. அதிதிவரக் கண்டுளழுந்து ஆசனம்உதவி சாட்டாங்கம்
அடியில் வீழ்ந்து
மதிமயங்காது அருச்சனையோடு அருக்கியம்ஆ சமனம்முதல்
மகிழ்வாய்ச் செய்து
புதியதயிர் நெய்பாலோடு அனம்அளித்து விருந்தினர்க்கும்
புகட்டிப் பின்பே
பதிமனைவி உண்பர்இந்தப் பதிக்குநிகர் பொன்னகரைப்
பகர லாமோ. 69

(வேறு)

5. அந்தணர் வீட்டில் வேதம்
அரசர்தம் வீட்டில் வீர
தந்திரம் வணிகர் வீட்டில்
தனங்கள்காத் திடுதல் ஏரை
முந்திய உழவர் வீட்டில்
மூவரும் முகமன் கூறி
வந்துகாத் திடுதல் இந்த
வளநகர்க்கு இணைஉண் டாமோ. 70

6. சொல்லிய மடவார் எல்லாம்
துணைமுலைக் கற்பைக் காப்பர்
நல்லியல் கவிஞர் எல்லாம்
நராதிபர் தன்னைக் காப்பர்
வில்லிசை மாக்கள் எல்லாம்
வீரத்தைக் காப்பர் மேலாய்ப்
பல்பல மாக்கள் இந்தப்
பதியினைக் காப்ப ரன்றே. 71

---

4. ஆசனம்-இருக்கை; சாட்டாங்கம்-ஆறு உடலுறுப்புகள் நிலந்தோய வீழ்ந்து வணங்குதல்; மதி மயங்காது-விருந்தினரைத் தம்போல் மனிதராகக் கருதாமல், தெய்வமாகவே கருதி என்றவாறு; அருக்கியம்-கை கழுவ நீர் அளித்தல்; ஆசமனம்-குடிநீர் வழங்குதல்; பதி-1. கணவன் 2. ஊர்.

5. தந்திரம்-அரசியல் நூற்பயிற்சி; தனங்கள்-செல்வங்கள்.

6. நல்லியல் கவிஞர்-இலக்கியம் கற்ற நல்ல புலவர்கள்; நராதிபர்-மன்னர், தலைவர் எனினுமாம்; வில்லிசை மாக்கள்-போர் வீரர்கள்; பல் இயல் மாக்கள்- பற்பல இயல்புகளை உடைய மாந்தர்கள் அனைவரும்.

7. அம்பரம் அளாவும் மாடம்
அதில்துகில் பதாகை ஆடல்
செம்பியன் வழுதி சேரன்
சேர்ந்தமுக் குலத்து உளோரில்
நிம்பமா லிகையான் கொண்ட
நிரைமுடி தருவேன் என்றே
உம்பர்கோன் தன்னைக் கையால்
உவந்துஅழைத் திடுதல் போலாம். 72

(எண்சீர் விருத்தம்)

8. பருப்பதம்போல் உயர்ந்தநகர் தன்னில் வாழும்
பண்புடையார் மணம்செய்யப் பரிவு கூர்ந்து
விருப்பமுடன் மணமுரசை அடிப்பச் சாகா
மிருகங்கள் மழைஎனவே விரைவில் ஓடித்
தருக்குலங்கள் தனிலேறி முகில்பார்த்து ஐயம்
தனைவிலக்கிச் சந்ததியார் மணம்என்று எண்ணி
உருக்கொடுமாங் கனிவாழைக் கனிபலவின் கனியும்
உடனளித்து நடனமிடும் உயர்ந்திடுபூந் துறையே. 73

(அறுசீர் விருத்தம்)

9. மேனிலை யதனில் ஊடல்
விழைந்திடும் மடவார் முத்தைக்
கானில்வெண் குன்றி என்னக்
கைகளால் உதிர்த்து வாரி
வானின்மேல் எறிய வண்டல்
மண்ணினில் பதிந்து வைகும்
பானிலா விண்மீன் என்பார்
பழங்கதை அறியார் தாமே. 74

---

7. அம்பரம்-ஆகாயம்; மாடமதில்-மாடங்களின் மேல்; துகில் பதாகை-துணிக்கொடி; செம்பியன்-சோழன்; வழுதி-பாண்டியன்; நிம்பமாலிகையான்-வேப்பந் தார்க்குரிய பாண்டியன்; முடி-கிரீடம்; உம்பர் கோன்-இந்திரன்.

8. பருப்பதம்-மலை; சாகா மிருகம்-குரங்கு; மழை-மேக முழக்கம்; தருக்குலங்கள்-மரக்கூட்டங்கள்; சந்ததியார்-தம்மரபில் தோன்றிய மனிதர்கள்; உருக்கொடு-உருக்கத்தோடு, பாசத்துடன்; டார்வின் கொள்கை இப்பாடலில் காணப்படுகிறது.

9. கானின்-காட்டில் விளையும்; வண்டல் மண்ணினில்-மேலுலகச் சேற்று நிலத்தில்; பால் நிலா; அறியார் தாம் நிலா, மீன் என்பர் என்க.

10. அந்தணர் அன்பால் செய்யும்
ஆகுதிப் புகையும் பாரில்
வந்தவர் தமக்குப் பாகம்
வழங்கிய புகையும் ஒன்றாய்
முந்திய மேகத் தோடே
முயங்கிவான் இவர்ந்து தேவர்
துந்துமி முழக்கம் போல்பொன்
சொரியும்பூந் துறையாம் மூதூர். 75

11. பரவுவெண் மணியில் சூடும்
பதக்கமாம் வயிரம் தன்னை
விரவிய மடவார் விண்ணின்
வீசவெண் மணியாம் நூலின்
வரவுமேல் அறியார் இந்த
வண்சுடர் தன்னைப் பாரில்
இரவியே என்பார் முன்நாள்
இந்நகர்ச் சிறப்பை ஓரார். 76

திருநகரச் சருக்கம் முற்றிற்று

## 4. புராண வரலாற்றுச் சருக்கம்

### (அறுசீர் விருத்தம்)

1. பற்பல வளங்கள் சூழும்
பனிமதி தவழும் சென்னி
வெற்பினில் மகிழ்ந்து வாழும்
வேலவர் பதத்தைப் போற்றி
கற்புடை மகளிர் வாழும்
கடிநகர் வளங்கள் கூறி
நற்றல புராணம் வந்த
நலத்தினைச் சிறிது சொல்வாம். 77

---

10 ஆகுதி-வேள்வியில் சொரியும் உணவுப் பொருள்; பாகம்-சமைத்த உணவு; முயங்கி-கலந்து; வான் இவர்ந்து-ஆகாயத்தில் ஏறி.

1. வளங்கள் சூழும் சென்னி வெற்பு, பனிமதி தவழும் சென்னி வெற்பு எனத் தனித்தனி இயையும்; பனிமதி-குளிர்ந்த சந்திரன்; கடிநகர்-காவற் சிறப்புடைய ஊர்.

(எண்சீர் விருத்தம்)

2. புவியதனில் நைமிசா ரணியம் தன்னில்
புண்ணியனாம் சூதமுனி புகலக் கேட்டுச்
சவுனகரும் உளம்மகிழ்ந்து கைகள் கூப்பிச்
சார்ந்தபன்னி ராண்டுபல வேள்வி செய்து
திவியம்எனும் தலம்ஓர்ஆ யிரத்தோர் எட்டில்
சிறந்ததுஅத்து விதத்தலம்யாது என்று கேட்க
செவியமுதம் போல்கொங்கு வளநல் நாட்டில்
சிறந்ததுநல் பூந்துறையாம் சிறப்பின் மிக்காய். 78

(அறுசீர் விருத்தம்)

3. காசிதிருக் காளத்தி காஞ்சிமது
ராபுரிநல் கயிலை ஆதி
பூசிக்கும் தலம்எல்லாம் இரண்டுஅல்லால்
ஒன்றுஇல்லை புகலக் கேளீர்
யோசிக்கும் போதுதொண்ணூற் றாறுதத்வம்
அதுஅன்றுஎன்று ஓர்ந்து தம்முள்
நேசிக்கும் பரம்போலச் சிவம்சத்தி
ஒன்றாகி நிற்கும் மூதூர். 79

(எண்சீர் விருத்தம்)

4. அதுஉண்டாம் காரணம்ஏது என்ன முன்நாள்
அயன்கயிலை தனக்குஏகி அன்பால் வேதத்
துதிசெய்ய பரமன்முக் கண்ணும் சோம
சூரியாக் கினிஎனவே சொல்லத் தேவி

---

2. நைமிசாரணியம்-வடநாட்டில் உள்ள ஒரு காடு; சூதமுனி-வியாசரின் சீடர், பல புராணங்களை உபதேசித்தவர்; சவுனகர்-ஒரு முனிவர்; பன்னிரண்டு வருடம் செய்யும் வேள்வி சத்திரயாகம் எனப்படும். இது பல சடங்குகளை உடையதாதலின் பன்மையில் கூறப்பட்டது. திவியம்-தெய்வீகமானது; அத்துவிதத் தலம்-தனக்கு நிகராக மற்றொன்று இல்லாத திருத்தலம்.

3. ஆதி-முதலிய; இரண்டு-இரண்டாவது; ஒன்று-முதல்; தத்வம் அது அன்று- பரம்பொருள் தத்துவங்கள் அல்ல, ஆனால் அவற்றைக் கடந்தது; தம்முள்-தம்உள்ளத்தே.

4. அது-அத்தலம்; அயன்-பிரமன்; பரமன்-சிவபிரான்; சோமசூரிய அக்கினி-சந்திரன், கதிரவன், தீ; தேவி-உமையம்மை; மத்தி-நடுவில் உள்ள நிலவுலகம்; சதுர்யுகங்கள்-கிருதம், துவாபரம், திரேதம், கலி ஆகிய நான்கு யுகங்களும் சேர்ந்த ஒரு பெருங்காலம்.

பதுமமலர்க் கரத்தால்கண் மூடச் சொர்க்கம்
பாதாளம் மத்திஇருள் பரந்து சூழ்ந்து
மதிமயங்கி அநேகசதுர் யுகங்கள் ஆகி
வானவர்மண் ணோர்முனிவர் மயங்கி னாரே. 80

5. முக்கண்ணால் வரும்பவங்கள் தீர்ப்ப தற்கு
முதல்காஞ்சி நகர்அண்ணா மலையாம் கொங்கில்
திக்கில்உயர் பூந்துறைநல் நாட்டில் மேவி
செழும்புனல்வெங் கனல்வெயிலால் சிறந்து வைகி
மிக்குஇருபத் தொராயிரம்வரு டந்த வங்கள்
மிகச்செய்து வரும்புவங்கள் விரவில் போக்கி
பக்கம்உறும் சிவசத்தி ஒன்றாய்க் கூடிப்
பலன்தரும்இப் பதிஎனவே பகரு மாமால். 81

6. முன்உரைத்த பதினெட்டுப் புராணம் தன்னில்
மொழிந்ததுஇஃது யாதுஎன்று முனிவர் கேட்கப்
பின்உரைப்பான் சிவபுரா ணங்கள் பத்தில்
பேசியநல் காந்தசமுத் திரத்தில் உண்டாம்
மன்னியநல் ஈசுரசங் கிதையில் தேவி
மகத்துவத்தில் உண்டான வன்மை எல்லாம்
கன்னல்உறும் பாகினில்கற் கண்டே போலக்
கழறினார் சூதர்சவு னகர்க்குத் தானே. 82

(கலி விருத்தம்)

7. கும்பமுனி காலமதின் கொள்கையினை ஓர்ந்தே
அம்புவியில் தேவர்மொழி யால்விளம்பு காதை
நம்பன்அருள் மேவுசிவ வாலையருக் காக
உம்பர்மகிழ் நல்தமிழி னால்உரைகள் செய்தார். 83

8. நற்பெரும் கதையைஅந் நாட்டில்வாழ் அரசர்கள்
சொற்பெரும் கவியினால் சொல்லுக என்றனர்
உற்றிடும் சருக்கம்ஓர் ஒருபது ஆக்கிநல்
பற்பல சந்தமாய்ப் பாரினில் செய்தனன். 84

புராண வரலாற்றுச் சருக்கம் முற்றிற்று

---

5. பவங்கள்-பாவம், மிகுதிபற்றிப் பன்மை.

6. சிவபுராணம் பத்தாவன-சைவம், மார்க்கண்டேயம், பவிஷியம், இலிங்கம், வராகம், காந்தம், வாமனம், கூர்மம், மச்சம். வாயாவியம்; காந்த சமுத்திரம்-காந்த புராணமாகிய கடல்; ஈசுர சங்கிதை-காந்த புராணத்தின் ஓர் உட்பிரிவு; கன்னம் உறும்-செவியால் துய்க்கப்படும்.

7. கும்பமுனி-அகத்தியர்; தேவர்மொழி- வடமொழி; நம்பன்-சிவபெருமான்.

8. அந்நாடு என்பது பூந்துறை நாட்டை.

## 5. உமை தவச் சருக்கம்

### (அறுசீர் விருத்தம்)

1. மைதவழ் சிராச லத்தோன்
மலர்ப்பதம் பணிந்து போற்றிச்
சைவமாம் புராணம் வந்த
சார்புஉரைத்து உமையாள் முன்நாள்
வையகத்து ஆசை மேவி
வளர்சங்க வனத்துள் வைகிச்
செய்தவம் தன்னைப் பற்றிச்
சிறிதுயான் செப்ப லுற்றேன். 85

2. தென்னவன் தனக்குச் சேயாய்த்
திங்களின் குலத்தில் தோன்றி
பன்னும்இவ் வுலகில் உள்ள
பலஉயிர் தம்மைப் பெற்ற
அன்னையாம் ஞானச் செல்வி
அழகுஉயர் கயிலை வெற்பில்
மன்னவ னுடனே கூடி
மகிழ்ந்துஇனிது இருக்கும் நாளில். 86

3. இந்திரன் முனிவோர் வானோர்
இலங்குகாந் தருவர் பூதர்
முந்திய அயன்மால் உள்ள
முப்பதின் மூவர் கூடி
நந்திஆக் கிணைக்குள் மேவி
நன்மலர் பதத்தில் தூவிப்
பந்தம்ஆம் தொடக்கு அறுத்த
பரமனை வணங்கிக் கண்டார். 87

4. நற்பெரும் சபையில் வாழும்
நான்முகப் புத்தேள் வேதச்
சொற்பெறு துதியால் மூன்று
சுடர்களும் தேவ தேவன்

---

1. மை-மேகம்.
2. தென்னவன்-பாண்டியன்; திங்கள்-சந்திரன்; தோன்றியது மீனாட்சியாக; மன்னவன்-சிவபிரான்.
3. ஆக்கினை-உத்தரவு; பந்தம்ஆம்-பாசமாகிய; தொடக்கு அறுத்த-கட்டை நீத்த, இயல்பாகவே பாசங்களினின்றும் நீங்கிய.
4. நயனம்-கண்கள்; வெற்புறும்-மலையரசன் மகளாகிய.

அற்புத நயனம் ஆம்என்று
அறைந்திட மலர்க்கை யாலே
வெற்புறும் உமையாள் மூட
இருண்டன உலகம் எல்லாம். 88

5. அங்கையால் கண்ணை மூடி
அன்புடன் வாங்கு நாளில்
செங்கண்மால் தனக்குப் பட்டம்
சிதைந்தன கோடி காலம்
பங்கயன் வானோர் அற்றுப்
பரிதியும் மழுங்கிச் சோரும்
அங்கண்மா ஞாலம் காக்கும்
அம்மையும் வெருவ லுற்றாள். 89

6. நம்பனால் சாபம் பெற்று
நகர்எனும் காஞ்சி மேவி
கம்பையாறு அதனில் மூழ்கிக்
கதித்துஇரு பத்தோர் ஆயி
ரம்பெறு வருடம் லிங்கம்
நன்மணல் ஒன்றுண் டாக்கிச்
செம்பொன்மென் மலரால் பூசை
செய்துஇனிது இருக்கும் நாளில். 90

7. மான்மழு கபாலம் சூலம்
மருவிய காள கண்டம்
தான்பணி பூட ணங்கள்
தழைத்தமுக் கண்ணர் ஆகி
ஆன்மிசை எழுந்து முன்நாள்
அம்மைசெய் இலிங்கத் துள்ளே
தேன்பொழி சடையான் தோன்றத்
திகைத்துஉளம் மகிழ்வ தானாள். 91

8. பங்கயன் மாலும் காணாப்
பரமனே போற்றி எந்தன்
அங்கையால் வரும்பா வங்கள்
அனைத்தையும் தீர்ப்பாய் என்று

---

5. பங்கயன்-பிரமன்; பரிதி-சூரியன்; வெருவல்-அஞ்சுதல்.

6. நகர் எனும்-நகர்களுள் சிறந்ததாகிய.

7. கபாலம்-மண்டையோடு; காளகண்டம்-நஞ்சு நிலைபெற்ற கழுத்து; பணி பூடணம்-பாம்பாகிய நகை; ஆன்-விடை.

செங்கையால் அருச்சித்து ஆச்
மனம்அருக் கியமும் செய்ய
நங்கைநீ இரண்டுஇ டத்தில்
நற்றவம் செய்வாய் என்றார். 92

9. கண்ணொரு மூன்றால் உண்டாம்
கடும்பவம் ஒன்று தீர்ந்தது
உண்மகிழ்ந்து அருணை மேவி
ஒளிவிடும் கனலில் வைகி
எண்ணிய வருடம் முன்போல்
எழில்சிவ பூசை செய்தால்
மண்ணின்மேல் வந்து தோன்றி
மகிழ்வரம் கொடுப்போம் என்றார். 93

(கலி விருத்தம்)

10. உரைத்து வானில் ஒளிந்தனர் வாரிசூழ்
தரைத்த லத்துஅரு ணாசலம் மேவியே
வரைக்கு லக்கொடி மாதுக னல்கண்முன்
உரைத்த காலம் உயர்தவம் எய்தினாள். 94

11. அன்ன பானம் அகற்றி இரேசகம்
மன்னு பூரகம் கும்பகம் ஏற்றியே
சொன்ன வாயுப்பி ராணாய மேசெய்து
என்னும் நிட்டையில் எங்கும் இருந்தனள். 95

12. சிற்ப ரானந்த தேசிகன் அன்புகூர்ந்து
அற்பு தத்தின் அருள்வடிவு ஆகியே
சொற்க மத்யபா தாளம் தொழுதிடக்
கற்சி லைக்குளே கண்ணுதல் மேவினார். 96

13. கண்டு மாது கனிந்துகை கூப்பிமேல்
கொண்டு சங்கர சம்பு குணாகர
கண்ட நீலக் கடவுள் அரஎனத்
தெண்டம் செய்தனள் தேவரும் வாழ்த்தவே. 97

---

9. அருணை-திருவண்ணாமலை.

10 . வாரி-கடல்; வரைக்குலக்கொடி-மலையரசன் மகள்.

11. அன்ன பானம்-உணவும் நீரும்; இரேசகம்-மூச்சை வெளியே விடுதல்; பூரகம்-மூச்சை உள்ளே இழுத்தல்; கும்பகம்-மூச்சடக்குதல்; பிராணாயாமம்-மூச்சுப் பயிற்சி; நிட்டை-மனம் ஒடுங்கிய நிலை.

13. குணாகர-நற்குணங்கள் வடிவானவரே.

14. ஒன்று கூறுவன் ஓங்கும்முன் நாளினில்
அன்று இராக்கதர் ஆனவா தாவியாம்
தன்து ணையினது ஆவி இவர்புவி
வென்று மானிடர் மெய்வதை கோறினார். 98

15. சம்பு மாரிசி தான்செய்யும் வேள்வியில்
அம்பு கார்முக ஆயுத பாணியாய்
செம்பொன் மேனி சிவப்பமுந் நூலுடன்
அம்பு விக்குள் அரசனும் தோன்றினான். 99

(எழுசீர் விருத்தம்)

16. தோன்றும்வா தாவி அரக்கனது ஆவி
தொலைத்துநல் உலகுஎலாம் புரக்கும்
வான்தவம் உடையோன் அக்கினிச் சேரன்
வாழ்ந்திடும் கொங்குநல் நாட்டில்
தான்தவம் பெறும்பூந் துறைஎனும் நகரில்
சங்கமா வனம்வயின் மேவி
ஆன்றமுன் உரைத்த இருபதி னோரா
யிரவரு டம்தவம் இயற்றும். 100

17. சொல்லிவான் மறைய வரைக்கொடி அநேகம்
சூழ்ந்திடும் சத்திக ளுடனே
கல்லுநா டதனைக் கருதியே வருந்திக்
கணேசனும் முன்செலக் கண்டே
அல்லல்அற் றிடஓர் நதியைஉண் டாக்குஎன்று
அறைந்திட அவ்விடத்து அமைக்கச்
சொல்லுவாள் அவிடம் தீர்த்தமும் கண்டு
சிந்தைஉ வந்துஅதில் படிந்தாள். 101

18. அம்மைஓர் வாக்கால் அமைந்திடும் கீழ்நீர்
அதுஒரு வாய்க்கிணறு ஆகும்
கம்பைமா நதியும் சோணமா நதியும்
கருதிய பலன்எலாம் கொடுக்கும்
செம்பியன் வழுதி சேரர்கோன் மூவர்
சிறந்தபொன் நாட்டினை எய்தி
உம்பர்கோன் நலமும் உறுவர்இத் தீர்த்தம்
உரைத்தனர் அநேகசத் திகளே. 102

---

15. கார்முகில்-வில்.

16. அக்கினிச் சேரன்-மூவேந்தர்களில் சேரரை அக்கினிவம்சம் எனல் இலக்கிய மரபு.

17. வரைக்கொடி-மலைமகள்; கல்லுநாடு-மலைநாடு; அவிடம்-அவ்விடம்.

18. உம்பர்கோன்-இந்திரன்.

19. அநேகசத் திகளும் அதில்படிந்து எழுந்தே
அம்மையும் இலிங்கம்ஒன்று அமைத்து
சிநேகமாம் கோட்டுப் பூவுடன் கொடிப்பூ
சிறந்தநீர்ப் பூநிலப் பூவும்
அனேகமாய் நின்று சாத்திஅட் டாங்கத்
தவத்தினை மருவுநா ளினில்அற்பு
அனேகரும் மகிழ்ந்து பதத்தினைப் போற்றிப்
பணிபுரிந் திருந்திடுங் காலை. 103

20. அழகுறும் காம வல்லிமேல் படர்ந்த
ஐந்தரு நீழலில் அமையும்
இளமைசேர் சசியோடு இந்திரன் மேவ
எய்துகந் திருவர்கின் னரர்கள்
பழமைமே னகையாம் ஊர்வசி ரம்பை
பகர்திலோத் தமைகளும் மேவி
நளினமாம் நடனம் நாட்டிய அவையில்
நடந்தனன் சுரர்குரு என்பான். 104

21. இவர்தமைக் கண்டே எழுந்திலாள் அரம்பை
இனியநல் உருவசி இவரை
உவரிசூழ் புவியில் கொங்குநாடு அதனில்
உயர்திருப் பூந்துறை நாட்டில்
நவமணி கொழிக்கும் முத்தமா நகரில்
நடம்பயில் முத்தியின் வயிற்றில்
அவம்உறும் இரட்டை வடிவதாய்ப் பிறஎன்று
அறைந்தனன் சாபமேல் அறைவான். 105

22. இப்படிச் சாபம் அறைந்தனன் மின்னாள்
எழுந்துகை கூப்பிமண் மீதில்
ஒப்பிலாத் தேவே சுரர்குரு எனநான்
உம்மையும் அறிந்திலை உலகில்

---

19. சிநேகம் ஆம்-விரும்பத்தக்க; அட்டாங்கத் தவம்-இயமம், நியமம் முதலிய உறுப்புக்களை உடைய யோக வழிபாடு; அற்பு அநேகர்-அன்புடைய பல சத்திகள்.

20. காமவல்லி-கற்பக மரத்தில் படரும் ஒரு கொடி; ஐந்தரு-அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்னும் தெய்வீக மரங்கள்; சசி-இந்திராணி; சுரர்குரு-வியாழன்.

21. உவரி-கடல்.

22. அப்பு அணி-கங்கையாகிய நீரைத் தரித்த.

இப்பிழை பொறுத்தே என்னையும் காப்பது
எதிகடன் கடன்என இயம்ப
அப்பணி சடையாற்கு அன்பனும் உவந்தே
அதிகநல் வரங்களும் கொடுத்தார். 106

23. உன்னுறை நகரில் தாசியாய்ப் பிறந்தே
உமையவள் பாகனைத் தொழுது
பன்னிரண்டு ஆண்டில் பாகசா தனனும்
பகர்அயி ராவதத்து ஏறி
அந்நகர் வதியப் பொன்மழை யுடனே
அலர்மழை யதனையும் சொரியும்
நன்மணம் பெறுவீர் பொன்னிநாடு அடைந்து
நலன்உறு பலன்களும் ஆமால். 107

24. குருமொழி யதனால் புவியில்நல் நகரில்
கோதிலாத் தாசியின் வயிற்றில்
இருஉருவாகிப் பிறந்துசில் நாளில்
யாவர்க்கும் இனியநல் லவராய்
ஒருதினந் தன்னில் முன்வினை யதனால்
உயர்சங்க வனமதில் எய்தி
அருமையாய் உமையாள் தவம்செயக் கண்டே
அநேகவந் தனைகள்செய் தனரால். 108

25. மண்ணினில் பிறந்த பெரும்பவம் தீர
வனிதையர் அநேகநல் இசையால்
பண்களைப் பாடி பரதநாட் டியங்கள்
பலபல விதத்துடன் புரிந்து
கண்களும் குளிரக் கருணைநீர் பெருகிக்
கையினால் அருக்கியம் அளித்துப்
பெண்களுக்கு அரசி எங்கள்ஆட் கொண்ட
பெருமையை யார்எடுத்து உரைப்பார். 109

26. இப்படி யனேக வந்தனை செய்தே
எழில்சங்க வனமதில் எய்தி
ஒப்புஇலா உமையாள் இருபதம் போற்றி
உவந்துஇனிது இருக்கும்நாள் தன்னில்

---

23. பாகசாதனன்-இந்திரன்; பொன்நகர்-தேவலோகம்.

24. குரு-வியாழன்; இரு உருவாகி-இரட்டைப் பெண்களாக.

26. வலாரி-இந்திரன்.

தப்புஇலாப் பிரமன் மாதவன் வலாரி
தழைத்திடும் தேவர்கள் எல்லாம்
அப்பணி சடையார் அருள்பெறும் கயிலைக்கு
அன்புடன் எழுந்துசென் றனரே. 110

27. கண்ணுதல் வாழும் கயிலைமா மலையைக்
கனிவுடன் கருத்தினில் போற்றி
அண்ணல்தன் பதத்தில் சென்றுவீழ்ந்து எழுந்தே
அங்கைகள் கூப்பிவாய் புதைத்து
பண்ணினால் பாடி சலந்தரா சூரன்
பகைதனைச் செயித்திடப் பாரில்
எண்ணிலா ஆயு தங்கொடுத் தருள்வீர்
என்றனர் நான்முகன் முதலோர். 111

(கலி விருத்தம்)

28. வெள்ளி மாமலை மீதில் அமர்ந்திடும்
வள்ள லார்திரு வாய்மலர்ந்து ஓர்உரை
விள்ளு வார்திரி லோகசஞ் சாரம்மேல்
கொள்ளு வேன்பகை தீர்ந்திடக் கூறுவேன். 112

29. நாத னார்அது கூறஎண் நாட்டத்து
வேத னார்முதல் விண்ணோர் அனைவரும்
பாதம் போற்றிப் பகைஅறுப் பாய்எனக்
காதல் மேவிக் கடிநகர் எய்தினார். 113

(வஞ்சி விருத்தம்)

30. உற்ற சூரன் உயர்வரம்
பெற்ற தால்சினம் பேணியே
நற்ற வத்தினர் யாரையும்
பற்றிக் காவல் படுத்துவான். 114

31. வள்ளு ரத்தொடு இறைச்சியும்
கள்ளும் சோறும் கைக்கொள்என்று
உள்ளம் வாடி உருகிடக்
கொள்ளு கொள்எனக் கூறுவார். 115

---

27. கண்ணுதல்-சிவபெருமான்.

28. வெள்ளிமலை-கயிலை; திரிலோக சஞ்சாரம்-மூன்று உலகங்களையும் சுற்றி வருதல்.

29. எண் நாட்டத்து-எட்டுக் கண்களை உடைய.

30. காவல் படுத்துவான்-சிறையில் அடைப்பான்.

31. வள்ளூரம்-பசுவின் இறைச்சி; இறைச்சி என்றது பிற மாமிச வகைகளை.

32. இந்த வாதைக்கு இமையவர்
சிந்தை வெந்து சிவந்திட
நந்தி ஏறிய நாதனார்
வந்து தோன்றினர் வையமே. 116

(அறுசீர் விருத்தம்)

33. வெள்ளிமா மலைபோல் மேனி
விளங்கிய விடையில் ஏறி
கள்ளறாக் கடுக்கை தும்பை
கடியசெஞ் சடையில் சூடும்
விள்ளுமான் மழுக பாலம்
விரைந்திடு சூலம் தாங்கி
உள்ளுவார் உள்ளம் மேவும்
உயர்சிவ லிங்கத்து உள்ளில். 117

(எண்சீர் விருத்தம்)

34. வரைக்கொடிமுன் தவம்செய்த அருமை கண்டு
மாதவத்தோர் தன்னுடனே வையம் தன்னில்
நிரைக்கொடியோன் தான்வருகக் கைகள் கூப்பி
நீண்டபணிப் பூணுடனே நிமலா போற்றி
விரைக்கமலப் பொகுட்டோனும் மாலும் காணா
வேதியனே கொன்றையணி விமலா போற்றி
உரைத்திடலும் உளம்உருகி விழிநீர் பெய்தே
உற்றவல்லிக் கொடியெனவே ஒத்து நின்றாள். 118

35. கங்கைஅணி செஞ்சடா மகுடா போற்றி
கண்ணுதலே திரிசூல கபாலா போற்றி
செங்கைமழு மான்தரித்த சிவனே போற்றி
சிற்பரா னந்தகுண தேவா போற்றி

---

32. இமையவர்-தேவர்.

33. விடை-காளை; கள் அறா-குறையாத தேனை உடைய; கடுக்கை-கொன்றை; கடிய-மணம் மிக்க; உள்ளுவார் உள்ளம் மேவும்-தியானிப்பவர் தம் மனத்தையே கோயிலாகக் கொள்ளும்.

34. வரைக்கொடி-மலைமகள்; நிரைக்கொடி-விடைக்கொடி; விரைக்கமலம்-மணம் மிக்க தாமரை; பொகுட்டோன்-தாமரைக் கொட்டையில் வீற்றிருக்கும் பிரமன்.

35. சிற்பர ஆனந்த குண தேவா-அறிவைக் கடந்தவனும், எல்லையற்ற இன்பத்தை இயல்பாகப் பெற்றவனுமாகிய கடவுள்.

பங்கயனும் நெடுமாலும் அருச்சித்து ஏத்தப்
பற்றுஅற்றோர் உளம்குடியாம் பரனே போற்றி
மங்களகல் யாணகுண மகிழ்நா போற்றி
மாதவத்தோர் போற்றுசிவ மணியே போற்றி. 119

36. நான்வேறாய் இருந்ததனால் பவங்கள் சூழ்ந்து
நாநிலத்தில் வெகுநாளாய்த் தவங்கள் செய்தேன்
தேன்துளிக்கும் கொன்றைஅணி சடையாய் செம்பொன்
சிலையைஒரு சிலைஆக்கும் தேவ தேவே
மான்தரிக்கும் கரதலனே வாம பாகா
மகிழ்ந்துஎனக்கு இப்போது வரம்தந் தாள்வாய்
மீன்குதிக்கும் தடம்பொய்கைக் கொங்கு நாட்டில்
விண்ணவர்பொன் பூமாரி விளங்கத் தானே. 120

(கலி விருத்தம்)

37. என்று கூறும் இறையவட்கு எண்ணிலாக்
கன்றை வாரிக் கனிஉகுத் தோன்தொழும்
மன்று ளாடி மகிழ்ந்துஇடப் பாகம்வாழ்
என்று நாமம் இயற்றினன் பாரினில். 121

38. பின்னும் கூறுவன் பேணிஇந் நாட்டினில்
பன்னு நாக பருப்பதத்து உச்சியில்
துன்னி வாழும் சுரர்நதி மீதினில்
பொன்னந் தாமரைப் போதிடம் வைகியே. 122

39. ஈண்டு முன்போல் இருபத்தோ ராயிரம்
ஆண்டு மேவித் தவமது செய்திட
வேண்டும் என்று விளம்பினன் மெய்த்தவப்
பாண்டி யன்எனப் படைத்த பெயரினான். 123

40. சொன்ன போதுஉமை சோர்ந்துளம் வாடியே
பன்ன காபர ணப்பக வான்தனை
உன்னி வாழ்த்தி உவந்துஅடி போற்றிடப்
பொன்னின் மாரிபூ மாரி பொழிந்ததே. 124

---

36. பவங்கள் சூழ்ந்து-பிறவிகளில் சிக்கி; செம்பொன் சிலை-பொன்மலை, இமயம்; சிலை ஆக்கும்-வில்லாக வளைக்கும்; வாம பாகம்-இடப்பாதி.

37. கன்றை வாரி கனி உகுத்தோன்-கண்ணன், திருமால்; மன்றுள் ஆடி-திரு அம்பலத்திலே கூத்தியற்றுபவர்.

38. நாக பருவதம்-திருச்செங்கோடு; துன்னி வாழும்- பொருந்தியுள்ள; சுரநதி-தெய்வீகமான ஆறு; போதிடம்-பூவில்.

40. பன்னக ஆபரண பகவான்-பாம்புகளை அணிகலன்களாக அணிந்த இறைவன்.

41. இந்தி ரன்அயன் மாலும் இமையவர்
கந்த மூலம் கருதிய தாபதர்
அந்த ரந்தனில் ஆடும் அரம்பையர்
முந்து தேவர்முப் பத்துமுக் கோடியும். 125

42. சென்று நாகச் சிலையினில் ஏறியே
நன்று பச்சிம நானில நாட்டமாய்க்
கன்று போலக் கதறிமைந் நீலமாம்
குன்று போலக் குலாவி இருந்தனள். 126

உமைதவச் சருக்கம் முற்றிற்று

## 6. சலந்தராசுரச் சருக்கம்

### (அறுசீர் விருத்தம்)

1. கார்பொழில் சிராச லத்தில்
கந்தனைப் பணிந்து போற்றி
ஏர்பெறும் உமையாள் முன்நாள்
இயற்றிய தவத்தைக் கூறி
பாரினில் தேவர் தம்மைப்
படுஞ்சிறை அமைத்தே ஆண்ட
சூர்தரு சலந்த ரன்தன்
செய்தியை உரைக்க லுற்றாம். 127

2. பொற்றொடி மடந்தை தன்பால்
பூப்புனைப் புணரி தன்னில்
சொற்றிடும் உவரே போல
துய்யசோ ணாட்டில் சேர்ந்த
இற்குடி யதனில் மேவும்
இராக்கதக் குலத்தில் தோன்றிச்
சற்குணம் சற்றும் இல்லாச்
சலந்தரா சூரன் என்பான். 128

---

41. கந்த மூலம் கருதிய-உணவாகக் கிழங்குகளையும் வேர்களையும் விரும்புகின்ற; தாபதர்-தவசிகள்; அந்தரம்- வானம்.

42. நாகச்சிலை-திருச்செங்கோடு; பச்சிம நானிலம்-மேற்குத் திசை; நாட்டமாய்-பார்த்துக் கொண்டு.

1. சிராசலம்-சென்னி மலை; ஏர்-அழகு; சூர்தரு-அச்சத்தைத் தரும்.

2. பொன்தொடி-தங்க வளையல்களை அணிந்த; பூப்பு- மாதவிடாய்; புணரி-கடல்; உவர்-உப்பு.

3. தேவரைச் சிறையில் வைத்தான்
சிந்தையில் தருமம் ஓரான்
மூவரைச் சற்றும் எண்ணான்
மூஉலகு ஒருங்கும் ஆள்வான்
பூவையர் தம்மைக் காணில்
புணர்ச்சியை மனதில் எண்ணும்
பாவபுண் ணியத்தை நோக்கான்
பரமசண் டாளன் என்பான். 129

(கலித்துறை)

4. காலி னால்கடல் ஏழையும் எற்றுவன் கையால்
கோல மாமழை ஏழையும் பிசைந்துறக் குடிப்பான்
சால ஏழ்மலை தம்மையும் பந்துஎடுத்து அடிப்பான்
பாலர் எண்மரைப் பிசைந்துமெய் நீறிடப் படுப்பான். 130

5. உலகில் யாவரும் அவன்கழல் ஏவலுக்கு உற்றார்
கொலையும் பொய்மையும் வஞ்சமும் அவனிடம் குடியாம்
அலகி லாப்பெரும் பவமதைப் புணர்ப்பவன் ஆனான்
கலையும் வேதமும் கற்றுமே சற்றுஅறிவு இல்லான். 131

6. தந்தை தாயரைக் குரவரைச் சதித்திடச் சலியான்
வந்த மாபெரும் பூதங்கள் ஐந்துமே வணங்கும்
சந்தி ராதித்தர் முனிவரும் கண்ணடை சாரார்
இந்த மாநிலத்து இடரினைத் தீர்த்திடும் எந்தாய். 132

7. என்று கூறிய இமையவர் தங்களுக்கு இசைந்து
நின்று கீழ்த்திசை நோக்கினார் தவங்களும் நிலைக்க
நன்று நன்றெனப் பூதங்கள் கைகொட்டி நடக்க
மன்று ளாடியும் வளைத்தனர் நகர்ப்புற மதிலை. 133

8. சுற்றும் நாளையில் சூரனுக்கு இடப்புறத் தோளும்
உற்ற கண்களும் துடித்தன மந்திரர்க்கு உரைப்ப
வெற்றி மேவிய வீரமும் செல்வமும் விருதும்
பற்று வாம்என மந்திரத் தலைவர்கள் அறைவார். 134

---

4. மழை-மேகம்; ஆல-அசையும்படி; பாலர்-எட்டுத் திக்குப் பாலகர்; படுப்பான்-துன்புறுத்துவான்.

5. பவமதை-பாவத்தை.

6. குரவர்-ஆசிரியர்.

8. மந்திரர்-மந்திராலோசனைக்கு உரிய அமைச்சர்.

(அறுசீர் விருத்தம்)

9. மந்திரத் தலைவர் யாரும்
வாயில்விட்டு அகலா முன்னம்
நந்தியைத் தூத னாக
நல்திரு முகமும் கொண்டு
வந்தனன் என்றான் சூரன்
மனந்திடுக் கிட்டு வாய்காந்து
எந்தஊர் உன்கோன் உன்பேர்
என்எனக் கயிலை நந்தி 135

10. திருமுகம் நீட்ட வாங்கிச்
சிந்தையில் உணர்ந்து சூரன்
மருமுக மாகிச் சேனை
மந்திரி தலைவர்க்கு ஓத
ஒருமுக மாகிச் சண்டைக்கு
உறுவதே கடன்என் றுன்னி
வருபவர்க்கு உரைத்தான் நந்தி
வந்ததும் வழுத்தல் உற்றான். 136

(எண்சீர் விருத்தம்)

11. விடைக்கொடியோன் கடைக்காலத்து இடியே போல
வெகுண்டுரண பேரிகையை விளங்கச் சாற்றிப்
படைத்துணைவ னாகவரு நந்திக்கு அந்நாள்
பட்டம்வைத்துக் குறள்பூதம் பசாசு சேனை
தடைப்படாது ஆயிரத்தை நூறு வெள்ளம்
தான்இரட்டி ஆயுதங்கள் சாற்றொ ணாது
குடைப்பிடித்த குறளினுக்குச் சமானம் ஆனோர்
கூறினதற்கு அதற்குஇரட்டி சூரன் சேனை. 137

(கலி விருத்தம்)

12. பிடிப்பார்பலைக் கடிப்பார்குடல் பீறிச்சிலர் செந்நீர்
குடிப்பார்தலை துணிப்பார்உடல் குறிப்பாயின குறட்பேய்
படிப்பார்பதம் பிடிப்பார்தடம் பறப்பார்சில சூரர்
துடிப்பார்சிலர் வெடிப்பார்சிலர் சுழல்சூரர்கள் பணிய 138

---

10. திருமுகம்-கடிதம்;

11. விடைக்கொடி-எருதுக்கொடி.

12. செந்நீர்-இரத்தம்; துணிப்பார்-வெட்டுவார்; பிடிப்பார்தடம்-தப்பும் வழியைப் பார்த்து ஓடுவார்.

13. குடல்அற்றனர் உடைஅற்றனர் குணம்அற்றனர் குறுகா
நடைஅற்றனர் படைஅற்றனர் நகைஅற்றனர் புவிமேல்
விடைஅற்றனர் அடைஅற்றனர் விருதுஅற்றனர் நிருதர்
குடைஅற்றனர் பகைஅற்றனர் குவியப்பிண மலையே. 139

14. கண்டான்சலந் தரனும்மனம் கலங்கிக்கடிது ஏகி
விண்டான்உயிர் மடவார்களும் விரவில்கா முறமேல்
கொண்டார்குழல் சரியக்குரல் கூகூஎனக் கூவிப்
பண்டாகிய எமகீதமும் படிப்பார்மனம் துடிப்பார். 140

### (அறுசீர் விருத்தம்)

15. சூரனும் கலங்கி வேறாய்ச்
சொல்புவி அதனில் வாழும்
வீரருக்கு எல்லாம் ஓலை
விவரமாய் எழுதி விட்டான்
சாரமும் தெரிந்து மற்றோர்
சகலரும் கூடிக் காலை
நேரமே வந்தார் சூரன்
நெடுமலை போல நின்றான். 141

16. வந்தனர் வணங்கச் சூரன்
மணிமதிள் கோயில் புக்கு
சந்தனம் பனிநீர் நானம்
தகுநறு மணங்கள் பூசி
சிந்துரத் திலகம் தீட்டி
சிறந்தநல் சட்டை இட்டு
சுந்தர மகுடம் ஆதி
துகளினன் மணிப்பூண் பூண்டு. 142

17. மாகதர் புகழ முன்றில்
மன்னுதேர் மிசைமேற் கொண்டு
சாகரம் எழுந்தது என்ன
சத்தம்இட்டு அவுணச் சேனை

---

13. குணம்-தமக்குரிய இயல்பு; விடை-ஊர்தி; அடை-காப்பு, கவசம்.

14. உயிர்மடவார்-உயிர் போன்ற மனைவியர்; எம கீதம்- ஒப்பாரிப் பாட்டு.

15. சாரம்-நிகழ்வுகளின் பொருள்.

16. பனிநீர்-பன்னீர்; நானம்-கஸ்தூரி.

17. மாகதர்-புகழ்ந்து பாடுவோர்; முன்றில்-அரண்மனை வாயிலில்; சாகரம்-கடல்; மாகம்-தேவலோகம்.

மாகமும் செவிடு கொள்ள
மலர்க்கரம் கொட்டி ஆர்ப்ப
வேகமாய்ப் போர்க்க ளத்தை
வெதுப்புற நோக்கி னானே. 143

18. செருக்குடன் எதிர்ந்து வீரத்
திறலுடன் எதிர்த்தான் தன்னை
மருக்கமழ் கொன்றை வேந்தன்
மனத்தினில் மதிப்புற் றுத்தம்
திருப்பதம் அதனால் வட்டம்
சேர்ந்துறத் தரையைக் கீறி
உருப்படும் திகிரி பார்த்துஇவ்
உணர்விலான் தலைபோக்கு என்றான். ,144

19. வானவர் அவுணர் மற்றை
மன்னுயிர் நடுக்கம் கொள்ள
மாநிலம் கீற வந்த
வலியசக் கரம்எ ழுந்து
மேநிமிர்ந்து எதிர்ந்த வன்தன்
வெம்சிரம் அரிந்துஎம் அண்ணல்
பூநிகர் திருக்க ரத்தில்
புகழ்உற அமர்ந்தது அன்றே. 145

20. வெந்திறல் சூரன் மாய
வேதியன் முதலோர் வேத
மந்திரம் அதனால் ஈசன்
மலர்ப்பதம் அதனைப் போற்றித்
தந்திடும் இறைவி முன்நாள்
தவம்செய்யும் வனத்தைச் சார்ந்து
துந்துமி முழக்கம் செய்யச்
சுரர்கள்பூ மாரி பெய்தார். 146

சலந்தராசுரச் சருக்கம் முற்றிற்று

---

18. வீரத்திறல்-வீரத்தால் விளைந்த வலிமை; மருக்கமழ்-மணம் நிறைந்த; உருப்படும்-வடிவம் பெற்றுள்ள; திகிரி-சக்கரம்.

19. மாநிலம்-பெருமை மிக்க தரை; நடுக்கம் கொள்ள வந்த வலிய சக்கரம் எழுந்து, நிமிர்ந்து, சிரம் அரிந்து, வந்து அமர்ந்திட்டது என்பது முடிபு.

20. வேதியன்-பிரமன்.

## 7. தேவர்கள் பூசைச் சருக்கம்

(அறுசீர் விருத்தம்)

1. பங்கயன் தன்னை முன்நாள்
படும்சிறை வைத்துஈர் ஆறு
செங்கையால் வேல்எ டுத்த
சிராசலன் தன்னை வாழ்த்திப்
புங்கவர் முதலா உள்ளோர்
புகழ்சலந் தரனைக் கொன்று
சங்கமா வனத்தில் வந்து
தான்செயும் பூசை சொல்வாம். 147

(எண்சீர் விருத்தம்)

2. மன்னியநல் விநாயகதீர்த் தத்தின் கீழ்பால்
மகிழ்இந்திர தீர்த்தம்சவ் வாது வீசும்
உன்னிதமாய் அதன்வடக்குப் பிரம தீர்த்தம்
உயர்சண்ப கத்தீர்த்தம் உயர்ந்தே வாழும்
இந்நிலத்தில் அதன்வடக்கு விட்ணு தீர்த்தம்
இயற்பெயரோ சக்கரதீர்த் தங்கள் என்பார்
பின்னுசிவ தீர்த்தம்அதன் வடபால் வைகும்
பிறங்கியதோர் நேர்மேற்குக் காளி தீர்த்தம். 148

3. இத்தலத்தின் தென்பாலில் லட்சுமி தீர்த்தம்
எழிற்பெயரோ தாமரைத்த டாகம் என்பர்
முத்திபெறும் வடகீழ்பால் சர்வ தீர்த்தம்
முயங்கும்இதின் கீழ்பாலில் பொன்னி தீர்த்தம்
சித்தமிகும் வடபாலில் வானி தீர்த்தம்
தென்திசையில் செண்பகநல் லாறு பாய
முத்தமிழ்சேர் அநுமநதி அதன்தென் பாலில்
முந்தியதோர் காஞ்சிநதி முழக்கம் தானே. 149

4. இப்படியாம் அநேகதீர்த் தங்கள் வாழும்
இதன்மேலாய் ஒருநதிஉண்டு இயம்பக் கேண்மோ
செப்பரிய சிரகிரிமா மாங்கத் தீர்த்தம்
சென்மநோய் தனைத்தீர்த்துச் சிறப்பு நல்கும்

---

1. பங்கயன்-பிரமன்.

3. காஞ்சிநதி-நொய்யலாறு.

4. சிரகிரி-சென்னிமலை; சிறப்பு-வீடுபேறு; அசுவம்-குதிரை.

ஒப்பில்அயி ராவதமாம் தீர்த்தம் ஒன்றுஉண்டு
உயர்அசுவத் தீர்த்தமென உரைப்பார் பின்னும்
மைக்குழலார் அதில்ஆடிக் கருப்ப முண்டாய்
வாழ்ந்திருப்பர் சிவலோகம் அடைவர் என்றே. 150

5. ஏகதந்தன் முதலாய தீர்த்தம் யாவும்
இமையவர்கள் தாம்ஆடி இதயம் கூர்ந்து
தாகமுடன் நீர்ப்பூவும் நிலப்பூ வோடு
தக்ககொடிப் பூகோட்டுப் பூவும் சாத்தி
சேகரச டாதரனே அந்த காரத்து
இருள்நீக்கும் பரஞ்சுடரே தேவா என்று
பாகசா தனன்முதலோர் பணிந்து போற்றிப்
பரமர்திரு உருஅதனைப் பார்க்க லுற்றார். 151

6. தும்புருநா ரதர்கீதம் பாடத் தேவர்
சொன்னபுட்ப மாரிபெய்ய அரம்பை மாதர்
தம்புருவைத் தான்மீட்ட நந்தி தேவர்
தாந்திமிதோம் எனவுமத் தளங்கள் தட்ட
கும்பமுனி முதலானோர் மறைகள் கூற
குறள்பூதம் குடைபிடிக்க அடியார் போற்ற
அம்புவியில் ஆனந்தக் கண்ணீர் பாய
அருள்கூத்து நடனமிட்டார் அனந்த கோடி. 152

7. இந்திரன்ஓர் ஆயிரம்கண் ணாலே பார்க்க
ஈசன்முடி மேல்தழும்பு கண்ப ரப்பு
சுந்தரம்சேர் நெற்றிதனில் நெருப்பு வாயில்
துலங்கியநல் சிரிப்பிடுப்பில் உடுப்ப தாகும்
கந்தமலர்க் கையில்வெற்பு பாம்பு வம்பு
கனகமணி மார்பில்என்பு உள்ளில் அன்பு
இந்தவித மேனியெல்லாம் பூவாய்த் தோன்ற
இமையவர்கோன் புட்பலிங்கம் எனப்பேர் செப்பும். 153

8. செப்பியபின் சிவன்பார்த்து மாயோன் தன்னை
செய்யஉந்தித் தாமரையின் செயலைக் கண்டே
இப்புவியில் தாமோத ராவென்று ஏத்த
இதயமலர் தனைஎடுத்து அர்ச்சித்து ஏத்தி

---

5. ஏகதந்தம்-விநாயக தீர்த்தம்; கோடு-கிளை; சேகரம்- முடிக்கப்படும்.
6. சொன்ன புட்ப மாரி-பொன்மழையும் பூமழையும்.
7. கண் பரப்பு-விழிகளாகிய பரந்த இடங்கள்; நெருப்பு- தீவிழி.
8. மாயோன்-திருமால்; சோடசம்-பதினாறு வகைப் பூசைகள்.

அப்புவினால் அருக்கியசோ டசமே மேலாம்
அநேகஉப சாரமது அன்பாய்ச் செய்து
ஒப்பில்லாத் தலத்தினில்அங் குற்று வாழும்
உண்மைதனை எவராலும் உரைக்கற் பாற்றோ. 154

9. சங்கவனம் தனில்மேவி வெயிலால் வாடி
சார்ந்தஇரு பத்துஓர்ஆ யிரம்ஆம் ஆண்டு
மங்கைமுன்நாள் செய்தவிம்பத் தூடே ஈசன்
மான்மழுக பாலமொடு சூலம் நாக
கங்கணமும் ஆலகண்டம் மூன்று நேத்ரம்
கயிலைமலை போல்இடபங் காளை ஏறி
இங்கிதமாய்த் தான்தோன்றி வந்த நாதர்
இவரென்றர்ச் சித்துஇமையோர் இயம்பி னாரே155

10. கங்கையணி கடவுளரைப் போற்றித் தெய்வக்
கம்மியனாம் விசுவன்அந்தக் காலம் தன்னில்
அங்கையினால் ஒருலிங்கம் அமைத்துப் பூசை
அர்ச்சனைநி வேத்தியமொடு தூப தீபம்
மங்களமாய்ச் செய்துவைத்தான் தென்பால் தன்னில்
வழுத்துதற்கே எவராலும் மார்க்கம் உண்டோ
கொங்குலகில் எப்போதும் தானே ஓங்கிக்
குறிவிளங்கும் என்றுரைத்தார் வானோர் கோமான். 156

11. மேல்பாலில் வாசவன்தன் கரிஒன்று ஏகி
விளங்குமதம் பொழிந்துநிழல் சுளித்து விம்மிக்
காலாலும் கோட்டாலும் நிலத்தைக் கீண்ட
கண்டதுநீர் வெள்ளோடை கமழ்பா லோடை
சேலோடு வரால்குதிக்கும் கழனி சூழும்
திவ்வியமா தவிநிழலில் சிமையா ளோடு
நால்வேதந் தாம்முழங்கச் சருவ லிங்க
நாயகராய் இருந்தவரைக் கண்டார் வானோர். 157

12. கைகூப்பிச் சருவலிங்க தேவா என்று
கழல்இணையைத் தான்போற்றக் கனிவு கூர்ந்து
தெய்வவல்லிக் கொம்பதுபோல் அசைந்து காலில்
சிலம்புபா டகங்கள்கலீர் என்னத் தேவர்

---

9. மங்கை-உமையம்மை; ஆலகண்டம்-நஞ்சு அமைந்த கழுத்து.

10. கம்மியன்-கம்மாளன்; விசுவன்-விசுவகர்மன்.

11. வாசவன்-இந்திரன்; கரி-யானை; நிழல் சுளித்து-தன் நிழலைத் தானே பகைத்தல் யானையின் இயல்பு; கோடு-தந்தம்; மாதவி-குருக்கத்திக் கொடி; சிமையாள்-மலைமகள்.

மையணியும் கண்ணாளை மகிழ்ந்து போற்றி
வளரும்பா டகவல்லி மாதே எங்கள்
தெய்வமென வந்துதித்தாய் தேவ தேவே
செழுஞ்சுடரே எனஉரைத்தார் தேவர் ஆனோர்.158

13. கொண்மூவேந்து அதன்வடக்கில் அசுரர் தன்னால்
குலைகுலைந்து புவிஅதனில் குறுகிப் பின்பு
எண்மூவேந் தரும்தொழுத லிங்கம் தன்னை
இணையடிகள் அர்ச்சித்து இதயம் கூர்ந்து
பண்மூவேந் தரும்தொழுது பாடி ஆடிப்
பங்கயப்பொன் சுனையதனில் படிந்து வாழ்த்தி
மண்மூவேந் தரும்தொழுது முத்தி பெற்ற
மன்னுநசை யாபுரியை வணங்கிக் கண்டார். 159

14. பன்னீராண்டு ஒன்பானும் வக்க ரித்துப்
பகர்வானம் பெய்யாதால் மூவர் கூடி
நன்னீராம் பங்கயப்பொன் தடாகம் மூழ்கி
நவில்மூவேந் தரைப்பணிந்து பாதம் போற்றித்
தென்னவனாம் தம்பெயரால் காளி பூசை
செய்வித்துப் பொன்நாட்டுத் தேவர் கோனை
மன்னியநல் வளைஎறிந்து முடியை வீழ்த்தி
மாநிலத்தில் பெற்றபுகழ் வழுத்தற் பாற்றோ. 160

15. பையரா அணிந்தசடைப் பரமன் றன்னைப்
பலதேவர் அருச்சித்துத் தென்பால் வைகி
மைதவழும் தாழையொடு பூகம் வாழை
மன்னுபடீ ரம்சூழ்ந்த வனத்தில் வைகி
தெய்வம்என வந்துஉதித்த சப்த மாதர்
செழுமுன்நாள் செய்தசிவ லிங்கந் தன்னைக்
கைகூப்பி எழுமாதைச் சத்தி யீசர்
கழல்இணையைப் பூசித்தார் கருத்தில் வானோர்161

16. அத்தலத்தின் பெருமைதனைச் சிறிது சொல்வேன்
அந்நாளில் எழுமாதர் அரங்கம் மேவி
பத்தியுடன் அம்மனையும் கழங்கும் பந்தும்
பதுமமலர்க் கைசேரப் பரிவால் ஆடி

---

14. ஒன்பான்-ஒன்பது கிரகங்களும், சூரியன், சந்திரன், இராகு, கேது ஆகிய நான்கு கோள்களுக்கும் தலைகீழ் கதி இல்லையேனும் தம் இயல்பு மாறுதல் உண்டாதலின் வக்கரித்து என்றார்; தேவர்கோன்-இந்திரன்.

15. மை தவழும் தாழை-வானளாவிய தென்னை மரம்; பூகம்- பாக்கு மரம்; படீரம்-சந்தனம்; எழுமாதை-எழுமாத்தூர்.

16. பதிகள்-கணவன்மார்; படி சாபம்-படிகின்ற வசைப்பயன்.

சித்தமகிழ்ந்து ஒருதீர்த்தம் மூழ்க முன்நாள்
செய்தவினைப் பயன்புருட ரூப மாகிப்
பத்தியுடன் எழுந்தோடப் பதிகள் கண்டு
படிசாபம் பிடிஎன்றார் பதைத்தார் மாதர். 162

17. மண்ணினில்நா வலந்தீவில் கொங்கில் வைகி
வளர்தாழை பூகம்சந் தனமே வாழை
விண்ணில்உயர் சோலைக்குள் பகுந்து வேத
விதிப்படியே ஒருலிங்கம் விரவில் செய்தே
எண்ணரிய ஆகமநூல் படியே பூசை
இருபத்தோ ராயிரவற் சரமும் செய்வீர்
அண்ணலும்அங்கு எழுந்துவரம் தாமே ஈவார்
அந்நாளில் பொன்னாட்டை அடைகு வீரே. 163

18. என்றவரால் செய்தலிங்கந் தன்னைப் பூசை
இயற்றுதற்குக் குறுமுனிவன் பின்பு செல்ல
நின்றிடும்வா தாவியும்வில் வலனும் வஞ்சம்
நினைத்துஒருவன் அசம்ஆகிச் சித்தன் ஆகி
குன்றுஅனையீர் அடியார்க்குப் பத்தன் அன்னம்
கொள்களன்றார் இவர்கொண்டார் குடலில் பாய்ந்தான்
வன்திறல்வாள் அரக்கன்என வயற்றில் கையை
வைத்திட்டார் இவர்இருவர் மாண்டார் பின்னும் 164

19. அகத்தியற்குப் பிரமகத்தி தோடம் தீர
அன்றுஇரவில் சிவன்சித்த ரூபம் ஆகி
சகத்தினில்ஏழ் மாதர்தொழும் லிங்கந் தன்னை
தான்பூசி எனஇசைத்தான் சாற்றக் கேண்மோ
பகற்பொழுதில் சோமவா ரத்தில் முக்கண்
பகவன்அடி தனைநினைந்தே உண்டி நீத்து
குகக்கடவுட்கு அபிடேகம் தூப தீபம்
கொழுங்கடப்ப மலர்சாத்தக் குறைகள் தீரும். 165

20. எனச்சொல்லக் குறுமுனிஎவ் இடமோ என்ன
எழில்அனந்தன் வாயுமுன்நாள் இயல்பொன் மேரில்
சினத்துஎழுந்து வந்துஅநும நதியின் தென்பால்
திகழ்கனகா சலம்ஒன்றுஉண்டு அதனின் கீழ்பால்

---

17. விரவில்-கலைத்திறமையுடன்; வற்சரம்-வருடம்; பொன்னாடு-விண்ணுலகு.

18. அசம்-ஆடு; குறுமுனி-அகத்தியர். சீரணித்தது ஆடாகிய வாதாவியை, மாண்டவன் வில்வலன்.

19. சோமவாரம்-திங்கட்கிழமை.

20. பனத்தொலையா-சொல்லி முடியாத; ஆரம்-சந்தனமரம்; எழுமாத்தூர் (கனகாசலம்) வரலாறு கூறப்படுகிறது.

பனத்தொ்லையா வகைவகையாய் மலரும் காயும்
பழங்களுமே நிறைந்தழகு பரவி அந்த
வனத்துஉயர்ந்த தாழையொடு பூகம் வாழை
மன்னியஆ ரம்பலவாய் வயங்கித் தோன்றும். 166

21. அம்மலையின் மகத்துவங்கள் சிறிது சொல்வேன்
அதில்காணாச் சுனைஒன்றுஉண்டு அதனில் மூழ்கி
செம்மலராம் கடப்பமலர் தன்னைச் சாத்தி
சிவகுருவாம் குமரவேள் தன்னைப் போற்றி
மும்மலங்கள் அகற்றிடும்சத் தீசர் தம்மை
மொய்குழற்க ணேசரைமற் றுள்ளோர் தம்மை
இம்மையில்செய் எனக்கனவு நீத்தான் வேதன்
எழில்புதல்வன் பூசைசெய்து பொதியம் சேர்ந்தான்167

22. கடையுகத்தில் சோணாட்டின் வணிகர் கோமான்
கைப்பொருள்கொண்டு உயர்மேற்கில் கடிதில் எய்தி
படைபயிற்றும் சேரமான் தனது நாட்டில்
பலவிலங்கால் மிளகுஏற்றிப் பரிவால் எய்தி
தடம்உயர்சந் தாசலம்போல் கனக வெற்பின்
தன்கீழ்பால் கோபுரமும் தன்னைக் கண்டான்
இடம்இதுஎன்று இறங்கினான் அவ்வ னத்தில்
இராமுழுதும் தூங்கினான் இயல்பைக் காணான். 168

23. அவ்வனத்தில் விடிந்தபின்பு பரமன் சித்தர்
ஆகியுமே வணிகேசன் அவனைக் கண்டே
எவ்விடம்நீர் இதுஎன்ன சித்தன் கேட்பான்
என்றெண்ணி பசியபயறு என்று சொன்னான்
கொவ்வைஇதழ் கன்னியர்சூழ் சோணாடு எய்தி
குவலயத்தில் மிளகுவிலை கூறிப் பொன்னை
ஒவ்வொருவர்க்கு ஆயிரமாய் வாங்கு மூட்டை
உவந்தளித்தான் பசியபயற்று உருவம் கண்டார். 169

24. கண்டவுடன் இவன்புரட்டன் என்று கூற
கண்ணீர்சோர்ந்து அவ்வனத்தில் கண்ட சித்தர்
பண்டையாய்ச் செய்தால்இப் பொன்னை எல்லாம்
பரிந்தளிப்பேன் உமக்குஎன்று பரிவாய் வேண்டித்

---

21. மும்மலம்-ஆணவம், கன்மம், மாயை.

22. கடையுகம்-கலியுகம்; பல விலங்கு-பொதி சுமக்கும் பிராணிகள்; இடம்இது-தங்குவதற்கு ஏற்ற இடம் இது.

24. புரட்டன்-பொய்யன்; பண்டையாய்-முன்பு போல; கறி-மிளகு.

தண்டனிட்டான் சாட்டாங்கம் செய்து பாரில்
திருவருளால் கறியாகச் சிரித்தெல் லோரும்
கண்டவுடன் பசும்பொன்னை அவற்கே நல்கி
கருதியசத் தீசர்எனக் கழறி னாரே. 170

25. முன்னுகத்தில் அயன்நெடுமால் சத்த மாதர்
முத்தியடைந்து அதின்பின்பு தேவர் பூசை
பின்னுகத்தில் குறுமுனிவர் பூசை பண்டு
பின்வணிகன் பூசித்துப் பெற்றான் பேறு
மன்னியநற் சோணாட்டில் கரிகால் சோழன்
மனம்உவந்து பூசித்த கதைபின் சொல்வேன்
இந்நிலத்தில் அனந்தயுகம் கண்ட தாம்என்று
எழில்சூதர் சவுனகருக்கு இயம்பி னாரே. 171

தேவர்கள் பூசைச் சருக்கம் முற்றிற்று

## 8. கரிகாற்சோழச் சருக்கம்

### (எண்சீர் விருத்தம்)

1. மன்னியநல் அகத்தியருக்கு உபதே சித்த
வள்ளல்சிரா சலக்கடவுள் மலர்த்தாள் தன்னை
உன்னிஅவர் ஆறுஎழுத்தை உச்ச ரித்தே
உயர்கடப்ப மலர்சாத்தி உவந்து போற்றிச்
செந்நெல்விளை சோணாட்டை விட்டு நீங்கிச்
செல்வம்மிகு கொங்கதனில் செனித்து வைகும்
மன்னவனாம் கரிகாலச் சோழன் பூசை
வழுத்தியவாறு இனிஎடுத்து வசனிப் போமால். 172

2. செருக்களத்தில் பொருதுவென்ற தனிமா தங்கம்
திரும்பிவரும் வழியில்ஒரு கோழிச் சேவல்
பெருக்கினொடு மயிர்சிலிர்த்துச் சிறக டித்துப்
பேராற்ற லுடனேகொக் கரித்துக் கொத்தத்

---

25. முன்உகம்-கிருதயுகம், முதல் பேரூழி; அதன் பின்பு என்றது துவாபரயுகமாகிய இரண்டாம் பேரூழியை; பின்உகம்- திரேதாயுகம் என்னும் மூன்றாம் பேரூழி; பண்டுபின்-பின் பண்டு என மாற்றுக, பிற்பட்ட கலியுகத்தில் முற்காலத்தே; அனந்த- கணக்கற்ற.

1. உன்னி-தியானித்து; வழுத்தியவாறு-முன் நூலில் கூறப்பட்டுள்ளபடி.

2. செருக்களம்-போர்க்களம்; தனி-ஒப்பற்ற; மாதங்கம்-யானை; தெரு குலவ-வீதிகளால் சிறந்து விளங்கும்படி; செயநகர்-வெற்றி பொருந்திய ஊர்.

தருக்குவதை நோக்கிஇது வீர சாரம்
தங்குதரை எனச்சோழன் தன்னுள் கொண்டு
தெருக்குலவ இயற்றியஅச் செயந கர்க்குத்
திறன்மிகுந்த கோழிஎனச் செப்பு வாரால். 173

3. இந்தவிறல் உறையூரில் பராந்த கப்பேர்
எழில்சோழன் அரசுபுரிந் திருக்கும் நாளில்
பந்தவினைப் படர்கொடியின் விதையைத் தீய்க்கும்
பழம்பதியாம் சிராமலைஈ சருக்குஅன் பாக
அந்திபகல் அறுகாலம் வாசப் பூவால்
அலங்கரித்துப் பூசிக்கும் அடிமை பூண்ட
நந்தல்அறு சாரமா முனிவன் என்பான்
நலந்திகழும் நந்தவனப் பணிபூண் டானே. 174

4. திருப்பள்ளித் தாமத்திற்கு உரிய தாகச்
செவ்வந்திச் செடிவளர்த்துப் பூப்ப றித்தே
உருக்கமுடன் தொடுத்துஇறைவன் மீது சாத்தி
உள்உருகி வழிபடுவான் இப்பூ தன்னை
மருக்குலவு குழல்அணிய அரசன் தேவி
மனத்தில்உன்ன ஏவலர்கள் கரவால் கொள்ள
அருட்குலவும் இறையவனுக்கு இலாமை யால்இவ்
அலர்த்திருடன் தனைக்காண அரும்த வத்தோன். 175

5. கங்குலினில் ஒளித்திருந்தான் சோழன் ஏவற்
காரர்வந்து மலர்திருடக் கண்ட தூயோன்
அங்கம்எலாம் நடுங்கநாக்கு உலரப் பொங்கி
அரசன்முனம் கொடுவிடுத்தான் அலரி னோடும்
சிங்கவணைச் சோழன்இதைக் கண்டும் ஒன்றும்
செய்யாம லேவாளா இருக்கக் கண்ட
புங்கவன்உள் நொந்துஅரசன் முகத்தைப் பார்த்துப்
போதமுடன் சிலவார்த்தை புகல்வ தானான். 176

---

3. பந்தவினை-வினைப்பந்தம் என மாற்றுக; சிராமலை-இன்றைய திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையுள் உள்ள தாயுமானவர் கோயில்; அடிமை பூண்ட-திருத்தொண்டேற்ற; நந்தல் அறு- கெடுதல் இல்லாத.

4. திருப்பள்ளித்தாமம்-இறைவனுக்குக் கட்டப்பெறும் மாலை; மருகுலவ-வாசனை உண்டாக; கரவால்-கள்ளத்தால்; அலர்-மலர்.

5. கங்குல்-இரவு; சிங்கஅணை-அரியாசனம்; புங்கவன்-தூயவன்; போதம்-ஞானம்.

6\. ஊரில்அங்கங்கு உளகள்ளர் தம்மை வேந்தன்
உளவுஅறிந்து பிடித்துஒறுப்பன் உறுதி யாக
பேருறுநின் ஏவலனே திருடக் கள்ளப்
பெறுபொருளை நீயடைந்தே களித்தா யானால்
சீருறுமோ நின்நாடு தேவ தேவன்
திருத்தாமத்து அருமலரை மனைவி யோடு
நாருறுகூந் தலில்சூட்டில் அம்மைக்கு இன்பம்
நல்கிடுமோ எனச்சொல்வான் உள்ளம் நைந்தே. 177

(வெண்டளைக் கலிப்பா)

7\. இந்தஉயிர் தன்னை யமன்கொடுபோய் இவ்வுடலும்
இந்தனப்பூ மெத்தையின்மேல் ஏற்றிஎரி உண்போது
சந்தனமும் செவ்வந்தி தன்மணமும் வீசிடுமோ
வந்தநெடும் சூறையல்லால் மற்றொன்றும் வீசாதே. 178

8\. என்றுஉரைக்கக் கோவும் இதயமதி கக்கலங்கிச்
சென்றெறிந்தான் அவ்வனத்தைச் சீர்முனிவன் தான்அறிந்து
குன்றனைய தோளான் குறுகும்உறை யூர்அழிந்து
பொன்றிடமண் மாரிபெய்யச் செபித்தான் கடுஞ்சாபம். 179

எண்சீர் விருத்தம்

9\. கம்மியனால் சூட்சமயில் செய்து தேவி
கணவனுமாய் நடத்திடவும் கடிதில் செல்லச்
செம்பியன்தன் தேவிதனை மயிலில் வைத்துத்
திருப்பமலை நாடதனில் சென்றாள் மேகம்
கம்மிமணல் மழைபொழிய உறையூர் மேவி
கதித்தஅரசு இழந்துசின்னாள் கண்ட பின்பு
பைம்பொன்முடி தாங்குதற்கு மகவோ இல்லை,
பருத்தமத யானைகையில் கடமே ஈந்தார். 180

10\. ஈந்தபின்பு கொங்கதனில் சென்று சோழன்
இனியமனை இறங்கியஊர் சூலூர் என்பார
வாய்ந்தமத யானைசென்னி மகற்குப் பட்டம்
வைப்பதற்கு முடிமீதில் கடநீ ராட்டி

---

6\. அம்மை-மறுமை.

7\. இந்தனப்பூ-விறகாகிய மலர்; சூறை-முடை நாற்றம்.

8\. கோ-அரசன்; பொன்றிட-அழிந்துபோக.

9\. சூட்சமயில்-மயில்பொறி; கடிது-விரைந்து; கடம்-மாலை.

10\. சென்னி-சோழன்.

நேர்ந்ததுதிக் கையதனால் எடுக்க மாட்டாது
ஏங்கிடஓர் கரியெடுத்துக் காலில் கீற
வாய்ந்தகரி கால்சோழன் எனப்பேர் வைத்து
மகிழ்ந்திட்டார் உலகமெல்லாம் புகழ்ந்திட் டாரே. 181

11. மன்னியபே ரூர்சென்று பாவம் போக்கும்
வளர்காஞ்சி நதியதனில் மகிழ்ந்து மூழ்கி
முன்வினையைத் தீர்க்கும்பட் டீசர் தம்மை
மொய்குழலைக் கணேசரையும் உவந்து போற்றி
உன்னியநற் கோபுரமும் சிவால யங்கள்
உடன்அமைத்துப் புக்கொளியூர் உவந்து போற்றி
நன்னயம்சேர் பூந்துறைக்கு வந்து மிக்க
நற்கரிய காளிபிர திட்டை செய்தான். 182

12. காவிரியின் கரையருகுஈ ரோடை தன்னில்
கதித்திடுலிங் கம்தனது பெயரால் செய்து
பூவிரியும் பொழில்சூழ்பூந் துறைக்குக் கீழ்பால்
புகல்கரிய மாதவன்என்று அமைத்துஏழ் மாதர்
மேவியசத் தீசருக்குக் கோபு ரங்கள்
மிகுகர்ப்பக் கிரகங்கள் விரைவில் செய்து
தாவியஎட்டு ஆனையின்றன் வலிவும் பெற்று
சார்ந்தஉறை யூர்க்கரசு தான்பெற் றானே. 183

13. பெற்றபின்பு கொங்கிலுறை பூந்து றைக்கண்
பெரியதிரு விழாமீன மாதந் தன்னில்
உற்றிடுநல் பூரணையாம் உத்தி ரத்தில்
உயர்கரிய காளிக்கும் அதுவே செய்தான்
வெற்றிபெறும் தாமோத ரர்க்குக் கன்னி
விளங்குஇரவி மதிகூடி மேவும் நாளில்
அற்புதமாய் நடத்திவைத்தான் தேவர் போற்ற
அவனியில்நால் வீட்டிற்குஅப் படியாம் தானே. 184

14. ஐந்துஎன்னும் வீட்டின்பேர் பிடாரி யூராம்
அதுகாளி பூசைசெய்த தலமது ஆகும்
சுந்தரம்சேர் சிவகிரியில் முருக வேட்குத்
துலங்கிடுதைப் பூசத்தேர் சுகமாய் ஓட்டி

---

11. பட்டீசர்-பேரூர்ச் சிவபெருமான்; புக்கொளியூர்- அவிநாசி.

12. ஈரோடு காவிரிக்கரையில் சோழீசர் திருக்கோயில் உள்ளது; ஏழ்மாதர் மேவிய சத்தீசர்-எழுமாத்தூர் சிவன்.

13. மீன மாதம்-பங்குனி; பூரணை-பவுர்ணமி; உத்திரம்-பங்குனி உத்தரம்; கன்னி-புரட்டாசி; இரவி மதிகூடி மேவுநாள்- அமாவாசை.

நந்திமிசை ஏறிவரும் நாத னார்க்கும்
நற்சத்தி விநாயகர்க்கும் நடத்தி வைத்துக்
கந்தமலர்ப் பிராட்டிக்கு நடத்தி வைத்துக்
கனிவுற்றான் கரிகாலச் சோழன் தானே. 185

15. மன்னியவூர் ஒன்பதுமங் கலமே நான்கு
மலர்ஓடை மூன்றுஉயர் பள்ளி ரண்டு
நன்னயம்சேர் நிலையிரண்டு துறையும் ரண்டு
நலமான பாடிஒன்று தொழுவே ஒன்று
முன்னியநல் மலைஒன்று வாச்சி ஒன்று
மொழிகின்ற தல்ஒன்று குறிச்சி ஒன்று
இந்நிலத்தில் விளக்குஒன்று கம்ஒன்று ஆகும்
இனியவிளக் கேத்தியும்முப் பத்தி ரண்டே. 186

16. ஒப்பில்லாச் சோணாட்டுக் கரிகால் சோழன்
உயர்கொங்கில் பிறந்துதவழ்ந்து உயர்ந்த பின்பு
செப்பரிய மலைநாட்டில் சிவால யங்கள்
செய்துவ்வத்தே உறையூரைச் சேர்ந்தான் மன்னோ
முப்பவமும் அகன்றிடநல் முத்தி ஓங்க
முறைமைபெறு நைமிசா ரணியம் தன்னில்
தப்பில்லா சவுனகா தியர்க்கு முன்நாள்
சாற்றினார் சூதரிசி சகத்தில் தானே. 187

கரிகாற்சோழச் சருக்கம் முற்றிற்று

## 9. சேரமான் வரலாற்றுச் சருக்கம்

### (கலி விருத்தம்)

1. உற்ற நான்முகத் தோனைச் சிறையிட்டுப்
பெற்ற தந்தைக்கு உபதேசம் பேசிடும்
வெற்றி மேவும் சிராசல வேலர்தாள்
பற்றிச் சேரன் பழங்கதை ஓதுவாம். 188

2. துன்னு கீழ்க்கடல் சொற்றிடும் மேற்கடல்
மன்னும் வேங்கடம் வாழ்கன்னி மாநதி
செந்நெல் மேவும் செழுந்தமிழ்த் தேசம்ஆய்
மன்னர் மூவர்அர சாட்சி வாழுநாள். 189

---

14. பிடாரி கோயில்கொண்ட ஊர் பிடாரியூர் ஆயிற்று; பிடாரி-திருப்பிராட்டி அம்மன்.

15. இவை ஊர்ப்பெயர்களின் ஈற்றுக் குறிப்பு; முன்னுரை காண்க.

16. மலை நாடு என்றது கொங்கு நாட்டை; முப்பவம்-ஆணவம் கன்மம் மாயை ஆகிய மூன்று மலங்கள்.

3. உற்ற சோழர்க்கு உறையூரு காணியாம்
பெற்ற சேரர்க்குப் பேசிடும் வஞ்சியூர்
கொற்ற பாண்டியர் கோதில் மதுரையூர்
வெற்றி மேவ விளம்பிடும் ஆட்சியே. 190

4. ஆட்சி தன்னில்முன் அந்தணர் ஆதியாய்
காட்சி மேவுநல் காஞ்சி புரத்தில்வாழ்
தாட்சி இல்லாத் தலைவர்கள் நால்வரை
மீட்சி யாக விரைந்துஅழைத் தார்களே. 191

5. வந்த பின்பு வழுதிதன் நாட்டிலும்
சிந்தை மேவுநல் சேரநல் நாட்டிலும்
கொந்து உலாவும் குளிர்புனல் நாட்டிலும்
பந்த மாய்முப் பதிக்குடி வைத்தனர். 192

6. கொங்கு வேந்தன் குறித்துஒரு நால்வரை
பங்கம்இல் லாப்பதி நாலில் வைத்தனன்
செங்கண் மால்விடைத் தேசிகன் நற்பதம்
கங்கை பாலகர் கைதொழுது ஏத்தினார். 193

7. உள்ளம் அன்புகொண்டு ஓங்கும்நல் பூந்துறை
வள்ளல் நண்ணா வுடையான் வயிற்றினில்
தெள்ளு செந்தமிழ்ச் செல்வம் வளர்த்திடும்
பிள்ளை யோர்பதி னொன்றினைப் பெற்றனன். 194

8. உற்ற வெள்ளோடு உலகுடை யானுக்குப்
பெற்ற பிள்ளை நவம்எனப் பேசுவர்
சுற்றம் மேவிடும் சொல்நசை யாபுரி
பற்றும் வீரற்குப் பாலர் எழுவராம். 195

9. நீதி மேவி நிலைத்துஎழு மாதையில்
ஆதி நல்லகு மாருடை யானுக்குச்
சோதி யான சுடர்மணி போலவே
ஓது பாலகர் ஐவரை உற்றனன். 196

(எண் சீர் விருத்தம்)

10. முன்னுமையாள் செய்தவம்முப் பத்தி ரண்டுஊர்
முறைதவறாது அவ்வூரில் குடியே வைத்தார்
மன்னுசிவன் அருளால்கொங்கு ஆறு நான்கு
வளநாடும் பரவினதால் மரபில் குன்றூர்

---

5. கொந்து உலாவும்-தானியக்கதிர் நிறைந்த; புனல் நாடு- சோழநாடு.

6. செங்கண் மால்விடை-சிவந்த கண்களை உடைய பெரிய காளையை ஊர்தியாக உடைய; கங்கை பாலகர்-வேளாளர்.

8. நவம்-ஒன்பது.

தன்னில்விறன் மிண்டர்எனப் பிறந்தார் கொங்கில்
சார்ந்ததிரு வாரூர்ஆம் தன்னைச் சார்ந்து
நன்னயம்சேர் சுந்தரற்குத் தூது சென்ற
நாதனிருக் கும்கோவில் நணுகிச் சார்ந்தார். 197

11. கோவிலுக்குள் அசுத்தமாய் வந்த பேரைக்
கொல்வன்இந்தக் கோடாலி தன்னால் என்றே
ஆவலுடன் விடியாமுன் எழுந்து தானம்
அனுட்டானம் செபதவங்கள் அன்பாய்ச் செய்தும்
ஆவலுடன் காத்திருக்கும் ஒருநாள் தன்னில்
அருள்விடங்கன் சுந்தரரை வாளன்று ஓத
நாவலவன் பரவைசமே தகனாய் வாயில்
நறியதாம் பூலமொடு நடந்து வந்தார். 198

12. வந்தவரைத் தான்பார்த்துக் கோபம் கொண்டு
வன்படையைக் கரத்தெடுக்க வரவை ஓர்ந்து
சுந்தரம்சேர் சினகரத்தின் உள்ளே சென்று
சொற்றிடுக பாடபந் தனங்கள் செய்ய
இந்தஊர் மிதிப்பதுஇல்லை என்றே மிண்டர்
எழுந்திருந்து புறநகரில் எய்திப் பின்பு
வந்ததுற வோர்க்குஅன்னம் கொடுத்துப் பார்த்து
மகிழ்ந்திருந்தார் வெகுநாளாய் வளங்கத் தானே. 199

13. சேரனது பட்டம்தொண் ணூற்று ஆறில்
செழித்திடுநல் உலாச்சேரன் காலந் தன்னில்
பாரினில்மெய்ப் பசியாலும் நோயி னாலும்
பதைபதைத்துச் சிலசிலவர் ஓடிப் போனார்
சீருலவும் யாழ்ப்பாணர் எனும்வா ணற்குச்
செய்யசொக்கே சக்கடவுள் சொற்குஅன் பாய
வீரமதி மவிபுரிசை எனப்பாச் செப்ப
வேண்டியபொன் வழங்கினனாம் விரவில் வேந்தன்200

---

11. தானம்-நீராடுதல்; அனுட்டானம்-தனி மனிதன் செய்ய வேண்டிய நாள் வழிபாடு; விடங்கர்-திருவாரூர் இறைவர்; நறிய-மணம் நிறைந்த.

12. வரவை-மேலே நடைபெற உள்ளதை, வர உள்ள ஆபத்தை; சுந்தரம் சேர்-அழகிய; சினகரம்-கோயில்; கபாட பந்தனம்- கதவடைத்தல்.

13. உலாச்சேரன்-திருக்கயிலாய ஞான உலாவைப் பாடிய சேரமான் பெருமாள்; சொக்கேசன்-மதுரைச் சுந்தரேசர்; பா- திருமுகப்பாசுர மாகிய ஆசிரியப்பா.

14. அந்நாளில் சுந்தரனார் செய்தி கேட்டும்
அரியஉலாச் சேரன்பொன் ஆரூர் சென்று
வன்மீக நாதரையும் தியாக நாதர்
மலர்ப்பதமும் போற்றிசெய்து மகிழ்வுற்று எய்தித்
தென்னால சுந்தரரைத் தெரிசித்து ஏத்திச்
செழும்பரவை நாச்சியரைத் தெண்டஞ் செய்தே
உன்னுமனத் துற்றதெல்லாம் அவர்பால் பேசி
உயர்கொங்கு நாடுஎல்லாம் சிவனுக்கு ஈந்தான். 201

15. மன்னுசிவ மறையோர்கள் தம்மைக் கூவி
மண்மகள்புத் திரர்எங்கே என்று கேட்க
உன்னுபசி யால்உலர்ந்து நோயால் வாடி
உறுதொண்டை நாட்டினிலே உற்றார் என்றார்
பின்னுநண்ணா வுடையான்றன் மரபில் வந்து
பெயர்பெற்ற வேலப்ப நயினான் என்போன்
குன்றனைய தோளினான் சேரன் தன்னைக்
கூடினான் திருவஞ்சைக் களமே சென்றார். 202

16. ஆங்குஅவற்குத் தன்முடியைச் சூடிப் பின்னர்
அவனியெலாம் ஒருகுடைக்கீழ் அரசாய் ஆளப்
பாங்குடைய பொன்வணத்தந் தாதி பாடிப்
பரிவுபெறும் உலாஒன்று பண்பாய்ச் செய்து
வேங்கைஅதழ் உடையான்மேல் சிந்தை வைத்து
வெள்ளிவெற்பைத் தான்எண்ணி இருக்கும் நாளில்
தேங்குபுகழ்ச் சுந்தரற்கு விமானம் யானை
சென்றிடமேல் ஏறிவஞ்சைக் களமே சென்றான். 203

17. சென்றவர்சே ரர்க்குஉரைக்கப் பரிக்கு விஞ்சை
செப்பிஅவர் மேல்ஏறிச் சென்றார் வெள்ளிக்
குன்றுடையார் தமக்குரைப்பேன் என்றுஆர் ஊரர்
கூறிடலும் சம்மதித்தான் கொண்கன் என்போன்
வென்றிபெறும் சினகரத்துள் புகுந்துஅந் தாதி
மேலும்உலா இவைஇரண்டும் விளம்பி வந்தார்
என்றுஅழைத்துக் கைலையரங் கேற்றி வைத்தார்
இறைவன்அவை ஆருரன் இன்பம் பெற்றான். 204

---

14. உன்னும்-தான் நினைக்கும்.

15. மண்மகள் புத்திரர்-வேளாளர். கேரளதேச வரலாறு என்னும் நூலிலும் இது சுட்டப்படுகிறது.

16. அவனி-உலகம்; வேங்கை அதழ் உடையான்-புலித்தோல் உடுத்த சிவபிரான்; வெள்ளி வெற்பு-கயிலாயம்.

17. பரி-குதிரை; விஞ்சை-மந்திரம், ஈண்டுத் திருவைந்தெழுத்து; ஆர்ஊரர்-சுந்தரர்.

18. சிவன்மறையோர் சிலநாளில் கொங்கு நாட்டைச்
செப்புகங்கை குலவைசியர் கட்கே ஈந்தார்
பவம்உடைய பீசங்கு நாட்டுக் கள்ளர்
பகலும்இராக் கொள்ளைசெய்யச் சென்னி என்போன்
தவம்உடைய சேரராச் சியத்தில் கள்ளர்
தமைப்பிடிப்போர்க்கு ஊர்க்காணி ஈவேன் என்றே
உவகையுடன் பறைஅறைய வடதே சத்தில்
உயர்வேட்டு வக்குலத்தின் நால்வர் வந்தார். 205

19. மன்னுபொத்தி ராயன்உயர் புசபலமா ராயன்
வள்ளல்ரா யன்கொங்கு ராயன் என்போன்
இந்நிலத்தில் பீசங்கி நாட்டுக் கள்ளர்
இவரையெல்லாம் குறும்படக்கி இனிதாய்ச் செய்யப்
பொன்னிவள நாடன்இவர் நாலு பேர்க்கும்
புகழாரு நாடெனப்பொன் முடியைச் சூட்டி
இந்நிலத்தில் அரசாட்சி செய்யும் நாளில்
இனிதுற்றான் குலோத்துங்கச் சோழன் என்போன் 206

20. கம்பர்எனும் நாவலனால் சாபம் பெற்றுக்
கதித்தகுலோத் துங்கன்அரசு அழிந்த காலை
வெம்புபிணம் சுடும்புலையன் அரசன் ஆகி
மேதினியில் ஆதொண்டைச் சோழன் என்றே
அம்புவியில் பெயர்வைத்துச் சோழ நாடும்
அழகுதொண்டை வளநாடும் ஆளுங் காலை
உம்பர்தொழும் கங்கைகுலப் பெண்ணை வேட்டல்
உறுவதற்கு நினைத்திட்டான் உறுவது ஓரான். 207

21. வல்லைக்கா ளத்திதன்பால் பெண்ணைக் கேட்டு
மனம்மகிழ்ந்து புலையர்எலாம் வந்த காலை
கல்லுக்கால் பந்தல்இட்டுப் பெண்நாய் ஒன்றைக்
கட்டிவைத்துத் தென்திசையைக் கருதி வந்தார்
சொல்லரிய விசுவகர்மன் பொறியை வீழ்த்தித்
தொலைத்தனன்ஓர் புலைச்சிதப்பி சுதனைப் பெற்று
கொல்லுதல்செய் வேளாளர் தம்மைக் கொல்லக்
குவலயத்தில் மூன்றுபட்டம் குறிப்பாய் ஆண்டான் 208

---

20. மேதினி-உலகம்; கங்கை குலம்-வேளாண் மரபு; உறுவது ஓரான்-விளைவை எண்ணமாட்டாதவன்.

21. சுதன்-மகன்; குவலயம்-உலகம்.

22. ஆண்டிடுநல் காலத்தில் கவுண்டர் என்றே
அப்பெயரைத் தாம்படைத்தார் கொங்கில் வந்தோர்
வேண்டியபேர் திசைப்பெயரும் பாசைப் பேரும்
மெய்த்தொழிலின் பெயரினையும் விரும்பிக் கொண்டு
பூண்டிடுநல் சாதகன்மம் நாம கன்மம்
புரிஅன்னப் பிராசனம்நல் சவுளம் பூண்நூல்
காண்டிடுநல் கலியாண மதனில் செய்யக்
கருதிடுபா ணிக்கிரகணம் கற்பித் தாரே. 209

23. மன்னியபோ தாயனரும் வந்து கங்கை
மரபாளர் தமக்குஉரிய மார்க்கம் ஆறு
பன்னியநல் சவுசம்பல் கொம்பு தானம்
பகரும்அநுட் டானமோடு பூசை உண்டி
இந்நிலத்தில் பஞ்சவுசற் காலந் தன்னில்
எழுந்துகணே சரைத்தொழுது இறையை வாழ்த்தி
நன்னயமாய் லலாடசூ னியம்இல் லாமல்
நன்மார்க்கம் தனைச்செய்ய நவிற்றி னாரே. 210

24. இதுவெல்லாம் வெள்ளாளர் தமக்கே ஆகும்
இல்லறத்தின் செய்கைதமக்கு இனிய எல்லாம்
நிதிதேடித் தென்புலத்தார் தெய்வ தானம்
நீண்டஒக்கல் குடும்பமொடு அரசர் கீதம்
துதிபரவு சேரன்வர லாறும் சொல்லிச்
சுத்தமுடன் மனமகிழ்ந்து தூய்நீ ராடி
நதியுலவு நைமிசா ரணியம் தன்னில்
நற்சூதர் சவுனகற்கு நவிற்றி னாரே. 211

சேரமான் வரலாற்றுச் சருக்கம் முற்றிற்று

---

22. சாதகன்மம்-பிறந்த குழந்தைக்குச் சாதகம் எழுதுதல்; நாமகன்மம்-பெயர் சூட்டுதல்; அன்னப் பிராசனம்-சோறு ஊட்டுதல்; சவுளம்-முடி இறக்குதல்; பாணிக்கிரகணம்-மணமக்கள் கைப்பிடித்தல்; கற்பித் தார்-சடங்குகளை உண்டாக்கினார்.

23. போதாயனர்-இல்லறத்தார் ஒழுக்கங்களை வரையறுத்துக் கிராஹ்ய சூத்திரம் செய்த முனிவர்; மார்க்கம் ஆறு-அறு தொழில்; பல், கொம்பு, தானம் நல் சவுசம் என இயையும், பல் துலக்குதல், மயிர் களைதல், நீராடுதல் போன்ற நல்ல தூய்மைகள், இவற்றைக் கைப்பிடிக்கும் முறைகள்; லலாட சூனியம்-பாழ் நெற்றி, சமயச் சின்னம் இல்லாத நுதல்.

24. தெய்வ தானம்-கோயில்.

## 10. குமாரச் சருக்கம்

### (கலி விருத்தம்)

1. பன்னு நாள்இப் பதிதனில் மேவிய
மன்னும் வேலர் மலர்ப்பதம் போற்றியே
செந்நெல் வேலி செழித்திடும் பூந்துறை
தன்னில் குமார சருக்கமது ஓதுவாம். 212

2. உற்ற வெள்ளிப் பொருப்பினில் ஓங்கியே
பெற்றம் ஊரும் பிரான்பதம் போற்றியே
நற்ற வத்தினில் நண்ணிப் பிரணவம்
சற்றுள னக்குஇனி சாற்றுதல் வேண்டுமால். 213

3. என்று காரணி ஏத்தலும் ஐமுகன்
வென்றி வேலனை விட்டுவா என்றனர்
துன்று நீலச் சுடர்மணிக் காதினில்
ஒன்றித் தேவன் உபதேசம் வைத்தனர். 214

4. வைத்த போதில் வண்டுரு வாகிய
சத்தி வேலவர் சார்ந்திடுங் கூந்தலில்
சித்த மேவ செயம்பெறக் கற்றனர்
அத்தன் பாரில் அறைந்தனன் சாபமே. 215

5. சொல்லும் கிரேத திரேத துவாபரம்
நல்ல பின்உகம் நான்கினில் வேதியர்
வெல்லும் சத்திரி யர்வசி யர்குலம்
வல்ல சூத்திர னாக வருகவே. 216

### (எண்சீர் விருத்தம்)

6. செய்யசிவன் சாபத்தால் முருக வேளும்
செழித்திடுநல் சோணாட்டில் காழி யூரில்
வையம்எலாம் துதித்திடும்நன் மறையோர் ஆன
மன்னுசிவ பாதரிடம் வந்து தோன்றி

---

1. மன்னும்-நிலைபெற்ற புகழ் உடைய. வேலியில் செந்நெல் விளைவது வளம் குறித்தது.

2. வெள்ளிப்பொருப்பு-இமயம்; பெற்றம்-காளை; ஊரும்- செலுத்தும்; பிரணவம்-ஓங்காரத்தின் உண்மைப் பொருள்.

3. காரணி-பார்வதி; ஐமுகன்-சிவபெருமான்.

4. பார்-உலகம்; அறைந்தனன்- சொன்னான்.

5. பின் உகம்-கலியுகம்.

6. காழி-சீர்காழி; வையகம்-உலகம்; சமண்-சமணர் செய்த தீமையைச் சுட்டியது; என்பை-எலும்பை, பூம்பாவை வரலாறு.

சைவம்எலாம் தழைத்தோங்க ஞானம் பெற்ற
சம்பந்தர் ஆகஅவ தாரம் செய்து
வையகத்தில் சமண்அழித்தே என்னைப் பெண்ணாய்
வரச்செய்தார் முதல்யுகத்தில் வானோர் போற்ற. 217

7. மற்றைஇரண் டாம்யுகத்தில் பாண்டி நாட்டில்
வரும்உக்ர குமாரபாண் டியனாய் வந்து
வெற்றிமிகும் இந்திரனை மகுடம் வீழ்த்து
வேள்வளைசெண்டு ஆயுதமும் விருதும் பெற்றுக்
கொற்றம்மிகும் கடல்சுவற வேலும் விட்டுக்
குறித்தமக மேருவினைச் செண்டால் தாக்கி
பற்றிவரும் பூமிஒரு குடைக்கீழ் ஆண்டு
பன்னுதடா தகைக்குமொரு பாலன் ஆனான். 218

8. பசிவிலகும் துவாபரத்தில் சோழ நாட்டில்
பண்புமிகும் சுவாமிமலை என்னும் ஊரில்
வசியர்குலம் தனில்சுவாமி நாதன் என்றே
மாநிலத்தில் பெயர்படைத்து வந்து தோன்றி
நிசியதனில் கன்னியர்கள் விதவை மாதர்
நேர்கண்டு தரிசித்தால் கருப்ப முற்றுக்
கசிவுறநன் மகவுஉயிர்க்கச் செய்து சித்துக்
காட்டிவிளை யாடினார் உலகில் தானே. 219

9. கடையுகத்தில் கொங்குவள நாட்டில் முத்தூர்க்கு
அதிபதியாம் கங்கைகுலன் மணிய கோத்ரன்
திடம்உயரும் செல்லப்பன் உதரந் தன்னில்
சென்றுமனை தன்வயற்றில் செல்லும் திங்கள்
கடலமுதம் போல்குறிகள் பத்தும் சென்று
காதலித்துப் பிறந்ததினால் செல்வம் ஓங்கி
நடைபயிலச் செல்வக்கு மாரரர் என்றே
நாட்டினார் உலகிலுள்ளோர் நாடுங் காலை. 220

---

7. பன்னு-போற்றப்பெறும்; தடாதகை-மீனாட்சியம்மை.

8. நிசி-இரவு; கசிவுஉற-அன்பால் நெகிழுமாறு.

9. உதரம்-வயிறு, தந்தையின் கருப்பத்தே இரண்டு மாதம் இருந்து பிறகே தாயின் கருப்பத்தை ஓர் உயிர் அடையும் என்பது நூற்கொள்கை; காதல்-அன்பு.

10. சொல்லரிய இக்குக்குக் கணுவாம் போலத்
தோராத கலைக்கியானம் ஆறு சாத்திரம்
நல்லபதி னெண்புரா ணங்கள் கற்று
நன்மார்க்கம் தனைஎழுதி நவிலும் விஞ்சை
அல்லல்அறத் தான்கற்றுச் சித்தன் ஆகி
அவனியோர் தங்களுக்கு வியாதி தீர்த்துச்
செல்வமிகும் செஞ்சேரி தன்னைச் சார்ந்து
செழித்திடக்கோ வர்த்தனங்கள் செய்த பின்னை. 221

11. வான்மறந்து கோவுக்கும் இரைஇல் லாமல்
வளருகரி கிரிதன்னில் மாடு மேய்த்து
கான்திரணம் புனல்சருகும் இல்லா தாலே
கதித்துவளர் பூந்துறைக்குக் கங்குல் சென்றார்
ஆன்மிகுந்து புல்மேய்ந்து விரதி ஆகி
அடுத்திடும்நல் சேமூரில் அன்பாய் வந்து
ஊன்துறந்தே அமுதுஅருந்தி உலகில் வாழ்வோர்க்கு
உறும்வினைகள் தாம்தீர்த்து ஓங்கி வாழ்நாள். 222

12. ஓங்கியதென் னிலையதனில் கொங்கு ராயன்
உயர்கோட்டை கட்டிஅர சாளும் நாளில்
தாங்குஅரிய முடியரசர் எவர்வந் தாலும்
தான்வணங்கா முடிஎன்றே தகும்பேர் பெற்று
வீங்கியநல் முலைமடவார் கூட்டம் மேவி
விருந்தோடு களியாடல் மிகவே செய்து
தேங்கியநல் நாட்டுக்குஒத் ததுவே என்று
சிலகாலம் அரசாண்டான் செங்கோல் வேந்தன். 223

13. அவனிஎல்லாம் ஒருகுடைக்கீழ் அரசே ஆள்வான்
ஆனபிர வுடதேவ ராயர் நாளில்
தவம்உடைய சொல்லில்அரிச் சந்திரன் என்னும்
தகைமைஉளான் ஒருவேந்துஅப் பாச்சி என்போன்
குவலயத்தில் வரக்காணாது இருக்க நாட்டுக்கு
ஒத்ததுவே கொங்குரா யனுக்கும் என்ன
அவன்உரைக்கச் சிலகன்னப் பறையர் தம்மை
அழைத்திட்டான் ஒருகுடைக்கீழ் ஆளும் நாளில். 224

14. கூட்டமிட்டுப் படையெடுத்துக் கொங்கு ராயன்
குறித்துடுநல் கோட்டைக்குள் கன்னம் இட்டு
நாட்டினிலே முக்குறுணி தாவி கொண்டு
நல்வாசற் பிள்ளையரை நலமாக் கொண்டார்

10. இக்கு- கரும்பு; தோராத-தோல்வியடையாத; மார்க்கம் எழுதி என்றது உபதேச மார்க்கத்தால் யந்திரத்தை எழுதி; விஞ்சை-மந்திர சித்தி.

11. கோவுக்கும்-பசுக்களுக்கும்; கங்குல்-இரவில்; விரதி-தவசி.

13. பிரவுட தேவராயர்-விசயநகர அரசர்.

தாட்டிகமாய்க் குப்பன்என்போன் கன்ன வாசல்
தனில்இறந்தான் வீரசுவர்க்கந் தானே மேவ
நாட்டினிலே செல்வக்கு மார ருக்கு
நான்அடிமை ஆகினேன் என்றான் வீரன். 225

15. அந்நாள்தொட்டு எந்நாளும் அடிமை ஆகி
யான்செல்வக் குமாரனுக்கும் அன்பு கூர்ந்தும்
இந்நிலத்தில் மானிடர்க்கும் வியாதி தீர்த்தும்
ஏழ்பிறவித் துன்பமதை எளிதில் நீக்கிக்
கன்னமிடும் கடுங்கோலைத் தானே கொண்டு
காசினியெல் லாம்இனிதாய்க் காத்து வாழும்
செந்நெல்மிகும் பூந்துறைநல் சேமூர் தன்னில்
செயம்பெற்றான் எந்நாளும் நயம்பெற் றானே. 226

(வாழி)

16. திங்கள்மும் மாரிபெய்க அறங்கள் ஓங்க
செழித்திடும்நல் உயிர்கள்எலாம் சிறப்பாய் வாழ்க
கங்கைகுலத் தோர்வசியர் அரசர் முன்னோர்
காசினியில் மற்றுள்ளோர் கதித்து வாழ்க
பங்கயனும் நெடுமாலும் ஈசன் வாழ்க
பாரினில்இப் புராணமது பண்பாய் வாழ்க
இங்கிதமாய் இதைப்படிப்போர் கேட்போர் ஏட்டில்
எழுதிவைப்போர் எந்நாளும் இனிது வாழ்க. 227

17. சொல்லும் சென்னி மலைவேலர் சோபனம்
துய்ய வள்ளிதெய் வானையும் சோபனம்
நல்ல புட்ப வனநாதர் சோபனம்
நாரி பாகம் பிரியாதாள் சோபனம்
கல்லைப் பெண்ணாகச் செய்ததா மோதரக்
கடவுள் சோபனம் நான்முகன் சோபனம்
செல்வ மேழி செழித்திடும் பூந்துறை
சேர்ந்த முப்பத் திரண்டுஊரும் சோபனம். 228

குமாரச் சருக்கம் முற்றிற்று

பூந்துறைப் புராணம் முற்றுப்பெற்றது.

---

16. கங்கை குலத்தோர்-வேளாளர்; காசினி-உலகம்.

17. சோபனம்-வாழ்த்து; நாரி-பார்வதி; அகலிகை வரலாறு கூறப்பெறுகிறது